# மாணிக்க தீபம்



திருமதி பேரம்பலம் மாணிக்கம் (E.S.P)

காரைநகர், வாரிவளவு

## நினைவுமலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யா/ காரைநகர், வாரிவளவைப் பிறப்பிடமாகவும்,
யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பை வதிவிடமாக கொண்டவரும்,
இறைபதம் அடைந்தவருமாகிய, சைவ வேளாண்குலத்தவர்

# அமரர் திருமதி. பேரம்பலம் மாணிக்கம் (E.S.P)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# மாணிக்க தீபம்

## 31 ம் நாள் நினைவு மலர்

24. 08. 2012


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# சமர்ப்பணம்

எங்களது இல்லத்தின் அரசியாய்

குடும்பத்தை ஆட்சி செய்யும் குலவிளக்காய்

கணவனை பேணிக்காக்கும் பெண்மணியாய்

பிள்ளைகளை சீராட்டி, பாராட்டி, கண்டித்து

வளர்க்கும் பண்பினளாய்

உற்றார் உறவினருடன் உளமார இன்சொற் பேசி

இன்முகத்துடன் வரவேற்கும் மாமணியாக

வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து

இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட

எங்கள் குடும்ப குலவிளக்கு பேரம்பலம் மாணிக்கம் (E.S.P)

அவர்களின் திருக்கமலப்பாதங்களிற்கு

காணிக்கையாக சமர்ப்பிக்கின்றோம்.

இங்ஙனம்,

மக்கள், மருமக்கள்,

பேரப்பிள்ளைகள்,

பூட்டப்பிள்ளைகள்

கணேச பவனம்

வாரிவளவு, காரைநகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் இராமு சண்முகம் பேரம்பலம் E. S. P

1926 - 1993

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் மாணிக்கம் பேரம்பலம்

1932 – 2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னை மடியில்
16-02-1932

இறைவன் அடியில்
25-07-2012

## திதி வெண்பா

இலங்காபுரியில் இலங்கு புகழ் காரைநகர் தம்
வாரிவளவூர் பேரம்பலம் மாணிக்கம் மாதரசி மாண்புறவே
நந்தன வருடம் ஆடி பத்து அருந்தமிழ்த் தேதி புதன் சப்தமித் திதியில் வளர் பிறை நாளில்
ஈடு புகழ் நிமலன் பாதம் சோதியாய் நிறைந்த நாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோன்றற் சரிதம்

ஈழமணித்திருநாட்டின் வடக்கே யாழ்ப்பாண தீபகற்பத்தின் நகரமாகவும் சப்த தீவுகளில் ஒன்றாகவும் சைவமும் தமிழும் கோலோச்சும் இடமாகவும் சங்கின் முழக்கமும் தமிழ்மொழியின் நறுமணமும் கமழும் ஊராகவும் விளங்கும் காரைநகரிலே வாரிவளவு எனும் பதியிலே ஞான ஆட்சி செய்யும் வாரிவளவு ஸ்ரீ கற்பக விநாயகர் அருளுடன் சைவ வேளாண் குலத்தவர்களான கணபதிப்பிள்ளை மற்றும் முத்துப்பிள்ளைக்கும் மகளாக 16.02.1932ம் திகதி திருமதி பேரம்பலம் மாணிக்கம் அவர்கள் அவதரித்தார்.

ஆலய தரிசனம் பாப விமோசனம் என்னும் நல்லதோர் நன்நெறிக்கு இணங்க வாழ்ந்திருந்த உயர் சைவ வேளாண் குலத்தில் அவதரித்து வாரிவளவிலே வாழ்ந்து வந்தார். இவர் தனது வாழ்நாளில் சிறந்த சைவ பக்தி உடையவராகவும் விருந்தோம்பல் பண்புடையவராகவும் திகழ்ந்தார். இவருடைய இறை பக்தியும் பண்பான குணங்களும் இவரை சிறந்த பண்புடைய பிள்ளைகளான E.S.P நாகரத்தினம் அவர்களையும் E.S.P. கணேசலிங்கம் அவர்களையும் பெற்றுக் கொள்ளும் பேற்றினை அளித்தது. வணிகச் சிறப்பை கொண்டவரும் சமயத் தொண்டுகள் செய்பவரும் பிரபல வர்த்தகராகிய E.S. பேரம்பலம் அவர்களை கணவராக கொண்டு வாழ்க்கை நடத்தியவருமாவார். இதன் பலாபலனாக சிறந்த வணிகத்துறையில் முதலிடமான புத்திரர்களை பெற்ற பாக்கியவதியாகவும் வாழ்ந்து வந்தார். பராசக்தி, பரமேஸ்வரி, சௌந்தராம்பிகை, E.S.P. நாகரத்தினம், அன்னபாக்கியம், பாலமணி, E.S.P.கணேசலிங்கம் எனும் செல்வங்களை பெற்றெடுத்தார்.

மேலும் இவர் காரைநகர் வியாவில் சைவ மகாவித்தியாலயத்திலே தனது ஆரம்ப கல்வி முதல் க.பொ.த. சாதாரண தரம் வரை கல்வி கற்றுள்ளார். இவர் தனது இளமைக்காலத்திலேயே சிறந்த ஆன்மீக வாதியாகவும் தனது கணவரின் வர்த்தக விடயங்களில் ஆர்வமுடையவராகவும் விளங்கினார். சைவ அனுட்டான விதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகளையும் சைவப் பழக்கவழக்கங்களையும் உடையவராகவும் சைவசமயிகளால் அனுட்டிக்கப்படும் அனைத்து விதமான விரதங்களையும் வழிபாட்டு முறைகளையும் கடைப்பிடிப்பவராகவும் வாழ்ந்து வந்தார். இவருடைய பிள்ளைகள் அறுவரையும் திருமணம் செய்வித்து இன்பக் காட்சிகளையும் கண்டு களித்தார்

பராசக்தியை திருஞானசம்பந்தனுக்கும், பரமேஸ்வரியை சதாசிவத்திற்கும், சௌந்தராம்பிகையை சோமசுந்தரத்திற்கும், E.S.P.நாகரத்தினத்தை தங்கமலரிற்கும், அன்னபாக்கியத்தை சண்முகராசாவுக்கும், E.S.P. கணேசலிங்கத்தை சுமதிக்கும், திருமணம் செய்துவைத்தார். அதன் பலாபலனாக பேரப்பிள்ளைகளாக சண்முகநாதன், சண்முகரத்தினி, சண்முகராசா, ஞானேஸ்வரி, சிவராசன், சிவரூபன், சிவகுமாரி, சிவகணேசன், நந்தினி, சாந்தகுமார், சிவகுமார், கஜேந்திரன், கஜமுகன், கமலநேசன், கமலநாதன், கமலரூபன், ராஜசுலோஷினி, கலைமகள், வாசுகி, அபிராமி, செந்தூரன், வைஷிகா என்போரையும் பூட்டப்பிள்ளைகளான அனுஷன், ஆரணி, வானவி, ஆரவி, சுவாதி, நிவேதன், கவிதன், ஆரங்கன், ஆர்த்தி, ஆருஷன், கஜந்தன், என்போரையும் கண்டு களித்தார்

இவருடைய கணவர் E.S.பேரம்பலம் பிரபல வர்த்தகராவார். இவருடைய உயர்ச்சிக்குக் காரணமாகவும் பல உதவி ஒத்தாசைகள் புரிபவராகவும் இவர் திகழ்ந்து வந்தார் இவரது மக்கள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் பூட்டப் பிள்ளைகளை கண்டு சீராட்டிப் பாராட்டி வளர்த்து தனது இறுதி யாத்திரையை 25.07.2012 அன்று இவ்வுலகை விட்டு உயிர் நீத்து பூர்த்தி செய்தார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

## பிள்ளையார் சுலோகம்

சுக்லாம் ப்ரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்ப்பு ஜம்
ப்ரஸன்ன வதனம் த்யாயேத்
ஸர்வ விக்னோப சாந்தயே !!

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாந்
கண்ணிற் பணிமின் கனிந்து

# பஞ்ச புராணம்

## விநாயகர் துதி

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

## தேவாரம்

விரும்பி நின்மலர்ப் பாத மேநினைந்
தேன்வி னைகளும் விண்டன,
நெருங்கி வண்பொழில் சூழ்ந்தெ ழில்பெற
நின்ற காவிரிக் கோட்டிடைக்
குரும்பை மென்முலைக் கோதை மார்குடைந்
தாடு பாண்டிக் கொடுமுடி
விரும்ப னே!யுனை நான்ம றக்கினும்
சொல்லும்நா நமச்சி வாயவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பெரும் பெருமான் என்பிறவியை
வேறுத்துப் பெரும்பிச்சுத்
தரும் பெருமான் சதுரப்பெரு
மான் என் மனத்தினுள்ளே
வரும் பெருமான் மலரோன்தெடு
மாலறி யாமல்நின்ற
அரும்பெருமான் உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே

## திருவிசைப்பா

உற்றாய்! என்னும் உன்னை யன்றி மற்றெருன் (று)
உணரேன் என்னும்: உணர்வுகள் கலங்கப்
பெற்றாய் ஐந்தெ ழுத்தும் பிதற்றிப்
பிணிதீர வெண்ணீறிடப் பெற்றேன் என்னும்:
கற்றாய சோதி மகேந்தி ரம்சூழ
மனத்திருள் வாங்கிச் சூழாத நெஞ்சிற்
குற்றாய்! என்னும்: குணக்குன்றே! என்னும்:
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே

## திருப்பல்லாண்டு

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கு
அண்டத் தொடு முடனே
பூதலத் தோரும் வணங்கப் பொற் கோயிலும்
போனகமும் அருளிச்
சோதி மணி முடித் தாமமும் நாமமும்
தொண்டற்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசு வைத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஐந்துபேர் அறிவுக் கண்களே கொள்ள
அளப்படும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும்
திருந்து சாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறில்லா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

## வாழ்த்து

வான் முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

"அன்பும்சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாருமறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"

– திருமூலர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

## சேந்தனார் பாடியருளியது

சிதம்பரத்தில் ஒரு மார்கழித் திருவாதிரைத் திருவிழாவில் தேர்ச் சில்லுகள் சேற்றில் புதைந்து நகராது தம்பித்து நின்ற சமயத்தில் சேந்தனார் இத் திருப்பல்லாண்டு எனும் திருப்பதிகத்தைப் பாடியருளினார். தேர் தானாகவே வீதி வலம் வந்து இருப்பைச் சென்றடையச் செய்தார் என்பது வரலாறு. இன்றும் இந்தியாவில் சிதம்பரம் போன்ற கோவில்களிலும் இலங்கையில் திருக்கேதீச்சரம் போன்ற கோவில்களிலும் தேர்த்திருவிழாவன்று திருப்பல்லாண்டு பாடித் தேர் இழுப்பது மரபாகவுள்ளது.

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன் அடியோமுக்
கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள்
விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்தும் குடிகுடி ஈசற்(கு)ஆட்
செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள்அள வில்லதோர்
ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள் என்றே
பல்லாண்டு கூறுதுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிட்டையி லாவுடல் நீத்தென்னை ஆண்ட
நிகரிலா வண்ணங்கள்
சிட்டன் சிவனடி யாரைச் சீராட்டும்
திறங்களுமே சிந்தித்(து)
அட்ட மூர்த்திக்கென் அகம்நெக ஊறும்
அமிர்தினுக்(கு) ஆலநீழற்
பட்டனுக்(கு) என்னைத்தன் பாற்படுத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

சொல்லாண் டசுரு திருப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிறை யும்சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரன் மேரு விடங்கன்
விடைப் பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

புரந்தரன் மாலயன் பூசலிட்(டு) ஓலமிட்(டு)
இன்னம் புகலரிதாய்
இரந்திரந்(து) அழைப்பஎன் னுயிராண்ட கோவினுக்(கு)
என்செய வல்லம் என்றும்
கரந்துங் கரவாத கற்பகனாகிக்
கரையில் கருணைக்கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப் பாங்கற்கே
பல்லாண்டு கூறுதுமே.

சேவிக்க வந்தயன் இந்திரன் செங்கண்மால்
எங்கும்திசை திசையென
கூவிக் கவர்ந்து நெருங்கிக்குழாம்குழ
மாய்நின்று கூத்தாடும்
ஆவிக்(கு) அமுதைஎன் ஆர்வத்தனத்தினை
அப்பனை ஒப்பமார்
பாவிக்கும் பாவகத்(து) அப்புறத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உளறி
உமைமண வாளனுக்(கு)ஆம்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

சேலுங் கயலும் திளைக்கும் கண்ணார்இளங்
கொங்கையில் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங் குமென்று
புண்ணியர் போற்றிசைப்ப
மாலும் அயனும் அறியா நெறி தந்து
வந்தென் மனத்தகத்தே
பாலும் அமுதமு ஒத்துநின் றானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

பாலுக்கு பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆவிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

தாதையைத் தாளற வீசிய சண்டிக்(கு)இவ்
அண்டத்தொடும் உடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற் கோயிலும்
போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும் நாமமும்
தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று விம்மி
மிகுதிரு ஆரூரின்
மழவிடை யாற்கு வழிவழி யாளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடி எம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

ஆரார் வந்தார்? அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாராயணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.

எந்தை எந்தாய் சுற்றும் முற்றும் எமக்கு
அமுதாம் எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யும் சிவன்சீர் அடியார்
அடிநாய் செப்புறை
அந்தமில் ஆனந்தச் சேந்தன் எனைப்புகழ்
தாண்டுகொண் டாருயிர்மேல்
பந்தம் பிரியப் பரிந்தவனே என்று
பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரிவளவு ஸ்ரீ கற்பக விநாயகர் காப்பு

யாழ்நகரின் சப்த தீவுகளுள் ஒன்றான காரையம் பதியிலே
வருவோரை வரவேற்கும் பாங்குடன்
கொலுவீற்றிருக்கும் கற்பக விநாயகரே
கற்பக தருவான கற்பக விநாயகரே
வாரண முடிவே வரம் தரும் தேவே
சரணம் சரணம் நின் தாள் சரணம்
உத்தம பத்தியாய் உன்னூர் வாழ்ந்த
நற்குண வதியும் நினை நானும்
அற்புத மாலையும் அவலொடு மோதகமும்
தந்துன்னை வணங்கி நின் நினைவொடு
வாழ்ந்த E.S. பேரம்பலம் மாணிக்கம்
இப்புவி வாழ்வு கசந்திட்டதாலுன் திருவுலகே
உவப்பென்ன உணர்ந்து ஓர் நொடி தன்னில்
உடலது நீங்கி உயிர் கொடுத்து வந்தார்
செத்துயிர் நீத்த மாந்தெம்மை நின் சிறகினால்
அணைத்துக் காக்கும் கற்பக விநாயகனே
அன்னவளையும் நற்கதி வழங்கி நாளும்
நலமே காப்பாய் ஐயனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் கதை

## காப்பு

கரும்பும் இளநீரும் காரெள்ளுந் தேனும்
விரும்பும் அவல்பலவும் மேன்மேல் - அருந்திக்
குணமுடையனாய் வந்து குற்றங்கள் தீர்க்குங்
கணபதியே இக்கதைக்குக் காப்பு

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

ஆறுதனைச் சூடிமகனே ஆடரவைப்பூணி மகனே
நீறுதனைப்பூசிமகனே நீள் பிறையைச் சூடி மகனே
ஏறி இடபத்தேறி மகனேயேழுலகத்தீசன் மகனே
சீற கழற்றி யானை முகவாடியேன்றீவினை கெட்டோடவருளே

திருவிளங்கும் மார்பன் மருமகனே சேவதனில் ஏறி
வரும் அரன்றான் ஈன்றருளும் மைந்தா - முருகனுக்கு
முன் பிறந்த யானை முகவா உனைத் தொழுவேன்
நின் கதைக்கு நீ என்றும் காப்பு

பூமாதுசேரப் பொற்பு மிகச் செல்வம் பொழிந்தோங்க
நாமாது நாவில் நடனம் புரிய நலம் பெருக
ஆமேவு பாலு மோதகமுந் தேனுமயின்றருள் செய்
மாமாங்கப் பிள்ளையார் பொற்பாத மலர் வணங்குதுமே

## சரஸ்வதி துதி

புத்தகத் துள்ளுறை மாதே
பூவில் அமர்ந்திடு வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளாய் நங்காய்
வேதப் பொருளுக்கு இறைவி
முத்தின் குடையுடையாளே
மூவுலகுந் தொழுது ஏத்துஞ்
செப்புக்கவித்த மலையாய்
செவ்வரி ஓடிய கண்ணாய்
தக்கோலம் தின்னும் வாயாய்
சரஸ்வதி என்னும் திருவே
எக்காலமும் உனைத் தொழுவேன்
இயல் இசை நாடகம் என்னும்
முத்தமிழ்க் கல்விகள் எல்லாம்
முழுதும் எனக்கருள் செய்து என்
சித்தந்தனில் நீ இருந்து
திருவருள் செய்திடுவாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்

சீதக்களபச் செந்தாமரைப்பூவும்
பாதச் சிலம்பும் பல இசைபாட
பொன் அரை ஞாம் பூந்துகில் ஆடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழ கெறிப்ப
பேழை வயிறும் பெரும் பாரக்கோடும்
வேழமுகமும் வெண்ணீற்றணியும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடி கொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச்சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன் முடியும்
திரண்ட முப்பரிநூல் திகழொழி மார்பும்
பொற்புற விளங்கும் பொருளே கயிலை
அற்புதனீன்ற கற்பகக்களிறே

முப்பழம் நுகரும் மூஷிக வாகனா
இப்பொழுது என்னை ஆட்கொள்ளவேண்டி
தாயாயெனக்குத் தானெழுந்தருளி
மாயாப்பிறவி மயக்கமறுத்து
திருந்திய முதல் ஐந்தெழுத்தும் தெளிவாய்
பொருந்தவே எந்தன் உளந்தனிற் புகந்து
குருவடிவாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடாவகைதான் மகிழ்ந்தெனக் கருளி
கோடாயுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி என் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையும் எமக்கினிதருளி
கருவிகள் ஒடுக்கும் கருத்தறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக்கருளி
மலமொரு மூன்றின் மயக்கமறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந்திரத்தால்
ஐம்புலக்கதவை அடைப்பதும் காட்டி
ஆறாதாரத்து அங்குச நிலையும்
பேரா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கடையின் எழுத்தறிவித்து
கடையிற் கழுமுனை கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்றெழு பாம்பின் நாவிலுணர்த்தி
குண்டெலி அதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாததாரத்தின் மூண்டெழு கனலை
காலால் எழுப்புங் கருத்தறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முகத் தூலமும் சதுர்முக சூக்ஷ்மமும்
என்முகமாக இனிதெனக்கருளி
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரி எட்டு நிலையும் தெரிசனப் படுத்தி
இருத்தி முத்தி இனிதெனக்கருளி
என்னையறிவித்து எனக்கருள் செய்து
முன்னைப்பழவினை முதலறக்களைந்து
வாக்கும் மனமும் இல்லாமனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள் வெளி இரண்டுக்கு ஒன்றிடமென்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தி என் செவியில்
எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்து அருள் வழி காட்டி
சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டி
சித்தத்தினுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கணுவாய் அப்பாலுக்கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்தி
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக்கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக்கருத்தின் நிலையறிவித்து
தத்துவ நிலையைத் தந்தெனையாண்ட
வித்தக விநாயகா விரைகழல் சரணத்து
உரிமைசேர் அகவல் ஓதினார்
பொருளொடு தவமும் புகழும் பெறுவரே

## அதிகாரம்

பொன்னிறங் கடுக்கும் புனற்செறி குடுமித்
தென்மலை இருந்த சீர்சால் முனிவன்
கந்தமும் மதக்கரி முகன் கதையினைச்
செந்தமிழ் வகையால் தெளிவுறச் செப்பினன்
அன்னதிற் பிறவியில் அரில்தபத்திரட்டித்
தொன்னெறி விளங்கச் சொல்லுவன் கதையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதை

மந்திர கிரியில் வடபால் ஆங்கு ஓர்
இந்து தவழ் சோலை இராசமாநகரில்
அந்தணன் ஒருவனும் ஆயிழை ஒருத்தியும்
சுந்தர புத்திரனைப் பெறுதல் வேண்டிக்
கடவுள் ஆலயமும் கடிமலர்ப் பொய்கையும்
தடநிழற்பள்ளியும தாம் பல சமைத்து
புதல்வரைத் தருகெனப் பொருப்பு அரச ஈன்ற
மதர் வழி பாகனை வழிபடும் நாளில்
மற்றவர் புரியும் மாதவங்கண்டு
சிற்றிடை உமையாள் சிவன்அடி வணங்கி
பரனே சிவனே பல்லுயிர்க்கு உயிரே
அரனே மறையவர்க்கு அருள் புரிந்து அருளென
அந்த அந்தணனுக்கு இந்த நற் பிறவியில்
மைந்தரில்லை என்று மறுத்து அரன் உரைப்ப
எப்பரிசு ஆயினும் எம் பொருட்டு ஒரு சுதன்
தப்பிலா மறையோன் தனக்கு அருள் செய்க என
எமையாளுடைய உமையாள் மொழிய
இமையா முக்கண் இறைவன் வெகுண்டு
பெண் சொற் கேட்டல் பேதமை என்று
பண் சொல் பயிலும் பாவையை நோக்கி
பேதாய் நீ போய் பிற என மொழிய
மாதுமை அவளும் மனந் தளர்வு உற்றுப்
பொன்றிடும் மானிடப் புன் பிறப்பு எய்துதல்
நன்றல என்றே நடுக்கமுற்று உரைப்ப
கறைமிடற்று அண்ணல் கருணை கூர்ந்து
பிறைநுதல் அவட்கு நீ பிள்ளையாய்
சென்று அவண் வளர்ந்து சில பகல் கழித்தால்
மன்றல் செய்து அருள்வோம் வருந்தலை என்று
விடை கொடுத்து அருள விலங்கல்மா மகளும்
பெடமயிற் சாயல் பெண்மகவு ஆகித்
தார்மலி மார்பன் சதுர்மறைக் கிழவன்
சீர் மலி மனைவி திருவயிற்று உதித்துப்
பாவையும் சிற்றிலும் பந்தொடு கழங்கும்
யாவையும் பயின்ற இயல்பினள் ஆகி
ஐயாண்டு அடைந்த பின் அன்னையும் அத்தனும்
மையார் கருங்குழல் வாணுதல் தன்னை
மானிட மறையோர்க்கு வாதுவை செய்திடக்
கான் அமர் குழலியை கருதிக் கேட்பப்
பிறப்பும் இறப்பும் இல்லாப் பெரியோர்க்கு அன்றி
அறத்தகு வதுவைக்கு அமையேன் யான் என
மற்றவன் தன்னை உன் மணமகனாகப்
பெற்றிடல் அரிதெனப் பெயர்த்து அவர்பேச
அருந்தவ முயற்சியால் அணுகுவேன் யான் எனக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருந்தட நெடுங்கண் கவுரி அங்கு உரைப்ப
மருமலிகமல மலர்தடத்து அருகில்
தருமலி நிழல் தவச்சாலையது அமைத்துப்
பணியணி பற்பல பாங்கியர் சூழ
அணிமலர் குழல் உமை அருந்தவம் பரிதலும்
அரிவை தன் அருந்தவம் அறிவோம் யாம் என
இருவரும் அறியா இமையவர் பெருமான்
மான் இடம் ஏந்தும் வண்ணமது ஒழிந்து
மானிட யோக மறையவன் ஆதி
குடையொடு தண்டு நற்குண்டிகை கொண்டு
மடமயில் தவம் புரி வாவிக்கரையில்
கண்ணுதல் வந்து கருணை காட்டித்
தண்நறுங் கூந்தல் தையலை நோக்கி
மின்பெரு நுண் இடை மெல்லியலாய் நீ
என்பெறத் தவம் இங்கு இயற்றுவது என்றலும்
கொற்றைவார் சடையனைக் கூட என்று உரைதலும்
நன்று என சிரித்து நான் மறையோனும்
மாட்டினில் ஏறி மான் மழு தரித்து
காட்டினிற் சுடலையிற் கணத்துடன் ஆடி
பாம்பும் எலும்பும் பல்தலை மாலையும்
சாம்பரும் அணிந்து தலையோடு ஏந்திப்
பிச்சை கொண்டு எழலும் பித்தன்
நச்சு நீர் செய்தவம் நகைதரும் நுமக்கென
பூங்கொடி அருந்தவம் பூசுரன் குலைத்தலும்
ஆங்கு அவள் நாணமுற்று அணிமனை புகுதச்
சேடியர் வந்து செழுமலர்க் குழலியை
வாடுதல் ஒழிகென மனம் மிகத் தேற்றி
சிந்துர வாள்நுதற் சேடியர் சிலர் போய்ப்
தந்தை தாய் இருவர் தாளினை வணங்கி
வாவிக்கரையில் வந்தொரு மறையோன்
பாவை தன் செங்கையைப் பற்றினன் என்றலும்
தோடு அலர் கமலத்தொடை மறைமுனியை
ஆடக மாடத்து அணிமனை கொணர்க என
மாடக யாழ் முரல் மங்கையர் ஓடி
நீடிய புகழாய் நீ எழுந்து அருள் என
மைமலர்க் குழலி வந்து எமை அழைக்கில்
அம்மனை புகுவன் என்று அந்தனன் உரைத்தலும்
பொற்றொடி நீ போய் பொய்கைக் கரையில் நின்ற
நற்றவ முனியை நடாத்திக் கொணர்கென
சிவனையிகழ்ந்த சிற்றறிவுடையோன்
அவனையான் சென்று இங்கு அழைத்திடேன் என்று
சிற்றிடை மடந்தையும் சீறினளாகி
மற்றைய மாதர் மதிமுகம் நோக்கி
நெற்றியில் கண்ணுடை நிமலனுக்கு அல்லவென்
பொற்பு அமர் கொங்கை பொருந்தற்கு அரிதால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிட வேட மறையவன் தனக்கு
யான் வெளிப்படுவது அல்லை என்று இசைப்ப
மனையிடை வந்த மாமுனி தன்னை
இணையடி தொழுதல் இளையோர்க்கு இயல்பெனத்
தந்தையும் தாயும் தகைபெற மொழிய
சிந்தை குளிர்ந்த சீறதல் ஒழிந்து
தாய் சொல் மறுத்தல் பாவம் என்று அஞ்சி
ஆயிழை தானும் அவன் எதிர் சென்று
சுற்றி வந்து அவனடி சுந்தரி வணங்கி
மற்றவன் தன்னை மனையிற் கொணர்ந்து
ஆதியம் பகவற்கு அன்பன் ஆகும்
வேதியன் பழைய விருத்தன் என்று எண்ணி
ஆசனம் நல்கி அருக்கியம் முதலாய்
பாத பூசனைகள் பண்ணிய பின்னர்ப்
போகனம் படைத்து பொரிக்கறி பருப்பு நெய்
ஆன்பால் மாங்கனி அழகிய பலாச்சுளை
தேன் கதளிப்பழம் சீர் பெறப் படைத்து
அந்தனன் தன்னை அமுது செய்வித்து
சந்தனம் குங்குமம் சாந்திவை கொடுத்து
தவக்கோலத்தொடு சாதிக்காயும்
கற்பூரத்தோடு கவின் பெறக் கொண்டு
வெள்ளிலை அடைக்காய் விளங்கிய பொன்னின்
ஒள்ளிய தட்டின் உவந்து முன் வைத்துச்
சிவன் எனப் பாவனை செய்து நினைந்து
தலைமுறை முனிவனை தாளிணை வணங்கத்
தேன் அமர்குழலி திருமுகம் நோக்கி
மோனமாமுனி புன்முறுவல் காட்டிக்
கற்றைச் சடையும் கரமொரு நான்கும்
நெற்றியில் நயனமும் நீலகண்டமும்
மானும் மழுவும் மலர்க் கரத்து இலங்க
கூன்மதி நிலவும் கொழித்திட முடிமேல்
வரந்தரு முதல்வன் வடமயில் காண
கரந்த தன் உருவம் காட்டி முன் நிற்ப
மரகதமேனி மலைமகள் தானும்
விரைவொடு அங்கு அவன் அடி வீழ்ந்து இறைஞ்சி
அரி அயன் இந்திரன் அமரர் விஞ்சையர்
கருடர் கின்னரர் காய வாசியர்
ஏதமில் முனிவர் அவுணர் இராக்கதர்
பூதர் இயக்கர் கிம்புருடர் அலகை
சித்தர் தாரகை கந்தருவர்கள் முதலாய்க்
கணிக்கரும் பதினென் கணத்தில் உள்ளவரும்
மணிக்கருங்களத்தனை வந்தடைந்து அதன் பின்
மன்றல் அம்குழலிக்கு வதுவை நாள் குறித்து'
தென்றல் வந்து இலங்கு முன்றில் அகத்துப்
பொன்திகழ் பவளப் பொற் கால் நாட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கத்தால் வளை பல பரப்பி
ஆணிப் பொன் தகட்டால் அழகுற வேய்ந்து
நித்தில மாலை நிரை நிரை தூக்கிப்
பத்திகள் தோறும் பல மணி பதித்துத்
தோரணம் நாட்டித் துகில் விதானித்து
பூரணப் பொற்குடம் பொலிவுற வைத்து
திக்குத் தோறும் திருவிளக்கு ஏற்றி
புத்திப் படர்முளைப் பாலிகை பரப்பி
கன்னலும் கமுகும் கதலியும் நாட்டி
பன்மலர் நாற்றிப் பந்தர் சோடித்து
நலமிகு கைவலோர் நஞ்சு அணிமிடற்றனைக்
குலவிய திருமணக் கோலம் புனைந்தார்
வருசுரர் மகளிர் மலைமகள் தன்னை
திருமணக் கோலம் செய்தனர் ஆங்கே
எம்பிரானையும் இளங்கொடி தன்னையும்
உம்பரெல்லாம் ஒருங்குடன் கூடி
கடல் என விளங்கும் காவணந் தன்னில்
சுடர்விடு பவளச் சுந்தரப் பலகையில்
மறை புகழ்ந்து ஏத்த மகிழ்ந்து இனிது உடனிரு
பறை ஒலியோடு பனிவளை ஆர்ப்ப
வதுவைக்கு ஏற்ற மறைவிதி நெறியே
சதுர்முகன் ஓமச் சடங்குகள் இயற்றத்
தறுகலன் ஒளி பொன் தாலி பூட்டிச்
சிறுமதி நுதலியைச் சிவன் கைப் பிடித்த பின்
அரிவலம் சூழ எரி வலம் வந்து
பரிவுடன் பரிமளப் பாயலில் வைகிப்
போதணி கருங்குழல் பூவை தன் உடனே
ஓத நீர் வேலைசூழ் உஞ்சை அம்பதி புக
ஏரார் வழியின் எண்திசை தன்னைப்
பாராதேவா பனிமொழி நீ என
வருங்கருங்குழலாள் மற்றும் உண்டோ என
திருந்து இழை மடந்தை திரும்பினள் பார்க்க
களிறும் பிடியும் கலந்து விளையாடல் கண்டு
ஒளிர்மணி பூணாள் உரவோன் உடனே
இவ்வகையாய் விளையாடுவோம் ஈங்கென
அவ்வகை அரனும் அதற்குடன் பட்டு
மதகரி உடுத்தோன் மதகரியாக
மதர்விழி உமைபிடி வடிவமதாகி
கூடிய கலவியிற்குவலயம் விளங்க
நீடிய வானோர் நெறியுடன் வாழ
அந்தணர் சிறக்க ஆனினம் பெருகச்
செந்தழல் வேள்வி வேத ஆகமம் சிறக்க
அறம் பல பெருக மறம் பல சுருங்க
திறம் பல அரசர் செகதலம் விளங்க
வெங்கரிமுகமும் வியன்புழைக்கையொடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐங்கரதலமும் மலர்ப்பதம் இரண்டும்
பவளத்து ஒளி சேர் பைந்துவர் வாயும்
தவளக்கிம்புரித் தட மருப்பு இரண்டும்
கோடி சூரியர்போற் குலவிடுமேனியும்
பேழை போல் அகன்ற பெருங்குட வயிறும்
நெற்றியில் நயனமும் முப்புரிநூலும்
கற்றைச் சடையும் கனக நீள் முடியும்
தாங்கிய முறம் போல் தழைமடிச் செவியுமாய்
ஐங்கரத்து அண்ணல் வந்து அவதரித்தலும்
பொங்கரவு அணிந்த புண்ணிய மூர்த்தியும்
மங்கை மனமிக மகிழ்ந்து உடன் நோக்கி
விண்ணுளோர்களும் விரிந்த நான்முகனும்
மண்ணுளோர்களும் வந்து உனை வணங்க
அங்கு அவர் தங்கட்கு அருள்சுரந்து அருளி
தீங்கது தீர்த்துச் செந்நெறி அளித்துப்
பாரணமாகத் பலகனி அருந்தி
ஏரணி ஆழின் கீழ் இனிது இரு என்று
பூதலந் தன்னில் புதல்வனை இருத்தி
காதல் கூர்மடநடைக் கன்னியுந் தானும்
மைவளர் சோலை மாநகர் புகுந்து
தெய்வ நாயகன் சிறந்து இனிது இருந்த பின்
வானவராலும் மானிடராலும்
கான் அமர் கொடிய கடு விலங்காலும்
கருவிகளாலும் காலனாலும்
ஒருவகையாலும் உயிர் அழியாமல்
திறம் பெற மாதவம் செய்து முன் நாளில்
வரம் பெறுகின்ற வலிமையினாலே
ஐமுகச்சீயம் ஒத்த அடர்படைசூழ
கைமுகம் படைத்த கயமுகத்து அவுணன்
பொன்னுலகு அழித்து புலவரை வருத்தி
இந்நிலத்தவரை இடுக்கண்படுத்தி
கொடுந் தொழில் புரியும் கொடுமை கொண்டு ஏங்கி
அடுந் தொழிற் குலிசத்து அண்ணலும் அமரரும்
கறைபடு கண்டக் கடவுளை போற்றி
முறையிடக் கேட்டு முப்புரம் எரித்தோன்
அஞ்சலீர் என்று அவர்க்கு அபயம் கொடுத்தே
அஞ்சுகைக் கரிமுத்து அண்ணலை நோக்கி
ஆனைமாமுகத்து ஆவுணனொடு அவன் தன்
சேனைகள் முழுவதும் சிந்திடப் பொருது
குன்று போல் வளர்ந்த குறப் படை கூட்டி
வென்று வா என்று விடை கொடுத்து அருள
ஆங்குஅவன் தன்னோடுஅமர் பல உடற்றிப்
பாங்கறும் அவன் படை பற்று அறக் கொன்ற பின்
தேர் மிசை ஏறிச் சினங் கொட செருவில்
கார்முகம் வளைத்த கயமுகாசூரன் மேல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றை வெண்மருப்பை ஒடித்தவன் உரத்தில்
குற்றிட எறிந்தான் குருதி சேர்ந்திடவே
சோர்ந்து அவன் வீழ்ந்து துண்ணென எழுந்து
வாய்ந்த மூடிகமாய் வந்து அவன் பொரவே
வந்த மூடிகத்தை வாகனம் ஆக்கி
எந்தை விநாயகன் ஏறினன் இப்பால்
எறிந்த வெண் மருப்பு அங்கு இமை நொடி அளவில்
செறிந்தது மற்றவன் திருக்கரத்திலே
வெல்லவைக் கதிர்வேல் விழிபடைத்து அருளும்
வல்லவை தனைத்தன் மனை என மணந்தே
ஓகையோடு எழுந்து ஆங்கு உயர் படை சூழ
வாகையும் புனைந்து வரும் வழி தன்னில்
கருச்சங்கோட்டில் கயல் கமுகு ஏறும்
திருச்செங்கோட்டிற் சிவனை அர்ச்சித்து
கணபதீச்சரம் என்னும் காரணநாமம்
பணபதி புகழ்தரு பதிக்கு உண்டாக்கி
சங்கரன் பார்ப்பதி தனிமனம் மகிழ
இங்கு வந்த அன்புடன் எய்திய பின்னர்க்
கணங்களுக்கு அரசாய் கதிர்முடி சூட்டி
இணங்கிய பெருமை பெற்று இருந்திட ஆங்கே
தேவர்கள் முனிவர்கள் சித்தர் கந்தருவர்
யாவரும் வந்து இவண் ஏவல் செய்திடும் நாள்
அதிகமாய் உரைக்கும் ஆவணித் திங்களின்
மிதிவளர் பக்கம் வந்திடு சதுர்த்தியில்
விநாயகருக்கு உரிய விரதம் என்று எண்ணி
மனாதிகள் கழித்து மரபோடு நோற்றார்.
இப்படி நேற்றிட்டு எண்ணிய பெருநாள்
ஒப்பறும் விரதத்து உறும் ஒரு சதுர்த்தியில்
நோற்று நற்பூசை நுடங்காது ஆற்றிப்
போற்றி செய்திட்டார் புலவர் ஐங்கரனை
மருமலர் தூவும் வானவர் முன்னே
நிருமலன் குமரன் நிருத்தம் புரிந்தான்
அனைவரும் கைதொழுது அடியினை போற்ற
வனை கழற் சந்திரன் மனச் செருக்கு அதனால்
பேழை போல் வயிறும் பெருத்த காத்திரமும்
தூழ்துளைக்கையும் தழைறச் செவியும்
கண்டனன் நகைத்தான் கரிமுகக் கடவுளும்
கொண்டனன் சீற்றம் குபேரனை நோக்கி
என்னைக் கண்டு இங்கு இகழ்ந்தனை சிரித்தாய்
உன்னைக் கண்டவர் உரைக்கும் இத் தினத்தில்
பழியோடு பாவமும் பலபல விதனமும்
அழிவும் எய்துவர் என்று அசனி போல் சபித்தான்
விண்ணவரெல்லாம் மிகமனம் வெருவி
கண்ணருள் கூருங்கடவுள் இத்தினத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோர வெஞ்சினம் மிகக் கொண்டனன் அந்நாள்
மார்கழித்திங்கள் மதிவளர் பக்கம்
சதயம் தொட்ட சட்டி நல் விரதமென்று
இதயத்து எண்ணி யாவரும் நாற்றார்
இப்புவி மாந்தர் இயம்பிய விரதம்
ஐவப்புடன் நோற்ற வகை இனிச் சொல்வாம்
குருமணி முடிபுனை குருகுலத்துதித்த
தருமனும் இளைய தம்பி நால்வரும்
தேவகிமைந்தன் திருமுகம் நோக்கி
எண்ணிய விரதம் இடையூறு இன்றி
புண்ணிய பொழுதே பலிப்புண்டாகவும்
செருவினில் எதர்த்த செறுநரை வென்று
மருமலாப்புயத்தில் வாகை சூடவும்
எந்தத் தெய்வம் எவ்விரதத்தை
வந்தனை செய்யில் வரு நமக்கு உரை எனப்
பாட்டு அளிதுதையும் பசுந்துளாய் மார்பனும்
கேட்டருள்வீரெனக் கிளர்த்துதல் உற்றான்
அக்குநீறணியும் அரன் முதல் அளித்தோன்
விக்கினம் தீர்க்கும் விநாயக மூர்த்தி
ஓட வைத்திடும் பொன் ஒளித்து ஒளிவிளங்கும்
கோடி சூரியர் பொலகுலவிய மேனியன்
கடகரி முகத்தோன் காத்திரம் பெருத்தோன்
தடவரை போலும் சதுர்ப்புயம் உடையோன்
சர்வ ஆபரணமும் தரிக்கப்பட்டவன்
உறுமதிக்குளவி போல் ஒரு மருப்பு உடையோன்
ஒரு கையில் தந்தமும் ஒரு கையில் பாசமும்
ஒரு கையில் மோதகமும் ஒரு கையில் செபஞ் செய்
உத்தம மாலையோன் உறுநினைவின் படி
சித்தி செய்வதனாற் சித்தி விநாயகன்
என்று இமையவரும்யாவரும் துதிப்ப
நன்றி தரும் திருநாமம் படைத்தோன்
புரவலரும் காணப் புறப்படும் போதும்
சேரவினில் யுத்தம் செய்திடும்போதும்
வித்தியாரம்பம் விரும்பிடும் போதும்
உத்தியோகங்கள் உஞற்றிடும் போதும்
ஆங்கு அவன் தன்னை அர்ச்சனை புரிந்தால்
தீங்கு உறாது எல்லாம் செயம் உண்டாகும்
கரதலம் ஐந்துடைக் கணபதிக்குரிய
விரதம் ஒன்று உளது அதை விரும்பி நோற்றவர்க்கு
சந்ததி தழைத்திடும் சம்பத்து உண்டாகும்
புந்தியில் நினைத்த பொருள் கைகூடும்
மேலவர் தம்மையும் வென்றிடலாம் என
தேவகி மைந்தன் செப்பிடக்கேட்டு
நுவலரும் விரதம் நோற்றிடும் இயல்பும்
புகர்முகக் கடவுளைப் பூசை செய்விரதமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரித்து எமக்கு உரைத்திடவேண்டும் என்று இரப்ப
வரைக்குடை கலித்தோன் வகுத்து உரை செய்வான்
தேருநீர் ஆவணித்திங்களின் மதிவளர்
பூர்வ பக்கம் புணந்திடு சதுர்த்தியின்
முந்தும் புலரின் முறைநீர் படிந்து
சந்திவந்தனம் தவறாது இயற்றி
அத்தினம் அதனில் ஐங்கரக்கடவுளைக்
பக்தியோடு அர்ச்சனை பண்ணுதல் வேண்டும்
வெள்ளியாற் பொன்னால் விளங்கும் அவன்தன்
ஒள்ளிய அருள்திரு உரு உண்டாக்கிப்
பூசை புரியப் புகன்றனர் பெரியோர்
ஆசுஇலா மண்ணால் அமைத்தலும் தகுமால்
பூசனை செய்திடும் இடம் புனிதமது ஆக்கி
வாசமென் மலரின் மஞ்சரி தூக்கிக்
கோடிகங்கோசிகங் கொடி விதானித்து
நீடிய நூல்வளை நிறைகுடத்து இருத்தி
விந்தைசேர் சித்தி விநாயகன் உருவைச்
சிந்தையின் நினைத்து தியானம பண்ணி
அவாகனம் முதல் அர்க்கிய பாத்தியம்
வாகாராச மனம்வரை கொடுத்து
ஐந்து அமிர்தத்தால் அபிடேகித்துக்
கந்தஞ் சாத்திக் கணேச மந்திரத்தால்
மாசு அகல இரண்டு வத்திரம் சாத்தி
பொருந்து உமை சுதனாப் புகலுமந்திரத்தால்
திருந்தும் பளிதத்தீபம் கொடுத்துப்
பச்சறுகு உடன் இருபத்தொரு விதமாய்
பத்திர புட்பம் பலபல கொணர்ந்தே
உமாசுதன் கணாபதிபன் உயர்கரிமுகத்தோன்
குமார குரவன் பாச அங்குசகரன்
ஏகதந்தன் ஈசுர புத்திரன்
ஆகுவாகனன் அருள்தரு விநாயகன்
சர்வ காரியமும் தந்து அருள்புரிவோன்
ஏரம்பமூர்த்தி என்னும் நாமங்களால்
ஆரம்பத்துடன் அர்ச்சனைபண்ணி
மோதகம் அப்பம் முதற்பணிகாரம்
தீதகல் மாங்கனி தீங்கதலிப்பழம்
வருக்கை கபித்த மாதுளங்கனியொடு
தரித்திடு நெட்டிலைத் தாழைமுப்புடைக்காய்
பருப்பு நெய் பொரிக்கறி பால் தயிர் போனகம்
விருப்புள சுவைப்பொருள் மிகவும் முன்வைத்து
உருத்திரப்பிரிய என்று உரைக்கும் மந்திரத்தால்
நிருத்தன் மகற்கு நிவேதனங் கொடுத்து
நற்றவர் புகன்ற நானான்கு உபசாரமும்
மற்றவன் திருவுளம் மகிழ்ந்திடச் செய்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணும் தகுதி இருபிறப் பாளர்க்கு
உண் அறு சுவைசேர் ஓதனம்நல்கி
சந்தனம் முத்துத்தானம் தக்கிணை
அந்தணர்க்கு ஈந்திட்டு அருச்சகன் தனக்குத்
திருத்தகு விநாயகத் திரு உருவத்தைத்
தரித்த வஸ்திரத்துடன் தானமாய்க் கொடுத்து
நைமித்திகம் என நவில்தருமரபால்
இம்முறை பூசனை யாவர் செய்தாலும்
எண்ணிய கருமம் யாவையும் முடிப்பர்
திண்ணிய செருவில் செயம்மிகப் பெறுவர்
அரன் இவன் தன்னைமுன் அர்ச்சனை பண்ணிப்
புரம் ஒருமூன்றும் பொடிபட எரித்தான்
உருத்திரன் இவனை உபாசனை பண்ணி
விரத்திரா சூரனை வென்ற கொன்றிட்டான்
அகலிகை இவன்தாள் அர்ச்சனை பண்ணிப்
பகர்தரும் கணவனைப் பரிவுடன் அடைந்தாள்
தண்ஆர் மதிமுகத்தாள் தமயந்தி
அந்நாள் இவனை அர்ச்சனை பண்ணி
நண்ணார் பரவும் நளனை அடைந்தாள்
ஐங்கரக்கடவுளை அர்ச்சனை பண்ணி
வெங்கத நிருதரை வேர் அறக்களைத்த
தசரதன் மைந்தன் சீதையை அடைந்தான்
பகிரதன் என்னும் பார்த்திவன் இவனை
மகிதலம் தன்னில் மலர்கொடு அர்ச்சித்து
வரநதிதன்னை வையகத்து அழைத்தான்
அட்ட தேவதைகளும் அர்ச்சித்து இவனை
அட்டபோகத்துடன் அமிர்தமும் பெற்றார்
உருக்குமணி என்னும் ஒண்டொடிதன்னை
செருக்கொடு வவ்விச் சிசுபாலன் தான்
கொண்டுபோம் அளவிற்குஞ்சர முகவனை
வண்டு பாண்மிழற்றாள் மலர்கொடு அர்ச்சித்துத்
தாரியின் மறித்தவன் தனைப்புறங்கண்டு
யாமும் அங்கு அவளை இன்புறப் பெற்றோம்
புகர்முகக் கடவுளைப் பூசனை புரிந்து
மிகமிக மனதில் விழைந்தன பெற்றார்
இப்புவிதன்னில் எண்ணுதற்கு அரிதால்
அப்படி நீவிரும் அவனை அர்ச்சித்தால்
எப்பொருள் விரும்பினீர் அப்பொருள் பெறுவீர்
என்ற கன்று எறிந்தோன் எடுத்திவை உரைப்ப
அன்றுமுதல் தருமனும் அனுசரும் இவனைப்
பூசனை புரிந்து கட்புலன் இலான் மைந்தரை
நாசம்பண்ணி நராதிபர் ஆகிச்
சிந்தையில் நினைத்தவை செகத்தினிற் செங்கொண்டு
அந்தமில் செல்வத்து அரசியல் பெற்றார்
ஈங்குஇதுநிற்க இவ்விரதத்து இயல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓங்கிய காதை மற்று ஒன்று உரை செய்வாம்
கஞ்சநான்முகந்தரும் காசிபன்புணர்ந்த
வஞ்சகமனத்தாள் மாயைதன் வயிற்றில்
சூரன் என்று ஒருவனும் துணைவரும் தோன்றி
ஆர்கலி சூழ்புவி அனைத்தையும் அழித்தே
சீருடைச்சுவர்கத் திருவளங்கெடுத்தும்
புரந்தரன் முதலிய புலவரை வருத்தியும்
நிரந்தரம் தீயநெறி நடத்துதலால்
ஆயிரங்கண்ணனும் அமரரும் முனிவரும்
நீ இரங்கு எமக்கு என நெடுங்கரம் கூப்பி
இரசதகிரி உறை இறைவனை வணங்கி
வரமிகும் சூரன் வலிமைகள் உரைக்கச்
சுடர்விடு மணிமுடிச்சூரனை வெல்லக்
கதிர்விடுவடிவேல் கரதலத்து ஏந்தம்
புதல்வனைத்தருவோம் போமின் நீர் என
அமர்கோனுக்கு அரன் விடைகொடுத்துச்
சமரவேல் விழித்தையலும் தானும்
கூடிய கலவியில் கூடாத ஊடலும்
ஓடியவானோர் ஒருங்குடன் கூடிப்
பாகவன் தன்னைப்பரிவுடன் அழைத்துச்
சூரன் செய்யும் துயரம் எல்லாம்
ஊர்அரவு அணிந்தோற்கு உரை என உரைப்ப
காமனை எரித்த கடவுள் என்று அஞ்சிப்
பாகவன் பயம் உற பயம் உனக்கு ஏதென
உற்றிடும் கரதலத்து உன்னையே தரித்தான்
நெற்றியின் நயனமும் நீயே ஆதலில்
குற்றம் அடாது கூறுநீ சென்றென
வானவர் மொழிய மற்றவன் தானும்
தானும் அச்சபையில் தரியாது ஏகி
எமை ஆளுடைய உமையாளுடனே
அமையா இன்பத்து அமர்ந்து இனிது இருந்த
பள்ளி மண்டபம் பாகவன் குறுகலும்
ஒள்ளிய மங்கை ஒதுங்கி நாணுதலும்
தெள்ளிதிற் பரமனும் தேயுவைக்கண்டே
அறுமுகப் பிள்ளையை அவன் கையில் ஈதலும்
வறியவன் பெற்ற வான்பொருள் போலச்
சோதி நீள்முடிச்சுடரோன் கொணர்ந்து
வாதராசன் மலர்க்கையிற் கொடுப்ப
நீதியோடு நின்று கையேந்தி
போதநீள்வாவியும் பொறுக்க ஒண்ணாமல்
தரும்புனற்கங்கை தன்கையில் கொடுப்ப
தரும்புனற்கங்கையும் தாங்க ஒண்ணாமல்
பொருந்திரைச் சரவணப் பொய்கையில் வைப்பத்
தன் ஆர் வதனத் தாமரை ஆறுங்
கண் ஆறிரண்டும் கரம் ஈராறும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாண் அயில் ஆதி வான்படையும் கொண்டு
அறுமுகக்கடவுள் அங்கு அவதரித்திடலம்
மறுகிய உம்பர் மகிழ்வுடன் கூடி
அறுமீன்களைப்பால் அளித்திர் என்று அனுப்ப
அங்கவர்முலை உண்டு ஆறுமுகன் தானும்
ஓங்கிய வளச்சி உற்றிடு நாளில்
விமலனும் உமையும் விடையுகைத்து ஆறு
தலைமகன் இருந்த சரவணத்து அடைந்து
முருகு அலர் குழல் உமைமுலைப்பால் ஊட்ட
இருவரும் இன்பால் எடுத்து எடுத்து அணைத்து
தேவர் தம்படைக்குச் சேனா பதியெனக்
காவல் கொண்டு அளிக்கக் கதிர்முடி சூட்டி
அயில்வேல் முதற்பல ஆயுதங் கொடுத்துத்
திசையெலாம் செல்லும் தேரும் ஒன்று உதவிப்
பூதப்படைகள் புடைவரப்போய்நீ
ஓதுறும் அவுணரை ஒறுத்திடு என்று அனுப்ப
இருளைப் பருகும் இரவியைப்போலத்
தகுவரென்று அவரைச் சமரிடைமுருக்கி
குருகுப்பேர் பெருங்குன்றமும் சூரன்
மருமமும் துளைபட வடிவேல் விடுத்தே
யாவரும் வியப்புற இந்திரன் மகளாம்
தேவகுஞ்சரியைத் திருமணம் புணர்ந்திட்டு
அமரர் கோனுக்கு அமர் உலகு அளித்துக்
குமரவேளுங் குவலயம் விளங்க
அமராவதியில் அமர்ந்து இனிது இருந்தான்
சமரவேலுடைச் சண்முகன் வடிவுகண்டு
அமரர் மாதர் அனைவரும் மயங்கி
எண்டருங்கற்பினை இழந்தது கண்டே
அண்டர் எல்லாம் அடைவுடன்கூடி
மாதொரு பாகனை வந்து அடிவணங்கி
மருமலர்க்கடம்பன் எம்மாநகர்புகாமல்
அருள்செய்ய வேண்டும்நீ அம்பிகாபதியென
இமையவர் உரைப்ப இறையவன் தானும்
குமரனைக் கோபம் கொண்டுமுன் முனியக்
காவல்கொண்டு எம்வினை கட்டறுத்து அருளும்
சேவளங் கொடியோன் தேசம் போக
திருந்திழை உமையாள் அருந்துயர் எய்தி
வருந்தி முன்நிற்க மங்கையைப் பார்த்து
மங்கை நீதான் வருந்துதல் ஒழிகுதி
அங்கையாற் சூதெறிந்து ஆடுவோம் வா என
வென்றதும் தோற்றதும் விளம்புவார் யாரென
குன்றமென் முலையாள் கூறிய சமயம்
புற்று அரவு அணிந்த புனிதனைக்காண அங்கு
உற்றனன் திருமால் ஊழ்வினை வலியால்
சுக்கிரபாணியைச் சான்றெனக் குறித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்கதோர் சூது விருப்புடன் ஆடச்
சாயக நேருந்தட நெடுங் கருகண்
நாயகி வெல்ல நாயகன் தோற்ப
இன்பவாய் இதழ் உமையான் வென்றேன் என
எமபெருமானும் யான் வென்றேன் என
ஒருவர்க்கொருவர் உத்தரம் பேசி
இருவரும் சாட்சி இவனைக்கேட்ப
மாமனை வதைத்த மால்முகம் நோக்கிக்
காமனை எரித்தோன் கண்கடைகாட்ட
வென்ற நாயகி தோற்றாள் என்றும்
தோற்ற நாயகன் வென்றான் என்றும்
ஓன்றியபொய்க்கரி உடன் அங்கு உரைப்ப
கன்றிய மனத்தொடு கவுரி அங்கு உருத்து
நோக்கிநீ இருந்தும் நுவன்றிலை உண்மை
வாக்கினில் ஒன்றாய் மனத்தினில் ஒன்றாய்
மைக்கரி உரித்தோன் வதனம் நோக்கி
பொய்க்கரி உரைத்த புன்மையினாலே
கனல் என வயிற்றில் கடும்பசி கனற்ற
நிலமிசைகுருட்டு நெட்டுடற்பாம்பாய்க்
கடகரி முகத்துக் கடவுள் வீற்று இருக்கும்
வடதரு நீழலில் கிட எனச் சபித்தாள்
முளரிகள் பூத்த முகில் நிறத்து உருப்போய்
துளவு அணி மருமகனுந்துணை விழி இழந்தே
ஆண்டு அரைக்கணத்தில் ஆயிரம் யோசனை
நீண்டபைப்பாந்தள் நெட்டுடல் எடுத்து
வளர்மருப்பு ஒன்றுடை வள்ளல் வீற்று இருக்கும்
கிளர்சினை ஆலின் கீழ்க் கிடந்த னனால்
திரிகடக்கரியின் திருமுகக் கடவுளும்
வழிபடும் அடியார் வல்வினை தீர்த்தே
எழில்பெறு வடமரத்தின்கீழ் இருந்தான்
கம்பமாமுகத்துக் கடவுள் தன் பெருமையை
அம்புவியோருக்கு அறிவிப்போம் என
உம்பர் உலகத்து ஓர் ஏழு கன்னியர்
தம்பநூல் ஏணியில் தாரணி வந்து
கரிமுகக்கடவுளைக் கைதொழுது ஏத்திக்
கார்த்திகைக் கார்த்திகை கழித்த பின் நாளில்
ஆர்த்த கலிங்கத்து அணியிழை வாங்கி
இருபத்தோர் இழை இன்புறக்கட்டி
ஒருபோது உண்டி உண்டு ஒரு மனமாய்
வேதத்து ஆதியும் பூமியில் எழுத்தும்
ஆதி விநாயகர்க்கு ஆன எழுத்தும்
மூன்று எழுத்து அதனால் மொழிந்த மந்திரமும்
தேன்தரும் குழலியர் சிந்தையுட் செபித்தே
உரைதருபதினாறு உபசாரத்தால்
வரைமகள் மதலையை வழிபாடு ஆற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபது நாளும் இப்படி நோற்று
மற்றைநாள் ஐங்கரன் மாமுகன் பிறந்த
அற்றைநாள் சதயமும் ஆறாம் பக்கமும்
சேரும் அத்தினத்தில் தெளிபுனல் ஆடி
வாரணமுகத்தோன் வருபெருங் கோயில்
சீர்பெற மெழுகி திருவிளக்கு ஏற்றி
குலவு பொற்கலைகள் கொடு விதானித்து
மலர்பல தொடுத்திடு மாலைகள் ஆற்றி
கொலைபுரி வடிவேற்குகற்குமுன் வருகை
மலைமுகக்கடவுளை மஞ்சனம் ஆட்டி
பொற்கலை நன்நூற் பூந்துகில் சாத்தி
சொற்பெறு சந்தணச் சுகந்தம் பூசி
செருத்தி சண்பகம் செங்கழுநீரொடு
குருத்து மல்லிகை கோங்கொடுபிச்சி
கருமுகைபுன்னை கடிகமழ் பாதிரி
மருவிரி ஞாழல் மகிழ் இருவாட்சி
தரமரைமுல்லை தளை அவிழ் கொன்றை
பூமலர் நொச்சி பூத்தமைக்குவளை
காந்தவள் ஆத்தி கடம்பு செவ்வந்தி
வாய்ந்த நல் எருக்கு மலர்க்கர வீரம்
பச்சிலை நொச்சி படர்கொடி அறுகு
முத்தளக் கூவிளம் முதலிய சாத்தி
தூபதீபங்கள் சுகம் பெறக் கொடுத்தே
அப்பம் மோதகம் அவல் எள்ளுருண்டை
முப்பழம் தேங்காய் முதிர்மொழிக் கரும்பு
சீனிதேன் சர்க்கரை செவ்விள நீருடன்
பால்நறு நெய்தயிர் பருப்புடன் போனகங்
கற்பகக்கடவுள் களித்திடத் திருமுன்
பொற்புறப்படைத்துப் பூசனைபண்ணி
நோற்பது கண்டு நோலாது இருந்த
மாப்புருவாகிய பஞ்சாயுதனும்
யாப்புறு கொங்கையீர் யானும் நோற்பேன் என
ஆங்கு அவன் தனக்கும் வேண்டுவது அளித்து
பாங்கொடு இவ்விரதம் பரிந்து நோற்பித்தார்
அண்டர் நாயகனாம் ஐங்கரன் அருளால்
விண்டுவும்பண்டுள வேடம் பெற்றே
உஞ்ஞை மாநகர் புகுந்து உமையொடு விமலன்
கஞ்சநாள் மலர்ப்பதம் கை தொழுதிடலும்
பஞ்சிமென் சீறடிப்பார்ப்பதி நெஞ்சில்
வெஞ்சினம் மிகுந்து விமலனை நோக்கி
யான் இடும்சாபம் நீங்கியது ஏனென
மானெடுங்கண்ணி மணிக்கதவு அடைப்ப
இறைவன் இதற்குக் காரணம் ஏது என
மறிகடல் துயிலும் மாயவன் உரைப்பான்
பிறைமருப்பு ஒன்றுடைப்பிள்ளை அன்று எனக்குத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்து அருள்புரிந்த தவப்பயன் ஈது எனச்
சிந்தை மகிழ்ந்து தேவர் தேவனும்
பூங்கொடி அடைத்த பொன்தாழ் நீங்கச்
சாங்குமுன் உரைத்த சங்கரபாணி
இக்கதை சொல்ல அக்கணிசடையனும்
மிக்கநல் விரதம் விருப்புடன் நோற்றபின்
மாதுமை அடைந்தவன் தாழ்நீங்கி
நாதனை நணுகிட நம்பனும் நகைத்தான்
நானே வந்து நகையானது எனத்
தேன்நேர் மொழியாள் தெளியக்கூறென
நன்மதி நுதலாய் நானியந்தன்னில்
உன்மகன் நோன்பின் உறுதி அறிந்து
சிந்தை மகிழ்ந்து சிரித்தேன் யானென
அந்தமில் அரனை ஆயிழை வணங்கிப்
பொருஞ்சூர் அறவேல் போக்கிய குமரன்
வரும்படியானும் வருந்தி நோற்பேன் என
இறைவன் கதைசொல ஏந்திழை நோற்றபின்
குறமடமகளைக் குலமணம் புணர்ந்தோன்
சுடர்வடிவேலோன் தொல்வினை தீர்த்து
தாதுமை வண்டு உழுந்தாமத் தாமனை
மாது உமையாளை வந்து கண்டனனே
கண்ணநீ கண்ணிலாக்கட் செவியாகு என
தண்நறுங்குழல் உமை சாபமிட்டதுவும்
அக்குநீறு அணியும் அரன்முதல் அளித்த
விக்கின விநாயக விரதம் நோற்று அதன்பின்
சுடர்க்கதை ஏந்தும் துளவ மாலையன்
விடப்பணி உருவம் விட்டு நீங்கியதும்
பரிவுகொள் கூத்துடைப்பரமனும் நோற்றுக்
கவுரி அன்று அடைத்த கபாடந் திறந்தும்
வாசமென் குழலுடை மாதுமை நோற்பத்
தேசம் போகிய செவ்வேள் வந்ததம்
வானவர் நோற்று வரங்கள் பெற்றதும்
நாரதமுனிவன் நவின்றிடக் கேட்டே
இந்நிலந்தன்னில் இவ்விரதத்தை
முன்னவன் வச்சிரமாலிமுன் நோற்றுக்
காயத்தெழுந்த கடும்பிணி தீர்ந்து
மாயிரும் புவியில் மன்னனாய் வாழ்ந்து
தடமுலைத்திலோத்தமை தனை மணம்புணர்ந்து
மழவிடைபோற்பல மைந்தரைப் பெற்று
கடைமுறை வெள்ளியங்கயிலையில் உற்றான்
பரிவொடு இவ்விரதம் பாரகந்தன்னில்
விரைகமழ் நறுந்தார் விக்கிரமாதித்தன்
மறிகடல்புவிபெற வருந்தி நோற்றிடு நாள்
மற்றவன் காதல் மடவரல் ஒருத்தி
இற்றிடும் இடையாள் இலக்கண சுந்தரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெத்த அன்புடன் இவ்விரதம் நோற்பேன் என
அந்தந்தன்னில் அணியிழை செறித்துச்
சுத்தம் மகிழ்ந்து சிலநாள் நோற்றபின்
ஊற்றநோன்பின் உறுதி மறந்து
கட்டிய இழையைக் காரிகை அவிழ்த்து
வற்றிய கொவ்வையின் மாடேபோட
ஆங்கு அது தழைத்தே அலருந்தளிருமாய்ப்
பாங்குற ஓங்கிப்படர்வது கண்டு
வேப்பஞ்சேரியில் போய்ச்சிறை இருந்த
பூப்பயில் குழல்சேர் பொற்றொடி ஒருத்தி
அவ்வியம் இல்லாள் அவ்விடந்தன்னில்
கொவ்வை அடகு கொய்வாள் குறுகி
இழையது கிடப்பக்கண்டு அவள் எடுத்து
குழைதவள் வரிவிழிக்கோதை கைக்கட்டி
அப்பமோடு அடைக்காய் அவைபல வைத்து
செப்பமுடனே திருந்திழை நோற்றிட
கரிமுகத்த அண்ணல் கரணை கூர்ந்து
பண்டையில் இரட்டி பதம் அவட்கு அருள
கொண்டு போய் அரசனும் கோயிலுள் வைத்தான்
விக்கிரமாதித்தன் விழிதுயில் கொள்ள
உக்கிரமான உடைமணி கட்டித்
தண்டையும் சிலம்பும் தாளில் நின்று ஒலிப்ப
கொண்டல்போல் வரும் குஞ்சரமுகத்தோன்
மனம் மிகக் கலங்கும் மன்னவன் தன்னிடம்
கனவினில் வந்து காரணமாக
இலக்கண சுந்தரி இம்மனை இருக்கில்
கலக்கம் வந்திடும் கழித்திடு புறத்தென
துண்ணென எழுந்து துணைவியை நோக்கி
கண்ணுறக்கண்ட கனவின் காரணம்
அண்ணல் உரைத்திடும் அவ்வழிதன்னில்
ஆனை குதிரை அவைபல மடிவுற
மாநகர் கேடுறும் வகையது கண்டு
இமைப்பொழுது இவள் இங்கு இருக்கலாகாது என
அயற்கடையவனும் அகற்றிய பின்னர்
வணிகன் தனது மனைபுகுந்து இருப்ப
மணியும் முத்தும் வலிய கல்லாய்விட
அணியிழைதன்னை அவனும் அகற்ற
உழவர் தம்மனையில் உற்று அவள் இருப்ப
வளர் பயிர் அழிந்து வளம்பல குன்ற
அயன்மனை அவரும் அகற்றிய பின்னர்
குயவன் மனையிற் கோற்றொடி செல்ல
குயக்கலம் உடைந்து கொள்ளைபோக
அயற்கடை அவனும் அகற்றிய பின்னர்
தூசு தூய்தாக்கும் தொழிலோர் மனைபுக
தூசுகளெல்லாம் துணிந்து வேறாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூசரும் அவளைத் தூரஞ் செய்ய
மாலைக்காரன் வளமனை புகலும்
மாலை பாம்பாம் வகையது கண்டு
ஞாலம் எல்லாம் நடுங்க வந்து உதித்தாய்
சாலவும் பாவி நீதான் யார் என்ன
வெம்மனம் மிகவும் மேவி முனிவுறா
அம்மனையவனும் அகற்றிய பின்னர்
அவ்வை தன்மனை அவள் புகுந்து இருப்ப
அவ்வை செல்லும் அகங்கள் தோறும்
வைதனர் எறிந்தனர் மறியத்தள்ளினர்
கைகொடு குற்றினர் கண்டோர் பழித்தனர்
அவ்வைமீண்டு தன் அகமதிற் சென்று
இவ்வகைக் கன்னி நீயாரென வினாவக்
காத்தாண்டு உலகு கருணையோடு ஆண்ட
மார்த்தாண்ட ராசன் மாமகள் ஒருத்தி
எல்லார்க்கும் மூத்தாள் இலக்கண சுந்தரி
சொல்லு விக்கிரம சூரியன் மனை எனச்
சீர்கெட இருந்த தெரிவையை நோக்கி
நீரது கொண்டு நிலம் மெழுகிடுகெனச்
சாணி எடுக்கத்தையலும் சென்றாள்
சாணியும் உழுத்துத் தண்ணீர் வற்றிப்
பேணிய புழுவாய்ப் பெரிது தோன்ற
மானேர் விழியாள் வருந்துதல் கண்டு
தானே சென்று சாணி எடுத்து
தண்ணீர் கொணர்ந்து தரை மெழுக்கிட்டு
மண்ணிய வீட்டில் மணிவிளக்கு ஏற்றிப்
புத்தகம் எடுத்து வா எனப்புகல
புத்தகம் பாம்பாய் பொருந்தி நின்று ஆட
மெத்த உள்நடுங்கி வீழ்ந்து அவள் கிடப்ப
கொவ்வையங்கனி வாய்க்கோதையை விலக்கி
அவ்வைதானே அகமதிச் சென்று
புத்தகம் எடுத்துப் பொருந்தப்பார்த்து
வித்தக நம்பி விநாயகமூர்த்தி
கற்பகப்பிள்ளை செய்காரியம் இதுவென
உத்தமி அவ்வை உணர்ந்து முன் அறிந்து
தவநெறி பிழைத்த தையலை நோக்கி
நுவலரும் விநாயக நோன்பு நோற்றிடுகென
கரத்து மூஏழு இழைக்காப்புக்கட்டி
அப்பமும் அவலும் ஆம்பல பண்டமும்
செப்பமதாகத் திருமுன் வைத்தே
அவ்வை கதைசொல ஆயிழை கேட்டு
மத்தகக் களிற்றின் மகா விரத்தை
வித்தகமாக விளங்கிழை நோற்றுக்
கற்பக நம்பி கருணைபெற்று அதன்பின்
சக்கரவாள சைனியத்தோடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கிரமாதித்தன் வேட்டையிற்சென்று
தானும் சேனையும் தண்ணீர் விரும்பி
எவ்வகை செய்வோம் என உளம் மெலிந்தே
அவ்வை தன்மனை அங்கவர் அணுக
எய்தும் தாகமும் இளைப்புங்கண்டு
செவ்வே அவற்றைத் தீர்க்க எண்ணி
இலக்கண சுந்தரி என்பவள் தன்னை
அப்பமும் நீரும் அரசர்க்கு அருள் என
செப்பிய அன்னை திருமொழிப்படியே
உண்ணீர்க்கரகமும் ஒரு பணிகாரமும்
பண்நேர் மொழியாள் பார்த்திபற்கு உதவ
ஒப்பறு படையும் உயர்படை வேந்தனும்
அப்பசிதீர அருந்திய பின்னர்
ஆனை குதிரை அவைகளும் உண்டும்
தானது தொலையாத் தன்மையைக்கண்டே
இவ்வகை சமைத்த நீயாரென வினவ
மவ்வலங்குழலாள் மௌனமாய் நிற்ப
அவ்வை தான் சென்று அரசர்க்கு உரைப்பாள்
கணபதி நோன்பின் காரணங்காண் இது
குணமுடையிவள் உன்குலமனையாட்டி
இலக்கண சுந்தரி என்று அவ்வை கூற
மாங்கையை நோக்கி மனம் மிகமகிழ்ந்து
திங்கள் நேர் வெள்ளிச்சிவிகையில் ஏற்றிச்
கொண்டு ஊர்புகுந்தான் கொற்ற வேந்தனும்
ஒண்டொடியாரில் உயர்பதம் உதவினன்
சிந்துரநுதலார் சென்று அடிபணியச்
சுந்தரி இருந்தாள் சுகத்துடன் மகிழ்ந்தே

## சிறப்புப்பாயிரம்

செந்தமிழ் முனிவன் செப்பிய கதையும்
கந்த புராணக் கதையில் உள்ளதுவும்
உபதேச காண்டத்துரைத்த நற்கதையும்
தேர்ந்தெடுத்து ஒன்றாத்திரட்டி ஐங்கரற்க
வாய்த்த நல்விரத மான்மியம் உரைத்தான்
கன்னியாங்கமுகில் கயலினம் குதிக்கும்
துன்னிய வளவயற் சுன்னாகத்தோன்
ஆரங்கநாதன் அளித்தருள் புதல்வன்
திரம் பெறு முருகனைத் தினம் தொறும்
வரம் பெற வணங்கும் வாத பண்டிதனே

## போற்றத்ததிரு அகவல்

அருள் புரிந்து அருளும் அரசே போற்றி
இருவினை துடைக்கும் இறைவா போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைமுனி ஒருவன் மாங்கனி கொணர்ந்து
கறைமிடற்று இறைவன் கையில் கொடுப்ப
வேலனும் நீயும் விரும்பி முன் நிற்ப
ஒரு நொடி அதனில் உலகெலாம் வலமாய்
வரும் அவா தமக்கு வழங்குவோம் யாம் என
விரைவுடன் மயில் மிசை வேலோன் வருமுனர்
அரனை வலம் வந்து அக்கனி வாங்கிய
விரகுள விக்கின விநாயகா போற்றி
முன்னடி தெரியா முதல்வனைப் போற்றிப்
பின்னடி தெரியாப் பெருங்கவிப் பெருமான்
மண்மிசை வைத்து உனை வாவியிற் செல்லக்
கண்ணிலான் இவனெனக் கரந்து அவன் போக
கரைமிசை ஏறிக் காணாது இரங்கி
உரை தடுமாறி உள்ளம் கலங்கி
கூ கூ என்றருள் குன்றே போற்றி
அப்பணி சடையோன் மும்புரம் எரிக்க
இப்புவியதனை இரதம் ஆக்கி
தினகரன் மதிதேர்ச்சில்லியாகப்
பொருவரு மறைகளே புரவியாகப்
பங்கயக் கண்ணன் பகழியாக
மலைசிலையாக வாசுகி நாணா
நிலைபெற நிற்கும் நெடுந்தேர் தன்னில்
விக்கினம் தீர்க்கும் விநாயக நம எனச்
சிக்கென இறைவன் செப்பாது ஏறலின்
தக்சுறச் சமைத்த தகைமணி நெடுந்தேர்
அச்சுறுத்த அருளும் அரசே போற்றி
வேதப் பொருளாம் விமலா போற்றி
பூதப் படையுடைப் புனிதா போற்றி
கரமைந்துடைய களிறே போற்றி
பரமன் பயந்த பாலா போற்றி
அகிலம் ஈன்று அருளும் அம்மை தனக்கு
திருமன்ஆகிய செல்வா போற்றி
அற்றவர்க்கு அருள் புரியும் அரசே போற்றி
கற்றவர் மனதில் காண்பாய் போற்றி
பாசாங்கு சங்கைபரிந்தாய் போற்றி
தேசார் மணிமுடித் தேவே போற்றி
எழுநரகு எழுபிறப்பு அறுப்பாய் போற்றி
எழுமையும் எமக்கு இங்கு இரங்குவாய் போற்றி
துளை செறி வக்கிர துண்டா போற்றி
வளநிகர் ஒற்றை மருப்பா போற்றி
சுரர் தொழும் முருகன் தமையனா போற்றி
நல்லவா புகழும் நம்பா போற்றி
வல்லபைக்கு உரிய மணவாளா போற்றி
கயமுகத்து அவுணனைக் காய்ந்தாய் போற்றி
வயமிகு மூஷிக வாகனா போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓங்காரத் தனி உருவே போற்றி
நீங்காக் கருணை நிமலா போற்றி
துறவர் தமக்கொரு துணைவா போற்றி
முறநிகர் தழைசெவி முதல்வா போற்றி
துண்டமாமதி போல் துலங்கிய கோட்டைக்
கண்டகமாகக் கை தனில் பிடித்துப்
பண்டு பாரதப் பழங்கதை பசும் பொன்
விண்டுவில் வரைந்த விமலா போற்றி
போற்றி போற்றியுன் பொற்பதம் போற்றி

## வருக்கைக் கோவை

சிந்தித்தோர் தொழு கணபதி செயசெய
சீரிய யானைக்கன்றே செயசெய
அன்புடைக் கடவுள்க்கு அதிபதி செயசெய
ஆபத்து அகற்றும் ஐங்கர செயசெய
இந்துச் சடைமுடி இறைவா செயசெய
ஈசன் பெற்ற எம்மான் செயசெய
உன்னிய முடிக்கும் ஒருவா செயசெய
ஊர்மனை சந்தி உகந்தாய் செயசெய
எம்பெருமானே ஏகனே செயசெய
ஏழுலகுந்தொழ இருப்பாய் செயசெய
ஐயா கணங்கட்கு ஆதி செயசெய
ஒற்றை மருப்பை உடையாய் செயசெய
ஓங்கிய கரிமுகம் உற்றாய் செயசெய
ஔவியம் இல்லாதவனே செயசெய
அஃகரவு அணிந்த ஆதி செயசெய
கண்மூன்றுடைய களிறே செயசெய
நுப்போல் மழு ஒன்று ஏந்தி செயசெய
சாங்கரன்தேர் அச்சறுத்தாய் செயசெய
ஞயமுடை வித்தக நம்பி செயசெய
இடமுடை விக்கினேசுரா செயசெய
இணங்கிய அன்பர்க்கு இனியாய் செயசெய
தத்துவம் உறைதருசாமி செயசெய
நன்னெறி வித்தக நம்பி செயசெய
பகீரதிக்கு இனிய பாலா செயசெய
மன்றுள் ஆடிமகனே செயசெய
இயக்கரைக்களையும் இறைவா செயசெய
அரவக்கிண்கிணி அணிவாய் செயசெய
இலவக்கொம்பு ஒன்று ஏந்தி செயசெய
வஞ்சனைப் பழவினை மாற்றுவாய் செயசெய
அழகிய வேலனுக்கு அண்ணா செயசெய
இளமத யானைமுகத்தாய் செயசெய
இறக்கரி சாடும் இறைவா செயசெய
அனந்தல் ஆடும் அரசே செயசெய
கரம் ஐந்து உடைய கணபதி செயசெய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமன் பகைவன் காதல செயசெய
கிரியில் பாரதம் தீட்டினாய் செயசெய
கீழ்மை ஒளித்துக்கிளர்வாய் செயசெய
குண்டைவண்டி வயிற்றாய் செயசெய
கூறிய மும்மதக்கோவே செயசெய
கெண்டையம் கண்ணுமை மகனே செயசெய
கேதாரப்பிரியம் ஆனாய் செயசெய
கையில் சக்கரம் உடையாய் செயசெய
கொவ்வைக்கனிவாய் மதலாய் செயசெய
கோலக்குடநிகர் வயிற்றாய் செயசெய
கௌவைப் பழவினை தீர்ப்பாய் செயசெய

## சப்பாணி

எள்ளு பொரிதேன் அவல் அப்பமிக்கும் பயருமிளநீரும்
வள்ளிக்கிழங்கும் மாம்பழமும்
வாழைப்பழமும் பலாப்பழமும் வெள்ளைப்பாலும்
மோதகமும் விரும்பிப்படைத்தேன் சந்நிதியில்
கொள்ளைக்கருணைக் கணபதியே
கொட்டியருள்க சப்பாணி.

சாலி நெல்லரிசி கொண்டு சரஸ்பதி பூசை பண்ணி
பாலொடு பயறுபரவிப் பாலாவித் தருவென் நங்காய்
நங்காய் நமோஸ்து ஞனக்கொழுந்தே நமோஸ்து
கல்விக்கழகே நமோஸ்து கணக்கரிவித்தே நமோஸ்து
எள்ளுப்பெரித்த பொரியவலும் எட்டப்பந்தன்னில் கலந்து
வள்ளிக்கிழங்கில் பிசைந்து வாழைப்பழத்தால் மயக்கி
ஒள்ளியபாகாய் திரட்டி உவக்கும் படிக்கு நான் தருவேன்
கள்ளத்திருமால் மருகா கணபதி சப்பாணி கெட்டியருளே.

சண்டப்பெருச்சாளி எறிச்சாடை கொண்டு
வையத்துலாவி அண்டத்து அமரர் துதிக்க
அடியார்க்கு அருளும் பிரானே எண்திக்கும்
அண்பர்கள் பார்க்க இணையற்ற பேரொளி வீச
குண்டைவண்டிக் கணபதி நம்பி
கொடுங்கையாற் சப்பாணி கொட்டே.

சண்டப்பெருச்சாளி எறித்தடையின்றி
வையமுலாவ விண்டத்தமரர் தனைக்கூட்டி
விளங்கிய ஒற்றை கொம்பூதி
அண்டத்தமரர் துதிபுரிய அடைக்கலம் புக்கும்
பிரானே குண்டைவண்டிக் கணபதி
கொடுங்கையாற் சப்பாணி கொட்டயே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருப்பும் பொரியவலும் பாலும் தேனும் மாங்கனியும்
வரிக்கைக்கரும்புக்கட்டியுடன் வாழைப்பழம் எள்ளுருண்டை
விருப்புற்று அமுது செய்தருளும் வேளமுகனை விநாயகனை
இருப்பில் இருக்கும் பெருமானை இட்டமாய் மலர்கொண்டு
இறைஞ்சுவமே.

தெங்கிழநீரொடு தேனும் பாலும் மாங்கனியும்
அங்கையில் அமயவாங்கி அமுது செய்து அருளியவனே
எங்கள் நாயகனை ஏகமருப்பனை கங்குலும் பகலும் ஏந்தக்
கருவினை கழிந்துபோமே

பொற்பானைக்கைமுக்கட் புகர்முகத்துப் பொன்மவுலிக்
கற்பகத்தின் நோன்பின் கதைதன்னை - சொற்பெருக
கற்றவரும் நோற்றவரும் காதலித்துக் கேட்டவரும்
பெற்றிடுவார் கற்பகத்தின் பேறு

வெள்ளை எருதேறும் விரிசடையோன் பெற்றெடுத்த
பிள்ளையார் நோன்பின் பெருங்கதையை - உள்ளபடி
நோற்றார் மிக வாழ்வார் நோராது அருகிருந்து
கேட்டோர்க்கும் வாராதுகேடு.

சூலிலார் நோக்கில் சுதரை மிகப்பெறுவார்
சாலமிகு வெங்கலியார் தான் நோக்கில் - மேலைப்
பிறப்பெல்லாம் நல்ல பெருஞ்செல்வம் எய்திச்
சிறப்பிலே வாழ்வார் சிறந்து.

பொன்னுமிகும் கல்விமிகும் புத்திரரோடு எப்பொருளும்
மன்னு நவமணியும் வந்தணுகும் - உன்னி
ஒருக்கொம்பின் யானைமுக உத்தமனார் நோன்பின்
திருக்கதையைக் கேட்கச்சிறந்து.

அருமறை முனிவர் வாழ்க வாவுமந்தணரும் வாழ்க
மருமலியுலகையாளும் மன்னர் செங்கோலும் வாழ்க
திருவளர் கணபதீசன் சிறந்தது நற்காதையன்பாற்
தருபுகழ் கற்போர் கேட்போர் தரணிமேல் வாழ்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


யாழ்ப்பாணம் காரைநகர்

# வாரி வளவென வழங்கும்

## கும்பரைப்புலத்தில் எழுந்தருளியிருக்கும்

## ஸ்ரீ கற்பக விநாயகர்

### திருவூஞ்சல்



காப்பு

சீர்மேவு மதி நதியோடரவு சூடுஞ்
சிவபெருமா னுமையருஞ் செல்வனாகிப்
பார்மேவு காரைநக ரதனி னீடும்
பதிவாரி வளவெனவே பகருமற்றோர்
பேர்மேவு கும்பரைப் புலத்தில் வாழும்
பெம்மானெங் கற்பக விநாயகன் மேல்
நார்மேவு மூஞ்சலிசை யொன்று பாட
நாடுமவன் திருவடிகள் காப்பதாமே

நூல்

துங்கமறு நால்வேதங் கால்களாகத்
தூய சிவா கமம வையுந் தரமதாக
அங்கமவை யோராறுங் கயிறதாக
ஆருமுப நிட தங்கள் பலவகையாகப்
பொங்கு மணியட்சரங்க ளணைகளாகப்
பொருந்து பிரணவமே யோருருவமாகக்
கங்கமிளிர் கும்பரைப் புலத்தில் வாழும்
கற்பகவி நாயகரே யாடீரூஞ்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்புயனு மரியுமிகு மகிழ்விற் கூட
அமரர்புரி பல்லாண்டினகில நீடக்
கிம்புருடர் கின்னரர்கள் கீதம் பாட
கிளிமொழியா ரரமகளிர் நடனமாடத்
தும்புருநா ரதரிசையின் யாழை நாடச்
சூலவரு கணநாதர் தாளம் போட
கம்புலவுங் கும்பரைப்பு லத்தில் வாழுங்
கற்பக விநாயகரே யாடீரூஞ்சல்.

ஏரணவுங் கண்ணாடி கவுரி காட்ட
இலகு குடை கொடியால வட்ட நீட்டத்
தோரணங்கண் மாலை நிரை தவசம் பூட்டச்
சோபிதமாய்த் தீப நிரையிருளை யோட்டப்
பாரணமா நிவேதனங்கள் பலவு மூட்டப்
பரவுமெழின் மாதருயர் வடந்தொட்டாட்டக்
காரணிசெய் கும்பரைப் புலத்தில் வாழும்
கற்பக விநாயகரே யாடீரூஞ்சல்

எண்ணிய வான் டொரு நூறொடைம்ப நின்முன்
இரவிசிதம் பரவுடையா ரிசைந்த பூசை
பண்ணியவா றவர் தோன்றல் காசிநாதர்
பரித்தபடி சேய்சுப்ப வுடையார் போற்றிப்
புண்ணியமார் புத்திரப் பேறடை வேண்டிப்
புரியுமடா லயமதனிற் பொழிந்த மூர்த்தி
கண்ணியமார் கும்பரைப் புலத்தில் வாழும்
கற்பகவி நாயகரே யாடீரூஞ்சல்

நற்கனக சூரியர்தம் மரபு பேணி
ஞால மிளிர் சுப்பவுடையாரின் செம்மல்
சற்குணனி ராமநாதன் தலைமை போற்றச்
சாருமசு பதிநாளி னாங்கு ரித்த
பொற்கலைதேர் மகன்புநருத் தாரணஞ் செய்
பொருவிறிருப் பணிக் கோயிலுறை யுந் தேவ
கற்கசரில் கும்பரைப் புலத்தில் வாழுங்
கற்பகவி நாயகரே யாடீரூஞ்சல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணியிலகு கோயிற்ப திட்டை யாதி
அரியதிருத் தொண்டினிடை மனமதாரக்
குணியிலகு நிதிகோலி வருடந்தோறும்
குலவு பணிபற்பலவுஞ் செய்வோர் மேலும்
மணியிலகு சுதர்முதல பாக்கியங்கள்
மருவியநல் வாழ்வருளுங் கடவுணீடுஞ்
கணியிலகு கும்பரைப் புலத்தில் வாழுங்
கற்பகவி நாயகரே யாடீரூஞ்சல்

மூவடியார் திருமேனி பொலிவு பூப்ப
முடிமுதலா மணிப்பணிகளிருள்கால் சீப்பச்
சேவடிகள் சேவிப்போர் கரங்கள் கூப்பச்
சேர்ருளிச் சித்திபுத்தி மகிழ்ந்து காப்பக்
கோவடையுந் தேவர்மலர் மாரிதூர்ப்பக்
கும்பமுனி தனக்கருளும் விமலநாத
காவடையுங்கும் பரைபுலத்தில் வாழும்
கற்பகவி நாயகரே யாடீரூஞ்சல்

உலகவுரு வானரத மதனிலூர்ந்து
உம்பருடனிம் பரமேயினிது போற்றும்
அலகிலிருவமை விழாச் சிறப்பு பூசை
ஆயமுறை நியமமாக வாண்டு தோறும்
இலகவினி தாற்று மெச மானன்றானும்
இருநிதிய மீய்குநரு மென்றும் வாழக்
கலைகள்மிகு கும்பரைப் புலத்தில் வாழுங்
கற்பகவி நாயகரே யாடீரூஞ்சல்

வேதமுதற் பொருளான தேவே போற்றி
வேண்டுவா மெவையுமரு டருவோய் போற்றி
பாதிமதி சூடியருள் பகவ போற்றி
பன்னிருகை வேலவனார் முன்னோய் போற்றி
மாதுவல வைக்கினிய மணாள போற்றி
வஞ்சனையார் கயமுகனை வதைத்தாய் போற்றி
காதரமில் கும்பரைப் புலத்தில் வாழுங்
கற்பக விநாயகரே யாடீரூஞ்சல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவைதருசீரைங் கரரே யாடீரூஞ்சல்
தேறாதார் பயங்கரரே யாடீரூஞ்சல்
சுவைதரு சீர்ப் பரம்பொருளீ ராடீரூஞ்சல்
தூயர்வர்தம் மனப்பொருளீ ராடீரூஞ்சல்
குவைதருமோங் காரமுளீ ராடீரூஞ்சல்
கதைதருபூங் கும்பரைப் புலத்தில் வாழுங்
கற்பக விநாயகரே யாடீரூஞ்சல்

## வாழி

மன்னுமறை யந்தணர் பின்னோர்கள் வாழி
படியிலுயர் மழைவழுஞ் சுரந்து வாழி
தன்னிகரில் சைவநெறி சிறந்து வாழி
தருவளரு மமரரொடு சுரபி வாழி
கன்னியர்கள் கற்பு நெறி நின்று வாழி
காரைநகர் கும்பரைப் புலத்தில் வாழுங்
சொன்ன நிறை கற்பக விநாயகன்றன்
சுகிர்த திருவருணீடு வாழி வாழி

## எச்சரிக்கை

மூவாமுழு முதலேகஜ முகனே யெச்ச ரீக்கை
மூவர் முதற் றேவர்பணி மூர்த்தி யெச்சரீக்கை
தூர்வாசமி மந்தாரைகொள் சோ தீ யெச்சரீக்கை
தொலையாப்பவத் தமுந்தாதருள் தோன்றா லெச்சரீக்கை
தூவேலவன் முன்னேவரு துணைவா வெச்சரீக்கை
தொன்மைக்கர மைந்தோடொளிர் தூயவெச்ச ரீக்கை
பூவார் பொழிற் காரைநகர் பொழிவாயெச்சரீக்கை
புகழார் கும்பரைப் புலத்தடியாரருட் புனிதா வெச்சரீக்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பராக்கு

ஓமெனுயர் பிரணவசொ ரூபா பராக்கு
உம்பர்பணி யம்பொனடி யுடையாய் பராக்கு
தோமில்சிவ சக்திதரு சுதனே பராக்கு
துன்னுகண நாதர் புகழ் ஸ்வாமி பராக்கு
வாமமுறு வலவை புணர் மகிணா பராக்கு
வஞ்சமிலர் நெஞ்சநிறை வரதா பராக்கு
சேம மிகு காரைகும்பரைப் புலத்தடியாய் பராக்கு
செகமுணர வரியபர தேவா பராக்கு

## மங்களம்

திருவந்த சதுர்மறைப் பிரகாச பிரணவந்
திகழ்ரூப திருமங்களம்
சிவகுமர மலரகித சின்மயப ராநந்த
செகதீச திருமங்களம்
அருமந்த ராமனுறு மதிவீர கத்திதெறு
மபிதான திருமங்களம்
அடர்சூர ணுரனூறு முருகேசன் முன்னவா
அமரேச திருமங்களம்
மருவந்த குழன்மாது வல்லபையின் பெருநேச
மணவாள திருமங்களம்
மகிமீதெ னிதமூறுவிசுவாச கணநாத
வரதீர திருமங்களம்
உருவந்த லட்டுகமொடங்குசம் பாசகர
மொளிர் தேச திருமங்களம்
உயிர்காரை நகர்மேவு கும்பரைப்புலப் பதிவாச
வுமைபால திருமங்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்



## திருவாசகச் சிறப்பு

தொல்லை யிரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே –எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம் என்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க

வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்சகன்தன் பெகழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள் மகிழும் கோன் கழல்கள் வெல்க
சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

ஈசன்அடி போற்றி எந்தை அடிபோற்றி
தேசன்அடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன்அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன்அடி போற்றி

ஆராத இன்பம் அருளும்மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயஉரைப் பன்யான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெதி
எண்ணுதற்கு எட்டா எழிலார்கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்கா விளங்கொளியா
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழும் ஆறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாப் புழுவா மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாப் பாம்பாகிக்
கல்லா மனிதராப் பேயாக் கணங்களா
வல்லசுரர் ஆகி முனிவராத் தேவராச்
செல்லா நின்ற இத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறத்திளைத்தேன் எம்பெருமான்
மெயேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உயஎன் உள்ளத்துள் ஓங்கார மாநின்ற
மெயா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெயா தணியா இயமானன் ஆம் விமலா
பொாஆயின எல்லாம் போஅகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி யில்லா அனைத்துலகும்
ஆக்குவா காப்பா அழிப்பா அருள்தருவா
போக்குவா என்னைப் புகுவிப்பா நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியா சேயா நணியானே
மாற்றம் மனம் கழிய நின்றமறை யோனே

கறந்தபால் கன்னலொடு நெகலந்தால் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையா விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தா எம்பெருமான் வல்வினையேன் தன்னை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்துஎங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பதுவாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையா கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசம்ஆம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதேஅளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீரா உருக்கி என் ஆருயிரா நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமா அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெஞ்"ானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்குஅரிய நோக்கே நுணுக்குஅரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றுஇன்ப வெள்ளமே அத்தா மிக்காநின்ற
தோற்றச் சுடரொளியாச் சொல்லாத நுண்ணுணர்வா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம் பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஓ என்றுஎன்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொ கெட்டு மெயானார்
மீட்டுஇங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம்பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்த சஷ்டி கவசம்



காப்பு

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம்
நெஞ்சில் பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலரருள்
கந்தர் சஷ்டி கவசந் தனை.

**குறள் வெண்பா**

அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

**நூல்**

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடனஞ் செயும் மயில்வா கனனார்
கையில் வேலால்எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உயொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன் றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல் பூஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்
றுன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாதனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே யிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க.
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கை எிரண்டும் கருணை வேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்ரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி னோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேகள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைக டின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவா பேகளும் குறளைப் பேகளும்
பெண்களைத் தொடரும் பிரம ராஷதரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லினு மிருட்டிலும் எதிர்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேகளும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்தோடிட
ஆனை யடியினில் அரும்பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமு மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைத்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாவிட் டலறி மதிகெட் டோட
படியினின் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்கைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் றணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலியும் கரடியும் இனித் தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செயான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதி னிலிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்பும் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வா
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவருமெனக்கா
மண்ணாளரசரும் மகிழ்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தா
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல் வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமக ணன்றா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினே னாடினேன் பரவச மாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியிலணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந்தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செ
கந்த சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துடனாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒரு நாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமா
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாற் காண மெயா விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேகள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத் தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெற்றிப் புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில் நட மிடுவோ மலரடி சரணம்
சரணஞ் சரணம் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்.

வேலும் மயிலும் துணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமியம்மை பதிகம்

## (திருக்கடவூர்)



கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்பமில்லாத வாழ்வும்
துய்ய நின் பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்;
அலை ஆழி அறிதுயிலும் மாயனது தங்கையே!
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல் குஞ்சரம் தொட்(டு) எறும்பு கடையானதொரு
பல்லுயிர்க்கும் கல்லிடைப்
பட்ட தேரைக்கும் அன்று உற்பவித்திடு
கருப்பையுறு சீவனுக்கும்
மல்கும் சராசரப் பொருளுக்கும் இமையாத
வானவர் குழாத்தினுக்கும்
மற்றுமொரு மூவர்க்கும் யாவர்க்கும் அவரவர்
மனச் சலிப்பில்லாமலே
நல்கும் தொழிற்பெருமை உண்டாயிருந்து மிகும்
நவநிதி உனக்கிருந்தும்
நானொருவன் வறுமையில் சிறியனானால் அந்
நகைப்புனக்கே அல்லவோ?
அல்கலந்(து) உம்பர் நாடளவெடுக்கும் சோலை
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே!

சலதி உலகத்தில் சராசரங்களை ஈன்ற
தாயாகினால் எனக்குத்
தாயல்லவோ? யான் உன் மைந்தனன்றோ? எனது
சஞ்சலம் தீர்த்து நின்றன்
முலை சுரந்(து) ஒழுகு பாலூட்டி என் முகத்தை உன்
முந்தானையால் துடைத்து
மொழிகின்ற மழலைக்கு உகந்து கொண்டு இளநிலா
முறுவல் இன்புற்றிருக்கில் யான்
குலவிவிளையாடல் கொண்டு அருள் மழை பொழிந்(து) அங்கை
கொட்டி வாவென்று அழைத்துக்
குஞ்சர முகன் கந்தனுக்(கு) இளையன் என்றெனைக்
கூறினால் ஈனம் உண்டோ?
அலைகடலிலே தோன்றும் மாறாத அமுதமே!
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைப்போது கொண்டுன் பதப்போது தன்னில்
கணப்போதும் அர்ச்சிக்கிலேன்
கண்போதினால் உன் முகப்போது தன்னை யான்
கண்டு தரிசனை புரிகிலேன்
முப்போதில் ஒரு போதும் என் மனப்போதிலே
முன்னி உன் ஆலயத்தின்
முன்போதுவார் தமது பின்போத நினைகிலேன்;
மோசமே போய் உழன்றேன்
மைப்போதகத்திற்கு நிகரெனப் போ(து) எரு
மைக்கடா மீதேறிய
மா கோர காலன் வரும்போது தமியேன்
மனம் கலங்கித் தியங்கும்
அப்போது வந்துன் அருட்போது தந்தருள்
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே!

மிகையும் துரத்த வெம் பிணியும் துரத்த
வெகுளியானதும் துரத்த
மிடியும் துரத்த நரை திரையும் துரத்த மிகு
வேதனைகளும் துரத்தப்
பகையும் துரத்த வஞ்சனையும் துரத்த
பசி என்பதும் துரத்த
பாவம் துரத்த அதிமோகம் துரத்த
பல காரியமும் துரத்த
நகையும் துரத்த ஊழ்வினையும் துரத்த
நாளும் துரத்த வெகுவாய்
நாவரண்டோடியே கால் தளர்ந்திடும் என்னை
நமனும் துரத்துவானோ?
அகில உலகங்கட்கும் ஆதார தெய்வமே!
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்கள்

பிறக்கும்பொழுது கொண்டுவந்தில்லை பிறந்து மண்மே
லிறக்கும் பொழுது கொண்டுபோவதில்லை யிடைநடுவிற்
குறிக்குமிச் செல்வஞ் சிவன்தந்த தென்று கொடுக்கறியா
திறக்குங் குலாமருக் கென்சொல்லுவேன் கச்சிஏகம்பனே.

ஓயாமல் பொய் சொல்வார் நல்லோரை நிந்திப்பார் உற்றுப் பெற்ற
தாயாரை வைவார் ஆயிரஞ் செய்வார் சாத்திரங்கள்
ஆயார் பிறர்க்குபகாரஞ் செய்யார் தமையண்டினார்க் கொன்றும்
ஈயார் இருந்தென்ன போயென்ன கச்சியேகம்பனே

கொல்லாமல் கொன்(று) அதனைத் தின்னாமல் குத்திரம் கோள் களவு
கல்லாமல் கைதவரோ(டு) இணங்காமல் கனவினும் பொய்
சொல்லாமல் சொற்களைக் கேளாமல் தோகையார் மாயையிலே
செல்லாமல் செல்வம் தருவாய் சிதம்பர தேசிகனே!

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலொரு
பிடிசாம்பராய் வெந்த மண்ணானதுங் கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லாற் பொன்னம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென்றே யறிவாரில்லையே!

பிறவாதிருக்க வரம்பெறல் வேண்டும் பிறந்துவிட்டா
லிறவாதிருக்க மருந்துண்டு காணிது வெப்படியோ
அறமார் புகழ்தில்லை யம்பல வாண ரடிக்கமல
மறவாதிரு மனமே யது காணன் மருந்துனக்கே

ஐயுந் தொடர்ந்து விழியுஞ் செருகி யறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவேன்யான்
செய்யுந் திருவொற்றி யூருடையீர்! திருநீறு மிட்டுக்
கையுந் தொழப்பண்ணி யைந்தெழுந்தோதவுங் கற்பியுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னால் பிரயோசனம் பொன்படைத்தாருக்குண்டு பொன்படைத்தோன்
தன்னால் பிரயோசனம் பொன்னுங்கங்கேதுண்டு அத்தன்மையைப்போல்
உன்னால் பிரயோசனம் வேணதெல்லா் உண்டு உன்னைப் பணியும்
என்னால் பிரயோசனம் ஏதுண்டு காளத்தி யிச்சரனே

பத்தும் புகுந்து பிறந்து வளர்ந்து பட்டாடை சுற்றி
முத்தும் பவளமும் பூண்டோடி யாடி முடிந்த பின்பு
செத்துக் கிடக்கும் பிணத்தருகே யினிச் சாம்பிணங்கள்
கத்தும் கணக்கென்ன? காண் கயிலாபுரிக் காளத்தியே!

வருந்தேன் பிறந்தும் இறந்தும் மயகும் புலன்வழிப் போய்ப்
பொருந்தேன் நரகில் புகுகின்றேன் புகழ்வாரிடத்தில்
இருந்தேன் இனியவர் கூட்டம் விடேன் இயல் அஞ்செழுத்தாம்
அரும்தேன் அருந்துவன் நின் அருளால் கயிலாயத்தானே

கண்ணுண்டு காணக் கருத்துண்டு நோக்கம் கசிந்துருகிப்
பண்ணுண்டு பாடச்செவியுண்டு கேட்கப் பல்பச்சிலையால்
எண்ணுண்டு சாத்த எதிர்நிற்க இருக்கையிலே
மண்ணுண்டு போகுதையோ கெடுவீர் இந்தமானுடமே

மாடுண்டு கன்றுண்டு மக்கள் உண்(டு) என்று மகிழ்வதெல்லாம்
கேடுண்(டு) எனும்படி கேட்டுவிட்டோம் இனிக் கேள் மனமே
ஓடுண்டு கந்தை உண்(டு) உள்ளே எழுத்தைந்தும் ஓத உண்டு
தோடுண்ட கண்டன் அடியார் நமக்குத் துணையும் உண்டே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதியை வெல்வது எப்படி?

சொல்லிய அருந்தமிழ் பத்தும் வல்லவர்
அல்லலோடு அருவினை அறுதல் ஆணையே (3-15-11)
-திருஞானசம்பந்தர்

## தோற்றுவாய் :

உலகில் உள்ள ஒவ்வொருவரும் ஏதாவது ஒருவகைத் துன்பத்தை அனுபவித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். துன்பமோ, துயரமோ, தொல்லையோ சிறிதும் இல்லாதவர் எவரும் இலர். துன்பங்கள் நம்மை ஏன் தொடர்கின்றன? துன்பங்கள் நமக்கு எப்படி ஏற்படுகின்றன? என்பனவற்றைத் துன்புறுபவர்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை. ஆனால் துன்பத்தைத் தாங்க இயலாமையால், அதனைப் போக்குவதற்கான வழிமுறைகளைத் தேடி அலைகிறார்கள்.

## சோதிட நம்பிக்கை :

அவ்வாறு தேடி அலைபவர்களில் பெரும்பாலோர் சோதிட நிபுணர்களைக் கண்டு, தமக்கு எப்போது இந்தத் துயர் நீங்கும் என்னும் தடையை எழுப்பிப் பெரும் பொருள் கொடுத்துச் சோதிடரின் விடைக்காகக் காத்துத் தவம் கிடக்கிறார்கள். சோதிடர்கள் கூறும் வெற்றுரைகளுக்குப் பெரும்மதிப்புக் கொடுத்துப் "பரிகாரம்" என்னும் பெயரால், பகுத்தறிவுக்கு ஒவ்வாதன பலவற்றைச் செய்து, பொருளையும் காலத்தையும் வீண்விரயம் செய்கிறார்கள். சோதிடர் கூறும் பரிகாரம் தமது துயரை நீக்குமா என்பதைக் குறித்துச் சிறிதேனும் அவர்கள் சிந்திப்பதில்லை.

சோதிடர்கள் எப்படிப் பலன் கூறுகிறார்கள்? நாம் பிறந்த போது நவக்கிரகங்கள் நிற்கும் இடத்தைப் பார்த்துச் சோதிட நூல்களில் கூறப்பட்டுள்ள விதிகளை அனுசரித்துச் சோதிடர்கள் பலன் சொல்கிறார்கள். அவற்றுள் சில பலிதமாகும், பல பலிதமாகாமல் போகும். சோதிடர்களின் வாக்குகளில் இருக்கும் நம்பிக்கை, இறைவனிடத்திலும் இறை அடியார்களின் அருள்வாக்குகளிலும் நம்மில் பலருக்கு இல்லை என்பது எனது அனுபவத்திற் கண்டது. எனவே தான் நம்மில் பெரும்பாலோர்க்குச் சோதிடர்கள் கூறிய பரிகாரங்களைச் செய்து முடித்த பிறகும் துயர்கள் நீங்கப் பெறாமல் தொடர்ந்த வண்ணம் உள்ளன. பலன் செல்லும் சோதிடர்களில் இறைபற்று உடையவர்கள் கூறும் பலன்களே பலிதமாகின்றன என்பதைப் பலர் அறியாமலிருக்கின்றனர்.

## நவக்கிரகங்களைப் பற்றிச் சில :

நவக்கிரகங்கள் நமது வாழ்வை எந்த அளவு பாதிக்கின்றன என்பதை நாம் ஓரளவு புரிந்து கொள்ள வேண்டும். அப்போது தான் நமது துயரைத்துடைப்பதற்கு எந்த வழியைப் பின்பற்றினால் அது பயனுள்ளதாக இருக்கும் என்பதில் நமக்கு தெளிவு ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவக்கிரகங்கள் இறைவனின் ஏவல்கள். இறைவன் வகுத்துள்ள சட்டப்படி பிராரத்துவம் எனப்படும் வினைப்பயன் ஆகிய விதியை நாம் அனுபவிக்கும்படி செய்வார்கள். இறைவனால் வகுக்கப்பட்ட சட்டங்களின் விதிகளில் ஏதேனும் ஒன்றைக் கூட்டியோ, குறைத்தோ, மாற்றியோ பலனைக் கொடுக்க நவக்கிரகங்களால் இயலாது என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். அரசு விதித்துள்ள சட்ட திட்டங்களுக்கு ஏற்பவே அரசு ஊழியர்கள் எதையும் செய்ய முடியும் அல்லவா. அதைப்போன்று நவக்கிரகங்களும் தமது விருப்பப்படி எந்த வினைப்பயனையும் யாருக்கும் நியதிக்கு மாறாகச் செய்ய முடியாது. நவக்கிரகங்களுக்கு அதற்குரிய உரிமை வழங்கப்பெறவில்லை.

சோதிட நூல்கள் நவக்கிரகங்கள் நமது சாதகத்தில் நிற்கும் நிலைக்கு ஏற்ப நமக்குள்ள விதி எப்படிப்பட்டது என்பதை கூறமுடியுமே அன்றி நமது ஏழ்மையைப் போக்குவதற்கான வழிவகைகளைக் கூறுவதில்லை. 'பரிகாரம்' என்ற பெயரில் கூறப்படுவனவெல்லாம் பிழைப்பு கருதிப் பேசப்படுவனவே அன்றிச் சிறந்த சோதிடச் சுவடிகளில், அதற்குப் பிரமாணம் இல்லை என்பதை சிறந்த நிபுணர்கள் அறிவார்கள். எனவே சனீசுவரனுக்கு எள்ளுப் பொட்டலம் போடுதல், செவ்வாய்க்கு செவ்வரளி மாலை போடுதல், இராகு கால வெள்ளிக்கிழமைகளில் இராகுக்கு வழிபாடு செய்தல் போன்ற நவக்கிரக சாந்திகள் எனக் கூறப்படுவன அனைத்தும் நமக்கு எற்பட்ட ஊழ்வினைத் தொல்லைகளிலிருந்து நம்மைக் காக்கமாட்டா என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். அப்படியானால் ஊழ்வினைத்துயரை நீக்குவதுதான் எப்படி?

## நமக்கு ஏற்பட்ட விதியின் வரலாறு :

காலம் என்னும் தத்துவம் தோன்றுவதற்கு முன்பு நாம் எப்படி இருந்தோம் என்பதைச் சற்றுச் சிந்திக்க வேண்டும். கடிகாரம் தேன்றுவதற்கு முன்பு நம் முன்னோர்கள் சூரியனின் நிலையைக் கொண்டு காலத்தைக் கணக்கிட்டு அறிந்து வந்தார்கள். இந்தச் சூரியனும் தோன்றுவதற்கு முன்பு எங்கும் இருள் சூழ்ந்திருக்க வேண்டும் அல்லவா? அத்தகைய கொடிய இருளில் நாம் அனைவரும் அறியாமை வயப்பட்டுக் கிடந்திருக்கிறோம். அந்நிலையில் இறைவன் நம் மீது இரக்கம் கொண்டு நமக்கு உருவமற்ற ஒரு நுண்ணுடல் எல்லா உயிர்களுக்கும் ஒரே மாதிரியானதாக வழங்கினார். அதனாலேயே பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும் என்று திருவள்ளுவர் கூறினார்.

அந்த நுண்ணுடலைப் பெற்றதும் நமது அறியாமை சிறிதளவு நீங்கியது. அப்போது நமது விருப்பு வெறுப்புக்கள் வெளிப்படலாயின. நமது விருப்பு வெறுப்புக்களுக்கு இசைந்த அளவில் ஒவ்வொரு உயிருக்கும் வெவ்வேறு விதமான பருவுடல்களை இறைவன் நமக்கு வழங்கினான். முதல் பருவுடலைப் பெற்றதே நமக்கு ஏற்பட்ட முதல் பிறப்பு ஆகும்.

அந்த முதல் பருவுடலில் இருந்து நாம் செய்த நல்வினைகளும், தீவினைகளும் அடுத்த பிறப்பில் நமக்கு இன்பங்களையும் துன்பங்களையும் தந்தன. நல்வினைக்குப் பயன் இன்பம். தீவினைக்குப் பயன் துன்பம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வினைகளை நமது அறிவின் நிலைக்கு ஏற்ப நமது விருப்பப்படியே நாம் செய்கிறோம். நமது விருப்பப்படியே நாம் செய்யும் செயல்களில் யாரும் தலையிடுவதை நாம் விரும்புவதில்லை. எனவே ஒவ்வொரு பிறப்பிலும் நாம் வினைகளைச் செய்து குவிக்கின்றோம். அந் வினைக்குவியலைச் "சஞ்சிதம்"என்று கூறுவர்.

அடுத்து அடுத்து வரும் பிறப்புக்களில் இறைவன் அந்த வினைக்குவியலிலிருந்து ஒரு பகுதியை எடுத்து நாம் திருந்தும் அளவுக்கு நமக்குப் பயனாக ஊட்டுகிறான். இந்த வினைப் பயனே "ஊழ்" அல்லது "விதி" எனப்படுகிறது. இதுவே நமக்கு ஏற்பட்ட விதியின் வரலாறு ஆகும்.

## வினைப்பயனை இறைவன் ஊட்டுதற்குக் காரணம் :

ஒவ்வொரு பிறப்பிலும் நமக்கு ஏற்படும் இன்பங்களை நாம் மகிழ்வுடன் அனுபவிக்கிறோம். துன்பங்களை அனுபவிக்க நாம் விரும்புவதில்லை. இன்ப விளைவுக்குக் காரணமான நல்வினைகளும் துன்ப விளைவுக்குக் காரணமான தீவினைகளும் நாம் செய்தவை தாமே என்னும் தெளிவு நம்மில் பலர்க்கு இல்லை.

இன்பங்களையும், துன்பங்களையும் இறைவன் மாற்றி மாற்றி நமக்கு ஊட்டுகின்றான். இவற்றை நாம் அனுபவிக்கும் போது நமது அறிவு தெளிவடைகின்றது. நமது துன்பங்களுக்குக் காரணம் நாம் செய்த தீவினைகளே என்னும் அறிவுத் தெளிவு நமக்கு ஏற்படுகின்றது. எனவே தீவினை செய்வதற்கு நமக்கு அச்சம் உண்டாகின்றது. அதனால் ஒரு வகைத் திருத்தம் ஏற்படுகின்றது. நமக்குள்ள சுயநலம் காரணமாகப் பிறருக்குத் தீமை செய்யக் கூடாது என்னும் தெளிவு பிறக்கிறது. இத் தெளிவு பல்வேறு பிறப்புக்களில் நமக்கு ஏற்பட்ட அனுபவம் காரணமாக உண்டாகிறது. இறைவன் நமக்கு வினைப்பயனை ஊட்டுவதற்குக் காரணம் நமது தவறுகளை நாமே உணர்ந்து வருந்தித் திருந்தும் பொருட்டே ஆகும் என்பதைத் தெளிவாக நாம் புரிந்த கொள்ள வேண்டும்.

எந்த ஒரு தந்தையும் தன் மகன் துன்புறவேண்டும் என்று விருப்புவதில்லை. ஆயினும் தன் மகன் தவறு செய்வதிலிருந்து திருந்த வேண்டும் என்று விரும்புவது இயல்பு. அதன் பொருட்டுத் தன் மகன் தாங்கும் அளவுக்குச் சிறிய தண்டனைகளைத் தந்தை வழங்குவார். அவ்வாறே உலகில் உள்ள எல்லா உயிர்களுக்கும் தந்தையாக இருக்கும் இறைவன் நாம் துன்புற வேண்டும் என்னும் நோக்கம் உடையவனாக இல்லை என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். நாம் திருந்த வேண்டும் என்னும் நோக்கத்திலேயே நாம் தாங்கும் அளவுக்கு இறைவன் சில தண்டனைகளை நமக்கு வழங்குகின்றான். அவ்வளவே

## இன்பமும் துன்பமும் :

நாம் அனைவரும் இன்பத்தை இருகரம் நீட்டி வரவேற்கிறோம். எனவே இன்பத்தையே எல்லோரும் விரும்புகின்றார்கள்.என்பது தெளிவாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பத்தை எவரும் விரும்பவில்லையாகலின் பிறருக்குத் துன்பம் தரும் எந்த ஒரு செயலையும் நாம் செய்யக் கூடாது என்பது இறைச்சட்டமாக இருக்கின்றது.

நம்மைச் சார்ந்து வாழும் நமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மட்டும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்னும் எண்ணத்தில் பிறருக்கு நாம் பலவகைகளில் துன்பம் செய்து கொண்டு இருக்கிறோம். அத்துன்பங்களை நாம் நேரடியாகச் செய்யாவிட்டாலும் மறைமுகமாகவாவது செய்கின்றோம். அறிந்து செய்தாலும், அறியாமல் செய்தாலும் தீவினை தீவினையே. அத்தீவினைகளுக்கும் பயனுண்டு. மறைமுகமாகச் செய்யும் தீவினைகளில் பொரும்பாலானவை சமூகத்திற்கும் நாட்டுக்கும் செய்யும் கேடுகளேயாகும். எனவே நமது பொறுப்பை உணர்ந்து எதைச் செய்தாலும் யாருக்கும் எந்தத் தீங்கும் நேராமல் இருக்கும் என்பதை எண்ணிப் பார்த்து நமது செயல்களைச் செய்ய வேண்டும்.

நாம் செய்யும் தீவினைகளுக்குரிய பயன்களாகிய துன்பங்களை நாம் திருந்தும் பொருட்டு இந்தப் பிறப்பிலும் இறைவன் அனுபவிக்குமாறு செய்வான். மறுபிறப்பிலும் அனுபவிக்குமாறு செய்வான். நாம் செய்யும் கொடிய தீவினைக்குரிய பயன்களை பல்வேறு பிறப்புக்களில் ஊட்டி ஊட்டி இறைவன் நம்மைத் திருத்துகிறான்.

எவ்வளவு தீவினைகளை நாம் செய்திருக்கிறோமோ அவ்வளவு துன்பங்களையும் நாம் அனுபவித்தே தீர்க்க வேண்டும் என்பது இறைவன் நோக்கம் அன்று. நமக்கு வழங்கப்பட்ட இந்தப்பிறப்பிலேயே நமது தவறகளுக்காக வருந்தி மேற் கொண்டு எந்தத் தீவினையையும் செய்யக்கூடாது என்ற உறுதிப்பாட்டுடன் திருந்தி வாழ்க்கையை நாம் மேற்கொள்வோம் ஆயின் நமக்கு துன்பம் ஊட்டுவதைச் சிறிது சிறிதாகக் குறைத்து இறைவன் நமக்கு நாம் எதிர்பாராத வகையில் நாம் செய்த நல்வினைப் பயனாகிய இன்பத்தை மிகுதியாக வழங்குவான். நமக்கு ஏற்படும் இன்ப துன்பங்களின் தன்மையை இந்த முறையில் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

## துன்பங்களிலிருந்து விடுபடுவது எப்படி?

பல சந்தர்ப்பங்களில் நாம் செய்யும் தவறுகள் நமக்குத் தெரிகின்றன. ஆயினும் எனக்கு ஏற்பட்ட சூழ்நிலையில் இதை நான் செய்தேன் என்று நமது மனச்சாட்சியைத் திருத்திப்படுத்தி விடுகிறோம். இன்னும் சொல்லப் போனால் நாம் செய்யும் தவறுகளுக்குக் காரணம் கண்டுபிடித்து நம்மையும் பிறரையும் ஏமாற்றிக் கொண்டு இருக்கிறோம்.

திருந்தவேண்டும் என்னும் எண்ணம் அடிக்கடி நமக்கு எற்படும். ஆனால் திருந்துவதற்கான வழி தெரியாமையால் திருத்தம் பெறாமல் திரும்பத் திரும்பத் தவறுகளைச் செய்து கொண்டே இருக்கிறோம். அவற்றின் பயனாகிய துன்பங்களையும் அனுபவித்துக் கொண்டும் இருக்கின்றோம். நமக்கு ஏற்படுகின்ற இந்த நிலைகளையெல்லாம் இறைவன் நன்றாக அறிந்து வைத்தே இருக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்த விரும்பும் ஒவ்வொருவரும் துன்பங்களிலிருந்து விடுபடுவதற்கு விரும்பும் ஒவ்வொருவரும் திருந்தி மகிழ்ச்சியாக வாழும் பொருட்டே இறைவன் அருளாளர்களை இப்பூவுலகிற்கு அனுப்பி அவர்களைக் கொண்டு அருள்வாக்குகளை வழங்கச் செய்திருக்கின்றான். அந்த அருள்வாக்குகள் நமது அறியாமையைப் போக்கி நம்மைத் திவினைகள் செய்வதிலிருந்து காப்பாற்றி நம்மைச் சிறிது சிறிதாக திருந்தச் செய்கின்றன. கொலைகாரர்களும் குணங் கெட்டவர்களும் கூட அந்த அருள்வாக்குகளைப் பாராயணம் செய்வார்களாயின் நல்லவர்களாகி விடுவார்கள். இவ்வுண்மையைச் சம்பந்தப் பெருமான் அருளிச் செய்த,

கொல்வாரேனும் குணம் பல நன்மைகள்
இல்லாரேனும் இயம்புவர் ஆயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவர் என்பரால்
நல்லார் நாமம் நமச்சிவாயவே.

என்னும் திருவாக்கு மெய்ப்படுத்துகின்றது. சிலர் வாழ்நாளின் பெரும் பகுதியைக் கழித்துவிட்டதால் இனித் தமக்கு எந்த வித கழுவாயும் இல்லை என்று நினைத்து அறுபது வயது ஆன பின்னர் தமக்கு உற்ற துன்பத்தை அனுபவித்தே ஆக வேண்டும் என்று வெதும்பிய உள்ளத்தோடு நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையில் உள்ளவர்களும் அருளாளர்களின் திருவாக்குள் ஆகிய திருமுறைகளைப் பாராயணம் செய்வாராயின் அவர்களுக்கும் துன்ப நீக்கம் எற்படும்.

இவ்வுண்மையை,

பாலனாய்க் கழிந்த நாளும் பனிமலர்க் கோதைமார்தம்
மேலனாய்க் கழிந்த நாளும், மெலிவோடு மூப்புவந்து
கோலனாய்க் கழிந்த நாளும் குறிக்கோள் இலாது கெட்டேன்
சேலுமாம் பழனவேலித் திருக்கொண்டீச் சரத்துள்ளானே.

என்னும் அப்பர் அருள்வாக்கு தெளிவுபடுத்துகின்றது. எனவே எந்த வயதினரும் தம் தவறுகளுக்காக வருந்தித் திருந்தினால் நிச்சயம் இறைவனால் மன்னிக்கப்படுவான் என்பது உண்மை. தவறுகள் செய்வது தடுக்க முடியாததாக இருக்கலாம். திருந்துவதற்கு முயற்சி செய்வது தவிர்க்க முடியாதது அல்லவா? என்ன தவறுகளைச் செய்தாலும் அதற்காக வருந்தி மீண்டும் தவறு செய்யாமல் இருந்தால் போதும் திருத்தம் ஏற்படும்.

இவ்வுண்மையைத் தெளிவுபடுத்தியே திருவள்ளுவர்,

எற்று என்று இரங்குவ செய்யற்க: செய்வானேல்
மற்று அன்ன செய்யாமை நன்று (655)

என்று "வினைத்தூய்மை" என்னும் அதிகாரத்தில் அருளிச் செய்திருப்பதைக் கருத்தில் இருத்திக் கொள்ளல் வேண்டும். (எற்றென்று - இந்தமாதிரித் தவறு செய்துவிட்டேனே என்று)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமுறைகள் ஓதுவதன் பயன் :**

எத்தனைதான் திருந்த வேண்டும் என்ற நாமாக விரும்பினாலும் நமக்குள்ள அறியாமை காரணமாக திரும்பத் திரும்பத் தவறுகளை நாம் செய்து கொண்டு தான் இருக்கிறோம். இந்த அறியாமையிலிருந்து நம்மை நாம் காத்துக் கொள்வதற்குத் திருமுறை வாக்குகள் பெரிதும் துணை செய்கின்றன.

இறைவன், வினைவயப்பட்டுத் துன்பப்படும் நாம் அனைவரும் திருந்தி உய்யும் பொருட்டு அருளாளர்களை இப்பூவுலகிற்கு அனுப்பி அவர்கள் வாயிலாக நமக்குத் தன் அருளிப்பாடுகளைச் செய்துள்ளான். அருளாளர்களை அதிட்டித்து நின்ற இறைவனே திருவாய் மலர்ந்து அருளிய சொற்களே திருமுறைகளில் உள்ளன. இவ்வுண்மையை "எனது உரை தனது உரையாக" என்று அருளிச் செய்துள்ள சம்பந்தப் பெருமான் திருவாக்கிலிருந்து அறியலாம். திருமுறைகளில் உள்ள ஒவ்வொரு "சொல்லும்" மந்திர ஆற்றல் உடையது. எனவே திருமுறைகளை நாம் பாராயணம் செய்யும் போது அதில் உள்ள மந்திர ஆற்றல் நமது உயிரில் கலந்து நமது அறியாமையைப் போக்கும் திறன் உடையது.

திருமுறைகளை ஓதி ஊழ்வலியிலிருந்து நாம் விடுபட்டு பிறவிப்பயனைப் பெறும் பொருட்டெ திருமுறைகளை இறைவன் நமக்கு வழங்கியுள்ளான். திருமுறைகளை இறைவன் தோற்றுவித்ததன் நோக்கம் இதுவே ஆகும். இவ்வுண்மையைச் சம்பந்தப் பொருமான் திருக்கடைக்காப்பில் உள்ள திருவாக்குகளிலிருந்து நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

நறுநீர் உகும் காழி ஞானசம்பந்தன்
வெறிநீர்த் திருப் பறியல் வீரட்டத்தானை
பொறிநீடு அரவன், புனைபாடல் வல்லார்க்கு
அறும்நீடு அவலம் அறும் பிறப்புத்தானே (1-134-11)

என்னும் திருக்கடைக்காப்பு இவவுண்மையை வலியுறுத்துகின்றது. ( நீடு அவலம் - நீண்ட நாட்களாக இருக்கும் துன்பம், அறும் - நீங்கும் ). திருமுறைகளைத் தவிர நாம் நமது துன்பங்களில் இருந்து விடுபடுவதற்கு வேறு எந்த உபாயமும் இல்லை. நாம் திருந்தி வாழ்வதற்குத் திருமுறைகளே பெரிதும் உதவுகின்றன.

திருமுறைகளில் உள்ள சொற்களில் உள்ள மந்திர ஆற்றல் நம்மை அறியாமலேயே நமக்கு வரவுள்ள துன்பங்களைப் போக்கி இன்பங்களை விளைவிக்கும் என்பதில் எள்ளளவுத் துணை ஐயப்பாட்டிற்கு இடம் இல்லை. இந்த மந்திர ஆற்றல் இறையாற்றல் ஆகும். அவற்றோடு நாம் நாள்தோறும் தொடர்பு கொள்ளும்போது அந்த இறையாற்றல் நம்மைத் திருத்துகின்றது. நம்மை அறியாமலேயே நாம் திருந்திக் கொண்டிருப்போம். திருந்திய மனிதனுக்கு வினைப்பயனை ஊட்டத் தேவை இல்லாததால் நாளடைவில் விதியை மாற்றும் வல்லமையும் திருமுறைப் படனம் நமக்குச் செய்து உதவுகிறது. எனவே திருமுறைகளை படனம் (பாராயணம்) செய்பவர்கள் விதியை வெல்ல முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுள் முழுவதும் எந்தவித குறையுமின்றி வாழ்வதற்கு ஓதவேண்டிய பதிகம்

திருப்பஞ்சாக்கரப்பதிகம்

பண் - காந்தாரபஞ்சமம் இராகம் - கேதாரகௌளை

திருச்சிற்றம்பலம்

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமின் நாடொறும்
வஞ்சகம் அற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே.

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை யாள்வன
செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே.

ஊனிலு யிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞானவி ளக்கினை யேற்றி நன்புலத்
தேனைவ ழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆனகெ டுப்பன அஞ்செ ழுத்துமே.

நல்லவர் தீயரெ னாது நச்சினர்
செல்லல் கெடச்சிவ முத்தி காட்டுவ
கொல்லந மன்தமர் கொண்டு போமிடத்
தல்லல்கெ டுப்பன அஞ்செ ழுத்துமே.

கொங்கலர் மன்மதன் வாளி யைந்தகத்
தங்குள பூதமும் அஞ்ச வைம்பொழில்
தங்கர வின்படம் அஞ்சுந் தம்முடை
அங்கையில் ஐவிரல் அஞ்செ ழுத்துமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்
அம்மையி னுந்துணை அஞ்செ ழுத்துமே.

வீடு பிறப்பை யறுத்து மெச்சினர்
பீடை கெடுப்பன பின்னை நாடொறும்
மாடு கொடுப்பன மன்னு மாநடம்
ஆடி யுகப்பன அஞ்செ ழுத்துமே.

வண்டம ரோதி மடந்தை பேணின
பண்டையி ராவணன் பாடி யுய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்த பின்னவர்க்
கண்டம் அளிப்பன அஞ்செ ழுத்துமே.

கார்வணன் நான்முகன் காணு தற்கொணாச்
சீர்வணச் சேவடி செவ்வி நாடொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்
கார்வண மாவன அஞ்செ ழுத்துமே.

புத்தர் சமண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்
கத்திர மாவன அஞ்செ ழுத்துமே.

நற்றமிழ் ஞானசம் பந்தன் நான்மறை
கற்றவன் காழியர் மன்னன் உன்னிய
அற்றமில் மாலையீ ரைந்தும் அஞ்செழுத்
துற்றன வல்லவர் உம்ப ராவரே.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நிலை சீர்பெறுவதற்கும் வறுமை நீங்குவதற்கும் ஓதவேண்டிய பதிகம்

## திருவாவடுதுறை

இறைவன் - மாசிலா மணீசுவரர் இறைவி - ஒப்பிலாமுலை அம்மையார்

பண் - காந்தாரபஞ்சமம் இராகம் - கேததாரகௌளை

திருச்சிற்றம்பலம்

1. இடரினுந் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே

இதுவோஎமை யாளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடு துறையரனே.

2. வாழினுஞ் சாவினும் வருந்தினும்போய்
வீழினும் உனகழல் விடுவேனல்லேன்
தாழயிளந் தடம்புனல் தயங்குசென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே

இதுவோஎமை யாளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடு துறையரனே.

3. நனவினுங் கனவினும் நம்பாவுன்னை
மனவினும் வழிபடல் மறவேன்அம்மான்
புனல்விரி நறுங்கொன்றைப் போதணிந்த
கனலெரி யனல்புல்கு கையவனே

இதுவோஎமை யாளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள்ஆவடு துறையரனே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. தும்மலோ டருந்துயர் தோன்றிடினும்
அம்மல ரடியலால் அரற்றாதென்நாக்
கைம்மல்கு வரிசிலைக் கணையொன்றினால்
மும்மதிள் எரியெழ முனிந்தவனே

இதுவோஎமை யாளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள்ஆவடு துறையரனே.

5. கையது வீழினுங் கழிவுறினுஞ்
செய்கழல் அடியலால் சிந்தைசெய்யேன்
கொய்யணி நறுமலர் குலாயசென்னி
மையணி மிடறுடை மறையவனே

இதுவோஎமை யாளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள்ஆவடு துறையரனே.

6. வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும்
எந்தாயுன் அடியலால் ஏத்தாதென்நா
ஐந்தலை யரவுகொண் டரைக்கசைத்த
சந்தவெண் பொடியணி சங்கரனே

இதுவோஎமை யாளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள்ஆவடு துறையரனே.

7. வெப்பொடு விரவியோர் வினைவரினும்
அப்பாவுன் னடியலால் அரற்றாதென்நா
ஒப்புடை யொருவனை உருவழிய
அப்படி அழலெழ விழித்தவனே

இதுவோஎமை யாளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள்ஆவடு துறையரனே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. பேரிடர் பெருகியோர் பிணிவரினுஞ்
சீருடைக் கழலலாற் சிந்தைசெய்யேன்
ஏருடை மணிமுடி இராவணனை
ஆரிடர் படவரை யடர்த்தவனே

இதுவோஎமை யாளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள்ஆவடு துறையரனே.

9. உண்ணினும் பசிப்பினும் உறங்கினும்நின்
ஒண்மல ரடியலால் உரையாதென்நாக்
கண்ணனுங் கடிகமழ் தாமரைமேல்
அண்ணலும் அளப்பரி தாயவனே

இதுவோஎமை யாளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடு துறையரனே.

10. பித்தொடு மயங்கியோர் பிணிவரினும்
அத்தாவுன் அடியலால் அரற்றாதென்நாப்
புத்தருஞ் சமணரும் புறனுரைக்கப்
பத்தர்கட் கருள்செய்து பயின்றவனே

இதுவோஎமை யாளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடு துறையரனே.

11. அலைபுனல் ஆவடு துறையமர்ந்த
இலைநுனை வேற்படை யெம்மிறையை
நலம்மிகு ஞானசம் பந்தன்சொன்ன
விலையுடை யருந்தமிழ் மாலைவல்லார்

வினையாயின நீங்கிப்போய் விண்ணவர் வியனுலகம்
நிலையாகமுன் னேறுவர் நிலமிசை நிலையிலரே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவும் உடையும் குறைவின்றிக் கிடைப்பதற்கு ஓதவேண்டிய பதிகம்

## திருப்புகலூர்

இறைவன் - அக்னீசுவரர் இறைவி - கருந்ததாழ்குழலியம்மை

பண் - கொல்லி இராகம் - நவரோசு

திருச்சிற்றம்பலம்

தம்மையேபுகழ்ந் திச்சைபேசினுஞ்
சார்வினுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதேயெந்தை
புகலூர்பாடுமின் புலவீர்காள்
இம்மையேதருஞ் சோறுங்கூறையும்
ஏத்தலாமிடர் கெடலுமாம்
அம்மையேசிவ லோகமாள்வதற்
கியாதுமையுற வில்லையே.

மிடுக்கிலாதானை வீமனேவிறல்
விசயனேவில்லுக் கிவனென்று
கொடுக்கிலாதானைப் பாரியேயென்று
கூறினுங்கொடுப் பாரிலை
பொடிக்கொள்மேனியெம் புண்ணியன்புக
லூரைப்பாடுமின் புலவீர்காள்
அடுக்குமேலம ருலகமாள்வதற்
கியாதுமையுற வில்லையே.

காணியேற்பெரி துடையனேகற்று
நல்லனேசுற்றம் நற்கிளை
பேணியேவிருந் தோம்புமேயென்று
பேசினுங்கொடுப் பாரிலை
பூணிபூண்டுழப் புட்சிலம்புந்தண்
புகலூர்பாடுமின் புலவீர்காள்
ஆணியாயம ருலகமாள்வதற்
கியாதுமையுற வில்லையே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரைகள்போந்துமெய் தளர்ந்துமூத்துடல்
நடுங்கிநிற்குமிக் கிழவனை
வரைகள்போல்திரள் தோளனேயென்று
வாழ்த்தினுங்கொடுப் பாரிலை
புரைவெள்ளேறுடைப் புண்ணியன்புக
லூரைப்பாடுமின் புலவீர்காள்
அரையனாயம ருலகமாள்வதற்
கியாதுமையுற வில்லையே.

வஞ்சநெஞ்சனை மாசழக்கனைப்
பாவியைவழக் கில்லியைப்
பஞ்சதுட்டனைச் சாதுவேயென்று
பாடினுங்கொடுப் பாரிலை
பொன்செய்செஞ்சடைப் புண்ணியன்புக
லூரைப்பாடுமின் புலவீர்காள்
நெஞ்சில்நோயறுத் துஞ்சுபோவதற்
கியாதுமையுற வில்லையே.

நலமிலாதானை நல்லனேயென்று
நரைத்தமாந்தரை இளையனே
குலமிலாதானைக் குலவனேயென்று
கூறினுங்கொடுப் பாரிலை
புலமெலாம்வெறி கமழும்பூம்புக
லூரைப்பாடுமின் புலவீர்காள்
அலமராதமர் உலகமாள்வதற்
கியாதுமையுற வில்லையே.

நோயனைத்தடந் தோளனேயென்று
நொய்யமாந்தரை விழுமிய
தாயன்றோபுல வோர்க்கெலாமென்று
சாற்றினுங்கொடுப் பாரிலை
போயுழன்றுகண் குழியாதேயெந்தை
புகலூர்பாடுமின் புலவீர்காள்
ஆயமின்றிப்போய் அண்டமாள்வதற்
கியாதுமையுற வில்லையே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எள்விழுந்திடம் பார்க்குமாகிலும்
ஈக்குமீகிலன் ஆகிலும்
வள்ளலேயெங்கள் மைந்தனேயென்று
வாழ்த்தினுங்கொடுப் பாரிலை
புள்ளெலாஞ்சென்று சேரும்பூம்புக
லூரைப்பாடுமின் புலவீர்காள்
அள்ளற்பட்டழுந் தாதுபோவதற்
கியாதுமையுற வில்லையே.

கற்றிலாதானைக் கற்றுநல்லனே
காமதேவனை யொக்குமே
முற்றிலாதானை முற்றனேயென்று
மொழியினுங்கொடுப் பாரிலை
பொத்திலாந்தைகள் பாட்டறாப்புக
லூரைப்பாடுமின் புலவீர்காள்
அத்தனாயம ருலகமாள்வதற்
கியாதுமையுற வில்லையே.

தையலாருக்கோர் காமனேயென்றுஞ்
சாலநல்வழக் குடையனே
கையுலாவிய வேலனேயென்று
கழறினுங்கொடுப் பாரிலை
பொய்கையாவியின் மேதிபாய்புக
லூரைப்பாடுமின் புலவீர்காள்
ஐயனாயம ருலகமாள்வதற்
கியாதுமையுற வில்லையே.

செறுவினிற்செழுங் கமலமோங்குதென்
புகலூர்மேவிய செல்வனை
நறவம்பூம்பொழில் நாவலூரன்
வனப்பகையப்பன் சடையன்றன்
சிறுவன்வன்றொண்டன் ஊரன்பாடிய
பாடல்பத்திவை வல்லவர்
அறவனாரடி சென்றுசேர்வதற்
கியாதுமையுற வில்லையே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்களில் உள்ள கோளாறு நீங்குவதற்கும் பார்வை இழந்த கண்களில் ஒளியைப் பெறுவதற்கும் ஓதவேண்டிய இரு பதிகங்கள்

## இடக்கண்ணில் இடர் நீங்குவதற்கு

திருக்கச்சி ஏகம்பம் (காஞ்சிபுரம்)

சுவாமிபெயர் - ஏகாம்பரநாதர் தேவியார் - காமாட்சியம்மை.
பண் - தக்கேசி இராகம் - காம்போதி

திருச்சிற்றம்பலம்

ஆலந் தானுகந் தமுதுசெய் தானை
ஆதி யைஅம ரர்தொழு தேத்துஞ்
சீலந் தான்பெரி தும்முடை யானைச்
சிந்திப் பாரவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாள்உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

உற்ற வர்க்குத வும்பெரு மானை
ஊர்வ தொன்றுடை யான்உம்பர் கோனைப்
பற்றி னார்க்கென்றும் பற்றவன் றன்னைப்
பாவிப் பார்மனம் பரவிக்கொண் டானை
அற்ற மில்புக ழாள்உமை நங்கை
ஆத ரித்து வழிபடப் பெற்ற
கற்றை வார்சடைக் கம்பனெம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரியும் முப்புரம் தீப்பிழம் பாகச்
செங்கண் மால்விடை மேற்றிகழ் வானைக்
கரியின் ஈருரி போர்த்துகந் தானைக்
காம னைக்கன லாவிழித் தானை
வரிகொள் வெள்வளை யாள்உமை நங்கை
மருவி யேத்தி வழிபடப் பெற்ற
பெரிய கம்பனை எங்கள்பி ரானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

குண்ட லந்திகழ் காதுடை யானைக்
கூற்று தைத்த கொடுந்தொழி லானை
வண்டலம் புமலர்க் கொன்றையி னானை
வாள ராமதி சேர்சடை யானைக்
கெண்டை யந்தடங் கண்ணுமை நங்கை
கெழுமி யேத்தி வழிபடப் பெற்ற
கண்டம் நஞ்சுடைக் கம்பனெம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வறே.

வெல்லும் வெண்மழு ஒன்றுடை யானை
வேலை நஞ்சுண்ட வித்தகன் றன்னை
அல்லல் தீர்த்தருள் செய்யவல் லானை
அரும றையவை அங்கம்வல் லானை
எல்லை யிற்புக ழாள்உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
நல்ல கம்பனை எங்கள் பிரானை
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

திங்கள் தங்கிய சடையுடை யானைத்
தேவ தேவனைச் செழுங்கடல் வளருஞ்
சங்க வெண்குழைக் காதுடை யானைச்
சாம வேதம் பெரிதுகப் பானை
மங்கை நங்கை மலைமகள் கண்டு
மருவி ஏத்தி வழிபடப் பெற்ற
கங்கை யாளனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ண வர்தொழு தேத்தநின் றானை
வேதந் தான்விரித் தோதவல் லானை
நண்ணி னார்க்கென்றும் நல்லவன் றன்னை
நாளும் நாம்உகக் கின்றபி ரானை
எண்ணில் தொல்புக ழாள்உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கண்ணும் மூன்றுடைக் கம்பனெம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

சிந்தித் தென்றும் நினைந்தெழு வார்கள்
சிந்தை யில்திக ழுஞ்சிவன் றன்னைப்
பந்தித் தவினைப் பற்றறுப் பானைப்
பாலோ டானஞ்சும் ஆட்டுகந் தானை
அந்த மில்புக ழாள்உமை நங்கை
ஆத ரித்து வழிபடப் பெற்ற
கந்த வார்சடைக் கம்பனெம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

வரங்கள் பெற்றுழல் வாளரக் கர்தம்
வாலி யபுரம் மூன்றெரித் தானை
நிரம்பி யதக்கன் றன்பெரு வேள்வி
நிரந்த ரஞ்செய்த நிட்கண் டகனைப்
பரந்த தொல்புக ழாள்உமை நங்கை
பரவி யேத்தி வழிபடப் பெற்ற
கரங்கள் எட்டுடைக் கம்பனெம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

எள்க லின்றி இமையவர் கோனை
ஈச னைவழி பாடுசெய் வாள்போல்
உள்ளத் துள்கி உகந்துமை நங்கை
வழிபடச் சென்று நின்றவா கண்டு
வெள்ளங் காட்டி வெருட்டிட அஞ்சி
வெருவி ஓடித் தழுவவெளிப் பட்ட
கள்ளக் கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றம் ஏறுகந் தேறவல் லானைப்
பெரிய எம்பெரு மானென்றெப் போதுங்
காணக் கண்அடி யேன்பெற்ற தென்று
கொற்ற வன்கம்பன் கூத்தனெம் மானைக்
குளிர்பொ ழிற்றிரு நாவலா ரூரன்
நற்ற மிழ்இவை ஈரைந்தும் வல்லார்
நன்னெ றிஉல கெய்துவர் தாமே.

திருச்சிற்றம்பலம்

## வலக்கண் கோளாறு நீங்குவதற்கு

திருவாரூர்
பண் - செந்துருத்தி இராகம் - மத்தியமாவதி

திருச்சிற்றம்பலம்

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப்
பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று
முகத்தால் மிகவாடி
ஆளா யிருக்கும் அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர்
வாழ்ந்து போதீரே.

விற்றுக் கொள்வீர் ஒற்றி யல்லேன்
விரும்பி ஆட்பட்டேன்
குற்ற மொன்றுஞ் செய்த தில்லை
கொத்தை ஆக்கினீர்
எற்றுக் கடிகேள் என்கண் கொண்டீர்
நீரே பழிப்பட்டீர்
மற்றைக் கண்தான் தாரா தொழிந்தால்
வாழ்ந்து போதீரே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றில் முட்டா தடையுஞ் சோலை
ஆஷஃரூர் அகத்தீரே
கன்று முட்டி உண்ணச் சுரந்த
காலி யவைபோல
என்றும் முட்டாப் பாடும் அடியார்
தங்கண் காணாது
குன்றில் முட்டிக் குழியில் விழுந்தால்
வாழ்ந்து போதீரே.

துருத்தி உறைவீர் பழனம் பதியாச்
சோற்றுத் துறையாள்வீர்
இருக்கை திருவா ஷஃரூரே உடையீர்
மனமே எனவேண்டா
அருத்தி யுடைய அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வருத்தி வைத்து மறுமை பணித்தால்
வாழ்ந்து போதீரே.

செந்தண் பவளந் திகழுஞ் சோலை
இதுவோ திருவாரூர்
எந்தம் அடிகேள் இதுவே ஆமா
றுமக்காட் பட்டோ ர்க்குச்
சந்தம் பலவும் பாடும் அடியார்
தங்கண் காணாது
வந்தெம் பெருமான் முறையோ வென்றால்
வாழ்ந்து போதீரே.

தினைத்தா ளன்ன செங்கால் நாரை
சேருந் திருவாரூர்ப்
புனைத்தார் கொன்றைப் பொன்போல் மாலைப்
புரிபுன் சடையீரே
தனத்தா லின்றித் தாந்தாம் மெலிந்து
தங்கண் காணாது
மனத்தால் வாடி அடியார் இருந்தால்
வாழ்ந்து போதீரே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயம் பேடை அடையுஞ் சோலை
ஆஷரூர் அகத்தீரே
ஏயெம் பெருமான் இதுவே ஆமா
மக்காட் பட்டோ ர்க்கு
மாயங் காட்டிப் பிறவி காட்டி
மறவா மனங்காட்டிக்
காயங் காட்டிக் கண்ணீர் கொண்டால்
வாழ்ந்து போதீரே.

கழியாய்க் கடலாய்க் கலனாய் நிலனாய்க்
கலந்த சொல்லாகி
இழியாக் குலத்திற் பிறந்தோம் உம்மை
இகழா தேத்துவோம்
பழிதா னாவ தறியீர் அடிகேள்
பாடும் பத்தரோம்
வழிதான் காணா தலமந் திருந்தால்
வாழ்ந்து போதீரே.

பேயோ டேனும் பிரிவொன் றின்னா
தென்பர் பிறரெல்லாங்
காய்தான் வேண்டிற் கனிதா னன்றோ
கருதிக் கொண்டக்கால
நாய்தான் போல நடுவே திரிந்தும்
உமக்காட் பட்டோ ர்க்கு
வாய்தான் திறவீர் திருவா ரூரீர்
வாழ்ந்து போதீரே.

செருந்தி செம்பொன் மலருஞ் சோலை
இதுவோ திருவாரூர்
பொருந்தித் திருமூ லத்தா னம்மே
இடமாக் கொண்டீரே
இருந்தும் நின்றுங் கிடந்தும் உம்மை
இகழா தேத்துவோம்
வருந்தி வந்தும் உமக்கொன் றுரைத்தால்
வாழ்ந்து போதீரே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரூர் கண்டத் தெண்டோ ள் முக்கண்
கலைகள் பலவாகி
ஆரூர்த் திருமூ லத்தா னத்தே
அடிப்பே ராரூரன்
பாரூர் அறிய என்கண் கொண்டீர்
நீரே பழிப்பட்டீர்
வாரூர் முலையாள் பாகங் கொண்டீர்
வாழ்ந்து போதீரே.

திருச்சிற்றம்பலம்

# சொல் சோர்வு நீங்குவதற்கும் திக்குவாய் மாறிச் சீர்பெறுவதற்கும் சிறந்த பேச்சாளர் ஆவதற்கும் ஓதவேண்டிய பதிகம்

## சிதம்பரம்

இறைவன் - திருமூலநாதர் இறைவி - உமையம்மை
இராகம் - மோகனம்

திருவாசகம் - திருச்சாழல் - சிவனுடைய காருணியம்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டடென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ.

என்னப்பன் எம்பிரான் எல்லார்க்குந் தானீசன்
துன்னம்பெய் கோவணமாக் கொள்ளுமது என்னேடீ?
மன்னுகலை துன்னுபொருள் மறைநான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ.

கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான் தனியன் காணேடீ
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் ஆயிடினும்
காயில் உலகனைத்துங் கற்பொடிகாண் சாழலோ.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயனை அனங்கனை அந்தகனைச் சந்திரனை
வயனங்கள் மாயா வடுச்செய்தான் காணேடீ
நயனங்கள் மூன்றுடை நாயகனே தண்டித்தால்
சயமன்றோ வானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ.

தக்கனையும் எச்சையும் தலையறுத்துத் தேவர்கணம்
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்ததுதான் என்னேடீ?
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்தருளி அருள்கொடுத்தங்கு
எச்சனுக்கு மிகைத்தலைமற் றருளினன் காண் சாழலோ.

அலரவனும் மாலவனும் அறியாமே அழலுருவாய்
நிலமுதற்கீழ் அண்டமுற நின்றதுதான் என்னேடீ?
நிலமுதற்கீழ் அண்டமுற நின்றிலனேல் இருவருந்தம்
சலமுகத்தால் ஆங்காரந் தவிரார்காண் சாழலோ.

மலைமகளை யொருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தால் அவன்சடையிற் பாயுமது என்னேடீ?
சலமுகத்தால் அவன்சடையிற் பாய்ந்திலளேல் தரணியெல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாஞ் சாழலோ.

கோலால மாகிக் குரைகடல்வாய் அன்றெழுந்த
ஆலாலம் உண்டான் அவன்சதுர்தான் என்னேடீ?
ஆலாலம் உண்டிலனேல் அன்றயன்மால் உள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ.

தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பா லுகந்திலனேற் பேதாய் இரு நிலத்தோர்
விண்பாலி யோகெய்தி வீடுவர்காண் சாழலோ.

தானந்தம் இல்லான் தனையடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத் தழுத்துவித்தான் காணேடீ
ஆனந்த வெள்ளத் தழுத்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்கோர் வான்பொருள்காண் சாழலோ.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நங்காய் இதென்னதவம் நரம்போ டெலும்பணிந்து
கங்காளந் தோள்மேலே காதலித்தான் காணேடீ
கங்காளம் ஆமாகேள் காலாந்த ரத்திருவர்
தங்காலஞ் செய்யத் தரித்தனன்காண் சாழலோ.

கானார் புலித்தோல் உடைதலைஊண் காடுபதி
ஆனா லவனுக்கிங் காட்படுவார் ஆரேடி?
ஆனாலும் கேளாய் அயனுந் திருமாலும்
வானாடர் கோவும் வழியடியார் சாழலோ.

மலையரையன் பொற்பாவை வாள்நுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டான் என்னுமது என்னேடீ
உலகறியத் தீவேளே தொழிந்தனனேல் உலகனைத்துங்
கலைநவின்ற பொருள்களெல்லாங் கலங்கிடுங்காண் சாழலோ.

தேன்புக்க தண்பனைசூழ் தில்லைச்சிற் றம்பலவன்
தான்புக்கு நட்டம் பயிலுமது என்னேடீ?
தான்புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணியெல்லாம்
ஊன்புக்க வேற்காளிக் கூட்டாங்காண் சாழலோ.

கடகரியும் பரிமாவும் தேரும்உகந் தேறாதே
இடபம்உகந் தேறியவா றெனக்கறிய இயம்பேடீ
தடமதில்கள் அவைமூன்றுந் தழலெரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ.

நன்றாக நால்வர்க்கும் நான்மறையின் உட்பொருளை
அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் காணேடீ
அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் ஆயிடினுங்
கொன்றான்காண் புரமூன்றுங் கூட்டோ டே சாழலோ.

அம்பலத்தே கூத்தாடி அமுதுசெயப் பலிதரியும்
நம்பனையுந் தேவனென்று நண்ணுமது என்னேடீ?
நம்பனையும் ஆமாகேள் நான்மறைகள் தாமறியோ
எம்பெருமான் ஈசாவென் றேத்தினகாண் சாழலோ.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலமுடைய சலந்தரன்தன் உடல்தடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கன் றருளியவா றென்னேடீ?
நலமுடைய நாரணன்தன் நயனம்இடந் தானடிக்கீழ்
அலராக இடஆழி அருளினன்காண் சாழலோ.

அம்பரமாம் புள்ளித்தோல் ஆலாலம் ஆரமுதம்
எம்பெருமான் உண்டசதுர் எனக்கறிய இயம்பேடீ
எம்பெருமான் ஏதுடுத்தங் கேதமுது செய்திடினும்
தம்பெருமை தானறியாத் தன்மையன்காண் சாழலோ.

அருந்தவருக் காலின்கீழ் அறமுதலா நான்கினையும்
இருந்தவருக் கருளுமது எனக்கறிய இயம்பேடீ?
அருந்தவருக் கறமுதல்நான் கன்றருளிச் செய்திலனேல்
திருந்தவருக் குலகியற்கை தெரியாகாண் சாழலோ.

திருச்சிற்றம்பலம்

# குடும்பத்திலுள்ள குழப்பங்கள் தீர்வதற்கும் குடும்பத்தில் உள்ளவர் அனைவரும் அமைதியுடன் வாழ்வதற்கும் ஓதவேண்டிய பதிகம்

திருக்கழுமலம்

இறைவன் - பிரமபுரீசுவரர் இறைவி - திருநிலைநாயகி

பண் - கொல்லி இராகம் - நவரோசு

திருச்சிற்றம்பலம்

மண்ணின்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின்நல் லகதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணின்நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணின்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையா ளவளொடும் பெருந்தகை யிருந்ததே.

தொண்டணை செய்தொழில் துயரறுத் துய்யலாம்
வண்டணை கொன்றையான் மதுமலர்ச் சடைமுடிக்
கண்டுணை நெற்றியான் கழுமல வளநகர்ப்
பெண்டுணை யாகவோர் பெருந்தகை யிருந்ததே.

அயர்வுளோம் என்றுநீ அசைவொழி நெஞ்சமே
நியர்வளை முன்கையாள் நேரிழை யவளொடுங்
கயல்வயல் குதிகொளுங் கழுமல வளநகர்ப்
பெயர்பல துதிசெயப் பெருந்தகை யிருந்ததே.

அடைவிலோம் என்றுநீ அயர்வொழி நெஞ்சமே
விடையமர் கொடியினான் விண்ணவர் தொழுதெழுங்
கடையுயர் மாடமார் கழுமல வளநகர்ப்
பெடைநடை யவளொடும் பெருந்தகை யிருந்ததே.

மற்றொரு பற்றிலை நெஞ்சமே மறைபல
கற்றநல் வேதியர் கழுமல வளநகர்ச்
சிற்றிடைப் பேரல்குல் திருந்திழை யவளொடும்
பெற்றெனை யாளுடைப் பெருந்தகை யிருந்ததே.

குறைவளை வதுமொழி குறைவொழி நெஞ்சமே
நிறைவளை முன்கையாள் நேரிழை யவளொடுங்
கறைவளர் பொழிலணி கழுமல வளநகர்ப்
பிறைவளர் சடைமுடிப் பெருந்தகை யிருந்ததே.

அரக்கனார் அருவரை யெடுத்தவன் அலறிட
நெருக்கினார் விரலினால் நீடியாழ் பாடவே
கருக்குவாள் அருள்செய்தான் கழுமல வளநகர்ப்
பெருக்குநீ ரவளொடும் பெருந்தகை யிருந்ததே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடியவன் பிரமனும் நினைப்பரி தாயவர்
அடியொடு முடியறி யாவழல் உருவினன்
கடிகமழ் பொழிலணி கழுமல வளநகர்ப்
பிடிநடை யவளொடும் பெருந்தகை யிருந்ததே.

தாருறு தட்டுடைச் சமணர்சாக் கியர்கள்தம்
ஆருறு சொற்களைந் தடியிணை யடைந்துய்ம்மின்
காருறு பொழில்வளர் கழுமல வளநகர்ப்
பேரறத் தாளொடும் பெருந்தகை யிருந்ததே.

கருந்தடந் தேன்மல்கு கழுமல வளநகர்ப்
பெருந்தடங் கொங்கையோ டிருந்தஎம் பிரான்றனை
அருந்தமிழ் ஞானசம் பந்தன செந்தமிழ்
விரும்புவா ரவர்கள்போய் விண்ணுல காள்வரே.

திருச்சிற்றம்பலம்

# கல்வியில் திறம் பெற்று உயர்வதற்கு ஓதவேண்டிய பதிகம்

திருக்கருப்பறியலூர் - திருவிராகம்

சுவாமிபெயர் - குற்றம்பொறுத்தநாதர் தேவியார் - கோல்வளையம்மை.

பண் - இந்தளம் இராகம் - நாதநாமக்கிரியை

திருச்சிற்றம்பலம்

சுற்றமொடு பற்றவை துயக்கற அறுத்துக்
குற்றமில் குணங்களொடு கூடும்அடி யார்கள்
மற்றவரை வானவர்தம் வானுலக மேற்றக்
கற்றவ னிருப்பது கருப்பறிய லூரே.

வண்டணைசெய் கொன்றையது வார்சடைகள் மேலே
கொண்டணைசெய் கோலமது கோளரவி னோடும்
விண்டணைசெய் மும்மதிலும் வீழ்தரவோ ரம்பால்
கண்டவ னிருப்பது கருப்பறிய லூரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதமொடு வேதியர்கள் வேள்விமுத லாகப்
போதினொடு போதுமலர் கொண்டுபுனை கின்ற
நாதனென நள்ளிருண்முன் ஆடுகுழை தாழுங்
காதவ னிருப்பது கருப்பறிய லூரே.

மடம்படு மலைக்கிறைவன் மங்கையொரு பங்கன்
உடம்பினை விடக்கருதி நின்றமறை யோனைத்
தொடர்ந்தணவு காலனுயிர் காலவொரு காலால்
கடந்தவ னிருப்பது கருப்பறிய லூரே.

ஒருத்தியுமை யோடுமொரு பாகமது வாய
நிருத்தனவன் நீதியவன் நித்தன்நெறி யாய
விருத்தனவன் வேதமென அங்கமவை யோதுங்
கருத்தவ னிருப்பது கருப்பறிய லூரே.

விண்ணவர்கள் வெற்பரசு பெற்றமகள் மெய்த்தேன்
பண்ணமரும் மென்மொழியி னாளையணை விப்பான்
எண்ணிவரு காமனுடல் வேவளரி காலுங்
கண்ணவ னிருப்பது கருப்பறிய லூரே.

ஆதியடி யைப்பணிய அப்பொடு மலர்ச்சேர்
சோதியொளி நற்புகை வளர்க்குவடு புக்குத்
தீதுசெய வந்தணையும் அந்தகன் அரங்கக்
காதின னிருப்பது கருப்பறிய லூரே.

வாய்ந்தபுகழ் விண்ணவரும் மண்ணவரும் அஞ்சப்
பாய்ந்தமர்செ யுந்தொழிலி லங்கைநகர் வேந்தற்
கேய்ந்தபுய மத்தனையும் இற்றுவிழ மேனாள்
காய்ந்தவ னிருப்பது கருப்பறிய லூரே.

பரந்தது நிரந்துவரு பாய்திரைய கங்கை
கரந்தொர்சடை மேன்மிசை யுகந்தவளை வைத்து
நிரந்தரம் நிரந்திருவர் நேடியறி யாமல்
கரந்தவ னிருப்பது கருப்பறிய லூரே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்றமறை யாவமண ராதமிலி புத்தர்
சொற்றமறி யாதவர்கள் சொன்னசொலை விட்டுக்
குற்றமறி யாதபெரு மான்கொகுடிக் கோயில்
கற்றென இருப்பது கருப்பறிய லூரே.

நலந்தரு புனற்புகலி ஞானசம் பந்தன்
'கலந்தவர் கருப்பறியல் மேயகட வுள்ளைப்
பலந்தரு தமிழ்க்கிளவி பத்துமிவை கற்று
வலந்தரு மவர்க்குவினை வாடலெளி தாமே.

திருச்சிற்றம்பலம்

**எடுத்தகாரியம் யாவினும் வெற்றி பெறுவதற்கும், விஷசுரம், விஷக்கடி, முதலியன நீங்குவதற்கும் தொண்டையில் உள்ள கோளாறுகள் அனைத்தும் நீங்கி குரல் வளம் பெறுவதற்கும், செய்வினை, பில்லி சூனியம் பாதிக்காமல் இருக்கும் பொருட்டும், துணிவுடன் செயலாற்றுவதற்கும், இளைய சகோதரன் நலம் பெறுவதற்கும் ஓதவேண்டிய பதிகம்**

திருநீலகண்டம்

பண் - வியாழக்குறிஞ்சி இராகம் - சௌராஷ்ட்டிரம்

அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு மஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பதும் உந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழற் போற்றுதும் நாமடியோஞ்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.

காவினை யிட்டுங் குளம்பல தொட்டுங் கனிமனத்தால்
ஏவினை யாலெயில் மூன்றெரித் தீரென் றிருபொழுதும்
பூவினைக் கொய்து மலரடி போற்றுதும் நாமடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முலைத்தடம் மூழ்கிய போகங்களும்மற் றெவையு மெல்லாம்
விலைத்தலை யாவணங் கொண்டெமை யாண்ட விரிசடையீர்
இலைத்தலைச் சூலமுந் தண்டும் மழுவும் இவையுடையீர்
சிலைத்தெமைத் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.

விண்ணுல காள்கின்ற விச்சா தரர்களும் வேதியரும்
புண்ணிய ரென்றிரு போதுந் தொழப்படும் புண்ணியரே
கண்ணிமை யாதன மூன்றுடை யீருங் கழலடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.

மற்றிணை யில்லா மலைதிரண் டன்னதிண் டோ ளுடையீர்
கிற்றெமை யாட்கொண்டு கேளா தொழிவதுந் தன்மைகொல்லோ
சொற்றுணை வாழ்க்கை துறந்துந் திருவடி யேயடைந்தோம்
செற்றெமைத் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.

மறக்கு மனத்தினை மாற்றியெம் மாவியை வற்புருத்திப்
பிறப்பில் பெருமான் திருந்தடிக் கீழ்ப்பிழை யாதவண்ணம்
பறித்த மலர்கொடு வந்துமை யேத்தும் பணியடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.

இப்பதிகத்தில் 7-ம் செய்யுள் சிதைந்து போயிற்று.

கருவைக் கழித்திட்டு வாழ்க்கை கடிந்துங் கழலடிக்கே
உருகி மலர்கொடு வந்துமை யேத்துதும் நாமடியோம்
செருவி லரக்கனைச் சீரி லடர்த்தருள் செய்தவரே
திருவிலித் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.

நாற்ற மலர்மிசை நான்முகன் நாரணன் வாதுசெய்து
தோற்ற முடைய அடியும் முடியுந் தொடர்வரியீர்
தோற்றினுந் தோற்றுந் தொழுது வணங்குதும் நாமடியோம்
சீற்றம தாம்வினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.

சாக்கியப் பட்டுஞ் சமணுரு வாகி யுடையொழிந்தும்
பாக்கிய மின்றி இருதலைப் போகமும் பற்றும்விட்டார்
பூக்கமழ் கொன்றைப் புரிசடை யீரடி போற்றுகின்றோம்
தீக்குழித் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்த பிறவியிற் பேணியெஞ் செல்வன் கழலடைவான்
இறந்த பிறவியுண் டாகில் இமையவர் கோனடிக்கண்
திறம்பயில் ஞானசம் பந்தன செந்தமிழ் பத்தும்வல்லார்
நிறைந்த உலகினில் வானவர் கோனொடுங் கூடுவரே.

திருச்சிற்றம்பலம்

## தாயாரின் உடல்நிலை சீர்பெறுவதற்கும், பிரசவம் சுகமாக அமைவதற்கும், உறவினர் நண்பர்களின் தொடர்பு நன்கு அமையப்பெறுவதற்கும், வீடு, மனை முதலியன செம்மையுறக் கட்டி முடிப்பதற்கும் ஓதவேண்டிய பதிகம்

திருச்சிராப்பள்ளி

சுவாமிபெயர் - தாயுமானேசுவரர் தேவியார் - மட்டுவார்குழலம்மை.
பண் - குறிஞ்சி இராகம் - அரிகாம்போதி

திருச்சிற்றம்பலம்

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளே
றொன்றுடையானை உமையொருபாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளங் குளிரும்மே.

கைம்மகவேந்திக் கடுவனொடூடிக் கழைபாய்வான்
செம்முகமந்தி கருவரையேறுஞ் சிராப்பள்ளி
வெம்முகவேழத் தீருரிபோர்த்த விகிர்தாநீ
பைம்முகநாகம் மதியுடன்வைத்தல் பழியன்றே.

மந்தம்முழவம் மழலைததும்ப வரைநீழல்
செந்தண்புனமுஞ் சுனையுஞ்சூழ்ந்த சிராப்பள்ளிச்
சந்தம்மலர்கள் சடைமேலுடையார் விடையூரும்
எந்தம்மடிகள் அடியார்க்கல்லல் இல்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைமல்குசாரற் சுனைமல்குநீலத் திடைவைகிச்
சிறைமல்குவண்டுந் தும்பியும்பாடுஞ் சிராப்பள்ளிக்
கறைமல்குகண்டன் கனலெரியாடுங் கடவுள்ளெம்
பிறைமல்குசென்னி யுடையவனெங்கள் பெருமானே.

கொல்லவரையாத கொள்கையர்தங்கண் மதின்மூன்றுஞ்
சிலைவரையாகச் செற்றனரேனுஞ் சிராப்பள்ளித்
தலைவரைநாளுந் தலைவரல்லாமை யுரைப்பீர்காள்
நிலவரைநீல முண்டதும்வெள்ளை நிறமாமே.

வெய்யதண்சாரல் விரிநிறவேங்கைத் தண்போது
செய்யபொன்சேருஞ் சிராப்பள்ளிமேய செல்வனார்
தையலொர்பாகம் மகிழ்வர்நஞ்சுண்பர் தலையோட்டில்
ஐயமுங்கொள்வர் ஆரிவர்செய்கை அறிவாரே.

வேயுயர்சாரல் கருவிரலூகம் விளையாடும்
சேயுயர்கோயில் சிராப்பள்ளிமேய செல்வனார்
பேயுயர்கொள்ளி கைவிளக்காகப் பெருமானார்
தீயுகந்தாடல் திருக்குறிப்பாயிற் றாகாதே.

மலைமல்குதோளன் வலிகெடவூன்றி மலரோன்றன்
தலைகலனாகப் பலிதிரிந்துண்பர் பழியோரார்
சொலவலவேதஞ் சொலவலகீதஞ் சொல்லுங்கால்
சிலவலபோலுஞ் சிராப்பள்ளிச்சேடர் செய்கையே.

அரப்பள்ளியானும் மலருறைவானும் அறியாமைக்
கரப்புள்ளிநாடிக் கண்டிலரேனுங் கல்சூழ்ந்த
சிரப்பள்ளிமேய வார்சடைச்செல்வர் மனைதோறும்
இரப்புள்ளீரும்மை ஏதிலர்கண்டால் இகழாரே.

நாணாதுடைநீத் தோர்களுங்கஞ்சி நாட்காலை
ஊணாப்பகலுண் டோ துவோர்கள் உரைக்குஞ்சொல்
பேணாதுறுசீர் பெறுதுமென்பீரெம் பெருமானார்
சேணார்கோயில் சிராப்பள்ளிசென்று சேர்மினே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனயம்பாடுஞ் சிராப்பள்ளியானைத் திரைசூழ்ந்த
கானல்சங்கேறுங் கழுமலவூரில் கவுணியன்
ஞானசம்பந்தன் நலம்மிகுபாடல் இவைவல்லார்
வானசம்பந்தத் தவரொடுமன்னி வாழ்வாரே.

திருச்சிற்றம்பலம்

# மக்கட் செல்வம் வாய்க்கப் பெறுவதற்கும் பட்டிமன்றம், கருத்தரங்கம் முதலியவற்றில் வாதத்திறமை பெறுவதற்கும் எழுத்தாற்றல் பெறுவதற்கும் தத்துவ ஞானத் தெளிவினைப் பெறுவதற்கும் ஓதவேண்டிய பதிகம்

திருவெண்காடு

சுவாமிபெயர் - சுவேதாரணியேசுவரர் தேவியார் - பிரமவித்தியாநாயகியம்மை.

பண் - சீகாமரம் இராகம் - நாதநாமக்கிரியை

திருச்சிற்றம்பலம்

கண்காட்டு நுதலானுங் கனல்காட்டுங் கையானும்
பெண்காட்டும் உருவானும் பிறைகாட்டுஞ் சடையானும்
பண்காட்டும் இசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும் விடைகாட்டுங் கொடியானே.

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே.

மண்ணொடுநீ ரனல்காலோ டாகாயம் மதியிரவி
எண்ணில்வரு மியமானன் இகபரமு மெண்டிசையும்
பெண்ணினொடாண் பெருமையொடு சிறுமையுமாம் பேராளன்
விண்ணவர்கோன் வழிபடவெண் காடிடமா விரும்பினனே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடமுண்ட மிடற்றண்ணல் வெண்காட்டின் தண்புறவின்
மடல்விண்ட முடத்தாழை மலர்நிழலைக் குருகென்று
தடமண்டு துறைக்கெண்டை தாமரையின் பூமறையக்
கடல்விண்ட கதிர்முத்த நகைகாட்டுங் காட்சியதே.

வேலைமலி தண்கானல் வெண்காட்டான் திருவடிக்கீழ்
மாலைமலி வண்சாந்தால் வழிபடுநன் மறையவன்றன்
மேலடர்வெங் காலனுயிர் விண்டபினை நமன்தூதர்
ஆலமிடற் றான்அடியார் என்றடர அஞ்சுவரே.

தண்மதியும் வெய்யரவுந் தாங்கினான் சடையினுடன்
ஒண்மதிய நுதலுமையோர் கூறுகந்தான் உறைகோயில்
பண்மொழியால் அவன்நாமம் பலவோதப் பசுங்கிள்ளை.
வெண்முகில்சேர் கரும்பெணைமேல் வீற்றிருக்கும் வெண்காடே.

சக்கரமாற் கீந்தானுஞ் சலந்தரனைப் பிளந்தானும்
அக்கரைமே லசைத்தானும் அடைந்தயிரா வதம்பணிய
மிக்கதனுக் கருள்சுரக்கும் வெண்காடும் வினைதுரக்கும்
முக்குளம்நன் குடையானும் முக்கணுடை இறையவனே.

பண்மொய்த்த இன்மொழியாள் பயமெய்த மலையெடுத்த
உன்மத்தன் உரம்நெரித்தன் றருள்செய்தான் உறைகோயில்
கண்மொய்த்த கருமஞ்ஞை நடமாடக் கடல்முழங்க
விண்மொய்த்த பொழில்வரிவண் டிசைமுரலும் வெண்காடே.

கள்ளார்செங் கமலத்தான் கடல்கிடந்தான் எனஇவர்கள்
ஒள்ளாண்மை கொளற்கோடி உயர்ந்தாழ்ந்தும் உணர்வரியான்
வெள்ளானை தவஞ்செய்யும் மேதகுவெண் காட்டானென்
றுள்ளாடி உருகாதார் உணர்வுடைமை உணரோமே.

போதியர்கள் பிண்டியர்கள் மிண்டுமொழி பொருளென்னும்
பேதையர்கள் அவர்பிரிமின் அறிவுடையீர் இதுகேண்மின்
வேதியர்கள் விரும்பியசீர் வியன்திருவெண் காட்டானென்
றோதியவர் யாதுமொரு தீதிலரென் றுணருமினே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்பொழில்சூழ் சண்பையர்கோன் தமிழ்ஞான சம்பந்தன்
விண்பொலிவெண் பிறைச்சென்னி விகிர்தனுறை வெண்காட்டைப்
பண்பொலிசெந் தமிழ்மாலை பாடியபத் திவைவல்லார்
மண்பொலிய வாழ்ந்தவர்போய் வான்பொலியப் புகுவாரே.

## வெப்பம் மிகுதியால் ஏற்படும் சுரநோய், பித்தசுரம், முதலிய நோய்கள் நீங்குவதற்கு ஓதவேண்டிய பதிகம்

திருஆலவாய் - திருநீற்றுப்பதிகம்

இறைவன் - சொக்கநாதர் இறைவி - மீனாட்சியம்மை

பண் - காந்தாரம் இராகம் - நவரோசு

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே.

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு வுண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே.

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருஆல வாயான் திருநீறே.

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருஆல வாயான் திருநீறே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருஆல வாயான் திருநீறே.

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே.

எயிலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தால வாயான் திருநீறே.

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி ஆல வாயான் திருநீறே.

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் மால வாயான் திருநீறே.

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூட
கண்டிகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளார் ஏத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்தும் ஆல வாயான் திருநீறே.

ஆற்றல் அடல்விடை யேறும் ஆலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகைவர்களால் ஏற்படும் தொல்லைகளைப் போக்குவதற்கும், சிறை வாசத்தைத் தடுப்பதற்கும், சிறையிலிருந்து விரைவில் விடுபடுவதற்கும் ஓத வேண்டிய பதிகம்

திருஆலவாய்

இறைவன் - சொக்கநாதர் | இறைவி - மீனாட்சியம்மை

பண் - கௌசிகம் | இராகம் - பயிரவி

திருச்சிற்றம்பலம்

செய்ய னேதிரு ஆலவாய் மேவிய
ஐய னேயஞ்ச லென்றருள் செய்யெனைப்
பொய்ய ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பைய வேசென்று பாண்டியற் காகவே.

சித்த னேதிரு ஆலவாய் மேவிய
அத்த னேயஞ்ச லென்றருள் செய்யெனை
எத்த ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பத்தி மன்தென்னன் பாண்டியற் காகவே.

தக்கன் வேள்வி தகர்த்தருள் ஆலவாய்ச்
சொக்க னேயஞ்ச லென்றருள் செய்யெனை
எக்க ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பக்க மேசென்று பாண்டியற் காகவே.

சிட்ட னேதிரு ஆலவாய் மேவிய
அட்ட மூர்த்திய னேயஞ்ச லென்றருள்
துட்ட ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பட்டி மன்தென்னன் பாண்டியற் காகவே.

நண்ண லார்புரம் மூன்றெரி ஆலவாய்
அண்ண லேயஞ்ச லென்றருள் செய்யெனை
எண்ணி லாவம ணர்கொளு வுஞ்சுடர்
பண்ணி யல்தமிழ்ப் பாண்டியற் காகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்ச மென்றுன் சரண்புகுந் தேனையும்
அஞ்ச லென்றருள் ஆலவா யண்ணலே
வஞ்சஞ் செய்தம ணர்கொளு வுஞ்சுடர்
பஞ்ச வன்தென்னன் பாண்டியற் காகவே.

செங்கண் வெள்விடை யாய்திரு ஆலவாய்
அங்க ணாவஞ்ச லென்றருள் செய்யெனைக்
கங்கு லார்அமண் கையரிடுங் கனல்
பங்க மில்தென்னன் பாண்டியற் காகவே.

தூர்த்தன் வீரந் தொலைத்தருள் ஆலவாய்
ஆத்த னேயஞ்ச லென்றருள் செய்யெனை
ஏத்தி லாஅம ணர்கொளு வுஞ்சுடர்
பார்த்தி வன்தென்னன் பாண்டியற் காகவே.

தாவி னான்அயன் தானறி யாவகை
மேவி னாய்திரு ஆலவா யாயருள்
தூவி லாஅம ணர்கொளு வுஞ்சுடர்
பாவி னான்தென்னன் பாண்டியற் காகவே.

எண்டி சைக்கெழில் ஆலவாய் மேவிய
அண்ட னேயஞ்ச லென்றருள் செய்யெனைக்
குண்ட ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பண்டி மன்தென்னன் பாண்டியற் காகவே.

அப்பன் ஆலவா யாதி யருளினால்
வெப்பந் தென்னவன் மேலுற மேதினிக்
கொப்ப ஞானசம் பந்தன் உரைபத்துஞ்
செப்ப வல்லவர் தீதிலாச் செல்வரே.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன் தொல்லைகள் நீங்கி மன நிம்மதியுடன் வாழ்வதற்கும், பிறரிடமிருந்து கடன் பெறாமலே போதிய பொருளாதாரத்துடன் வாழ்வதற்கும் ஓத வேண்டிய பதிகம்

திருஆலவாய் - நாலடிமேல் வைப்பு

இறைவன் - சொக்கநாதர் | இறைவி - மீனாட்சியம்மை

பண் - பழம்பஞ்சுரம் | இராகம் - சங்கராபரணம்

திருச்சிற்றம்பலம்

வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி அமணொடு தேரரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
பாதி மாதுட னாய பரமனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே.

வைதி கத்தின் வழியொழு காதவக்
கைத வமுடைக் காரமண் தேரரை
எய்தி வாதுசெ யத்திரு வுள்ளமே
மைதி கழ்தரு மாமணி கண்டனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே.

மறைவ ழக்கமி லாதமா பாவிகள்
பறித லைக்கையர் பாயுடுப் பார்களை
முறிய வாதுசெ யத்திரு வுள்ளமே
மறியு லாங்கையில் மாமழு வாளனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுத்த வங்கமா றாயின நீர்மையைக்
கறுத்த வாழமண் கையர்கள் தம்மொடுஞ்
செறுத்து வாதுசெ யத்திரு வுள்ளமே
முறித்த வாண்மதிக் கண்ணி முதல்வனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே.

அந்த ணாளர் புரியும் அருமறை
சிந்தை செய்யா அருகர் திறங்களைச்
சிந்த வாதுசெ யத்திரு வுள்ளமே
வெந்த நீற தணியும் விகிர்தனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே.

வேட்டு வேள்வி செயும்பொரு ளைவிளி
மூட்டு சிந்தை முருட்டமண் குண்டரை
ஓட்டி வாதுசெ யத்திரு வுள்ளமே
காட்டி லானை உரித்தஎங் கள்வனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே.

அழல தோம்பும் அருமறை யோர்திறம்
விழல தென்னும் அருகர் திறத்திறங்
கழல வாதுசெ யத்திரு வுள்ளமே
தழல்இ லங்கு திருவுருச் சைவனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே.

நீற்று மேனிய ராயினர் மேலுற்ற
காற்றுக் கொள்ளவும் நில்லா அமணரைத்
தேற்றி வாதுசெ யத்திரு வுள்ளமே
ஆற்ற வாளரக் கற்கும் அருளினாய்
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீல மேனி அமணர் திறத்துநின்
சீலம் வாதுசெ யத்திரு வுள்ளமே
மாலும் நான்முக னுங்காண் பரியதோர்
கோல மேனிய தாகிய குன்றமே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே.

அன்று முப்புரஞ் செற்ற அழகநின்
துன்று பொற்கழல் பேணா அருகரைத்
தென்ற வாதுசெ யத்திரு வுள்ளமே
கன்று சாக்கியர் காணாத் தலைவனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே.

கூடல் ஆலவாய்க் கோனை விடைகொண்டு
வாடல் மேனி அமணரை வாட்டிட
மாடக் காழிச்சம் பந்தன் மதித்தஇப்
பாடல் வல்லவர் பாக்கிய வாளரே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரத்த அழுத்த நோய் (Blood Pressure), இனிப்பிலி நோய் ( நீரிழிவு – Diabetes) முதலிய நோய்கள் நீங்குவதற்கும், மூர்ச்சை நோயிலிருந்து எழுவதற்கும் (To get relieved from COMA) ஓதவேண்டிய பதிகம்.**

**இக்காலத்தில் போதைப் பொருள்களுக்கு அடிமையாகி மீள இயலாமல் இருப்பவர்களை மீட்பதற்கும் (To save the drug addict). இந்த பதிகத்தை ஓதிப் பயன் பெற்றுள்ளனர்.**

திருப்பாச்சிலாச்சிராமம்

இறைவன் - மாற்றறிவரதர்
பண் - தக்கராகம்

இறைவி - பாலசௌந்தரி
இராகம் - காம்போதி

துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச்
சுடர்ச்சடை சுற்றி முடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடஞ் சூழ
வாரிடமும் பலி தேர்வர்
அணிவளர் கோல மெலாஞ்செய்து பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாட
மயல்செய்வ தோயிவர் மாண்பே.

கலைபுனை மானுரி தோலுடை யாடை
கனல்சுட ராலிவர் கண்கள்
தலையணி சென்னியர் தாரணி மார்பர்
தம்மடி கள்ளிவ ரென்ன
அலைபுனல் பூம்பொழில் சூழ்ந்தமர் பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
இலைபுனை வேலரோ ஏழையை வாட
இடர்செய்வ தோயிவ ரீடே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெஞ்சுட ராடுவர் துஞ்சிருள் மாலை
வேண்டுவர் பூண்பது வெண்ணூல்
நஞ்சடை கண்டர் நெஞ்சிட மாக
நண்ணுவர் நம்மை நயந்து
மஞ்சடை மாளிகை சூழ்தரு பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
செஞ்சுடர் வண்ணரோ பைந்தொடி வாடச்
சிதைசெய்வ தோவிவர் சீரே.

கனமலர்க் கொன்றை யலங்க லிலங்கக்
கனல்தரு தூமதிக் கண்ணி
புனமலர் மாலை யணிந் தழகாய
புனிதர் கொலாமிவ ரென்ன
வனமலி வண்பொழில் சூழ்தரு பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
மனமலி மைந்தரோ மங்கையை வாட
மயல்செய்வ தோவிவர் மாண்பே.

மாந்தர்தம் பால்நறு நெய்மகிழ்ந் தாடி
வளர்சடை மேற்புனல் வைத்து
மோந்தை முழாக்குழல் தாளமோர் வீணை
முதிரவோர் வாய்மூரி பாடி
ஆந்தை விழிச்சிறு பூதத்தர் பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
சாந்தணி மார்பரோ தையலை வாடச்
சதுர்செய்வ தோவிவர் சார்வே.

நீறுமெய்பூசி நிறைசடை தாழ
நெற்றிக்கண் ணாலுற்று நோக்கி
ஆறது சூடி ஆடர வாட்டி
யைவிரற் கோவண ஆடை
பாறரு மேனியர் பூதத்தர் பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
ஏறது ஏறியர் ஏழையை வாட
இடர்செய்வ தோவிவ ரீடே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கிள நாகமொ ரேகவ டத்தோ
டாமைவெண் ணூல்புனை கொன்றை
கொங்கிள மாலை புனைந் தழகாய
குழகர்கொ லாமிவ ரென்ன
அங்கிள மங்கையோர் பங்கினர் பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
சங்கொளி வண்ணரோ தாழ்குழல் வாடச்
சதிர்செய்வ தோவிவர் சார்வே.

ஏவலத் தால்விச யற்கருள் செய்து
இராவண னையீ டழித்து
மூவரி லும்முத லாய்நடு வாய
மூர்த்தியை யன்றி மொழியாள்
யாவர் களும்பர வும்மெழிற் பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
தேவர்கள் தேவரோ சேயிழை வாடச்
சிதைசெய்வ தோவிவர் சேர்வே.

மேலது நான்முக னெய்திய தில்லை
கீழது சேவடி தன்னை
நீலது வண்ணனு மெய்திய தில்லை
எனவிவர் நின்றது மல்லால்
ஆலது மாமதி தோய்பொழிற் பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
பாலது வண்ணரோ பைந்தொடி வாடப்
பழிசெய்வ தோவிவர் பண்பே.

நாணொடு கூடிய சாயின ரேனும்
நகுவ ரவரிரு போதும்
ஊணொடு கூடிய உட்குந் தகையார்
உரைக ளவைகொள வேண்டா
ஆணொடு பெண்வடி வாயினர் பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
பூணெடு மார்பரோ பூங்கொடி வாடப்
புனைசெய்வ தோவிவர் பொற்பே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகமலி அன்பொடு தொண்டர் வணங்க
ஆச்சிரா மத்துறை கின்ற
புகைமலி மாலை புனைந் தழகாய
புனிதர்கொ லாமிவ ரென்ன
நகைமலி தண்பொழில் சூழ்தரு காழி
நற்றமிழ் ஞானசம் பந்தன்
தகைமலி தண்டமிழ் கொண்டிவை யேத்தச்
சாரகி லாவினை தானே.

திருச்சிற்றம்பலம்

**தீராத வயிற்றுவலி நீங்குவதற்கும், குடல் தொடர்பான அனைத்துத் தொல்லைகளைப் போக்குவதற்கும் ஓதவேண்டிய பதிகம். மஞ்சள் காமாலை நோயைப்** (Pancreas - Problem) **போக்குவதற்கும் இந்தப் பதிகத்தைப் படனம் செய்யவும்.**

திருவதிகைவீரட்டானம்

சுவாமிபெயர் - வீரட்டானேசுவரர். தேவியார் - திருவதிகைநாயகி.
பண் - கொல்லி இராகம் - நவரோசு

திருச்சிற்றம்பலம்

கூற்றாயின வாறுவி லக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேஇர வும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சம்முமக் கேயிட மாகவைத்தேன்
நினையாதொரு போதும் இருந்தறியேன்
வஞ்சம்மிது வொப்பது கண்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
நணுகாமல் துரந்து கரந்துமிடீர்
அஞ்சேலுமென் னீர்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

பணிந்தாரன பாவங்கள் பாற்றவல்லீர்
படுவெண்டலை யிற்பலி கொண்டுழல்வீர்
துணிந்தேயுமக் காட்செய்து வாழலுற்றாற்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
பிணிந்தார்பொடி கொண்டுமெய் பூசவல்லீர்
பெற்றமேற்றுகந் தீர்சுற்றும் வெண்டலைகொண்
டணிந்தீரடி கேள்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மனே.

முன்னம்மடி யேன்அறி யாமையினான்
முனிந்தென்னை நலிந்து முடக்கியிடப்
பின்னையடி யேனுமக் காளும்பட்டேன்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
தன்னையடைந் தார்வினை தீர்ப்பதன்றோ
தலையாயவர் தங்கட னாவதுதான்
அன்னநடை யார்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையாற்
கரைநின்றவர் கண்டுகொ ளென்றுசொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியிட
நிலைக்கொள்ளும் வழித்துறை யொன்றறியேன்
வார்த்தையிது வொப்பது கேட்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார்புன லார்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவின் மறந்தறியேன்
உலர்ந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள் ளுறுசூலை தவிர்த்தருளாய்
அலந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

உயர்ந்தேன்மனை வாழ்க்கையும் ஒண்பொருளும்
ஒருவர்தலை காவலி லாமையினல்
வயந்தேயுமக் காட்செய்து வாழலுற்றால்
வலிக்கின்றது சூலை தவிர்த்தருளீர்
பயந்தேயென் வயிற்றின கம்படியே
பறித்துப்புரட் டியறுத் தீர்த்திடநான்
அயர்ந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னாத்துறை அம்மானே.

வலித்தேன்மனை வாழ்கை மகிழ்ந்தடியேன்
வஞ்சம்மன மொன்று மிலாமையினாற்
சலித்தாலொரு வர்துணை யாருமில்லைச்
சங்கவெண்குழைக் காதுடை எம்பெருமான்
கலித்தேயென் வயிற்றி னகம்படியே
கலக்கி மலக்கிட்டுக் கவர்ந்துதின்ன
அலுத்தேனடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

பொன்போல மிளிர்வதொர் மேனியினீர்
புரிபுன்சடை யீர்மெலி யும்பிறையீர்
துன்பேகவ லைபிணி யென்றிவற்றை
நணுகாமற் றுரந்து கரந்துமிடீர்
என்போலிக ளும்மை இனித்தெளியார்
அடியார்படு வதிது வேயாகில்
அன்பேஅமை யும்மதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்தாயங்கோ ரானையின் ஈருரிதோல்
புறங்காடரங் காநட மாடவல்லாய்
ஆர்த்தானரக் கன்றனை மால்வரைக்கீழ்
அடர்த்திட்டருள் செய்த வதுகருதாய்
வேர்த்தும்புரண் டும்விழுந் தும்மெழுந்தால்
என்வேதனை யான விலக்கியிடாய்
ஆர்த்தார்புனல் சூழ்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

திருச்சிற்றம்பலம்

## எலும்பு முறிவு குணம் அடைவதற்கும், இளம்பிள்ளை வாதம் (Poliomyelitis), பக்கவாதம் (Paralysis) போன்ற நோய்கள் தீர்வதற்கும் ஓதவேண்டிய பதிகம்

திருமாகறல் - திருவிராகம்

சுவாமிபெயர் - அடைக்கலங்காத்தநாதர் தேவியார் - புவனநாயகியம்மை.
பண் - சாதாரி இராகம் - பந்துராவளி

திருச்சிற்றம்பலம்

விங்குவிளை கழனிமிகு கடைசியர்கள் பாடல்விளை யாடல்அரவம்
மங்குலொடு நீள்கொடிகள் மாடமலி நீடுபொழில் மாகறலுளான்
கொங்குவிரி கொன்றையொடு கங்கைவளர் திங்களணி செஞ்சடையினான்
செங்கண்விடை யண்ணலடி சேர்பவர்கள் தீவினைகள் தீருமுடனே.

கலையினொலி மங்கையர்கள் பாடலொலி யாடல்கவின் எய்தியழகார்
மலையின்நிகர் மாடமுயர் நீள்கொடிகள் வீசுமலி மாகறலுளான்
இலையின்மலி வேல்நுனைய சூலம்வலன் ஏந்தியெரி புன்சடையினுள்
அலைகொள்புன லேந்துபெரு மானடியை யேத்தவினை யகலுமிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையொடு துந்துபிகள் சங்குகுழல் யாழ்முழவு காமருவுசீர்
மாலைவழி பாடுசெய்து மாதவர்கள் ஏத்திமகிழ் மாகறலுளான்
தோலையுடை பேணியதன் மேலோர்சுடர் நாகமசை யாவழகிதாப்
பாலையன நீறுபுனை வானடியை யேத்தவினை பறையுமுடனே.

இங்குகதிர் முத்தினொடு பொன்மணிகள் உந்தியெழில் மெய்யுளுடனே
மங்கையரும் மைந்தர்களும் மன்னுபுன லாடிமகிழ் மாகறலுளான்
கொங்குவளர் கொன்றைகுளிர் திங்களணி செஞ்சடையி னானடியையே
நுங்கள்வினை தீரமிக ஏத்திவழி பாடுநுக ராவெழுமினே.

துஞ்சுநறு நீலமிருள் நீங்கவொளி தோன்றுமது வார்கழனிவாய்
மஞ்சுமலி பூம்பொழிலின் மயில்கள்நட மாடல்மலி மாகறலுளான்
வஞ்சமத யானையுரி போர்த்துமகிழ் வானோர்மழு வாளன்வளரும்
நஞ்சமிருள் கண்டமுடை நாதனடி யாரைநலி யாவினைகளே.

மன்னுமறை யோர்களொடு பல்படிம மாதவர்கள் கூடியுடனாய்
இன்னவகை யாலினிதி றைஞ்சியிமை யோரிலெழு மாகறலுளான்
மின்னைவிரி புன்சடையின் மேன்மலர்கள் கங்கையொடு திங்களெனவே
உன்னுமவர் தொல்வினைகள் ஒல்கவுயர் வானுலகம் ஏறலெளிதே.

வெய்யவினை நெறிகள்செல வந்தணையும் மேல்வினைகள் வீட்டலுறுவீர்
மைகொள்விரி கானல்மது வார்கழனி மாகறலு ளான்எழிலதார்
கையகரி கால்வரையின் மேலதுரி தோலுடைய மேனியழகார்
ஐயனடி சேர்பவரை அஞ்சியடை யாவினைகள் அகலுமிகவே.

தூசுதுகில் நீள்கொடிகள் மேகமொடு தோய்வனபொன் மாடமிசையே
மாசுபடு செய்கைமிக மாதவர்கள் ஓதிமலி மாகறலுளான்
பாசுபத விச்சைவரி நச்சரவு கச்சையுடை பேணியழகார்
பூசுபொடி யீசனென ஏத்தவினை நிற்றலில போகுமுடனே.

தூயவிரி தாமரைகள் நெய்தல்கழு நீர்குவளை தோன்றமருவுண்
பாயவரி வண்டுபல பண்முரலும் ஓசைபயில் மாகறலுளான்
சாயவிர லூன்றியஇ ராவணன தன்மைகெட நின்றபெருமான்
ஆயபுக ழேத்தும்அடி யார்கள்வினை யாயினவும் அகல்வதெளிதே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலின்நல பைங்கழல்கள் நீள்முடியின் மேலுணர்வு காமுறவினார்
மாலுமல ரானும்அறி யாமையெரி யாகியுயர் மாகறலுளான்
நாலுமெரி தோலுமுரி மாமணிய நாகமொடு கூடியுடனாய்
ஆலும்விடை யூர்தியுடை யடிகளடி யாரையடை யாவினைகளே.

கடைகொள்நெடு மாடமிக ஓங்குகமழ் வீதிமலி காழியவர்கோன்
அடையும்வகை யாற்பரவி யரனையடி கூடுசம் பந்தன்உரையான்
மடைகொள்புன லோடுவயல் கூடுபொழில் மாகறலு ளான்அடியையே
உடையதமிழ் பத்துமுணர் வாரவர்கள் தொல்வினைகள் ஒல்குமுடனே.

திருச்சிற்றம்பலம்

# சர்ப்பதோஷத்தால் திருமணம் தள்ளிப்போவதைத் தவிர்ப்பதற்கு ஓத வேண்டிய பதிகம்

திருமருகல் - விடந்தீர்த்ததிருப்பதிகம்

இறைவன் - மாணிக்கவண்ணர் இறைவி - வண்டுவார் குழலியம்மை
பண் - இந்தளம் இராகம் - நாதநாமக்கிரியை

திருச்சிற்றம்பலம்

சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உள் மெலிவே.

சிந்தா யெனுமால் சிவனே யெனுமால்
முந்தா யெனுமால் முதல்வா எனுமால்
கொந்தார் குவளை குலவும் மருகல்
எந்தாய் தகுமோ இவள்ஏ சறவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறையார் கழலும் மழல்வா யரவும்
பிறையார் சடையும் முடையாய் பெரிய
மறையார் மருகல் மகிழ்வா யிவளை
இறையார் வளைகொண் டெழில்வவ் வினையே.

ஒலிநீர் சடையிற் கரந்தா யுலகம்
பலிநீ திரிவாய் பழியில் புகழாய்
மலிநீர் மருகல் மகிழ்வா யிவளை
மெலிநீர் மையளாக் கவும்வேண் டினையே.

துணிநீ லவண்ணம் முகில்தோன் றியன்ன
மணிநீ லகண்ட முடையாய் மருகல்
கணிநீ லவண்டார் குழலாள் இவள்தன்
அணிநீ லவொண்கண் அயர்வாக் கினையே.

பலரும் பரவப் படுவாய் சடைமேல்
மலரும் பிறையொன் றுடையாய் மருகல்
புலருந் தனையுந் துயிலாள் புடைபோந்
தலரும் படுமோ அடியா ளிவளே.

வழுவாள் பெருமான் கழல்வாழ் கவெனா
எழுவாள் நினைவாள் இரவும் பகலும்
மழுவா ளுடையாய் மருகல் பெருமான்
தொழுவா ளிவளைத் துயராக் கினையே.

இலங்கைக் கிறைவன் விலங்க லெடுப்பத்
துலங்கவ் விரலூன் றலுந்தோன் றலனாய்
வலங்கொள் மதில்சூழ் மருகற் பெருமான்
அலங்கல் லிவளை அலராக் கினையே.

எரியார் சடையும் மடியும் மிருவர்
தெரியா ததோர்தீத் திரளா யவனே
மரியார் பிரியா மருகற் பெருமான்
அரியாள் இவளை அயர்வாக் கினையே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவில் சமணும் மலர்சாக் கியரும்
நெறியல் லனசெய் தனர்நின் றுழல்வார்
மறியேந் துகையாய் மருகற் பெருமான்
நெறியார் குழலி நிறைநீக் கினையே.

வயஞா னம்வல்லார் மருகற் பெருமான்
உயர்ஞா னமுணர்ந் தடியுள் குதலால்
இயன்ஞா னசம்பந் தனபா டல்வல்லார்
வியன்ஞா லமெல்லாம் விளங்கும் புகழே.

திருச்சிற்றம்பலம்

## தடைபடும் திருமணம் சடுதியில் கூடிவருவதற்கு ஓதவேண்டிய பதிகம்

திருவேதிகுடி - திருவிராகம்

சுவாமிபெயர் - வேதபுரீசுவரர். தேவியார் - மங்கையர்க்கரசியம்மை.
பண் - சாதாரி இராகம் - பந்துராவளி

திருச்சிற்றம்பலம்

நீறுவரி ஆடரவொ டாமைமன என்புநிரை பூண்பரிடபம்
ஏறுவரி யாவரும் இறைஞ்சுகழல் ஆதியர் இருந்தவிடமாந்
தாறுவிரி பூகம்மலி வாழைவிரை நாறவிணை வாளைமடுவில்
வேறுபிரி யாதுவிளை யாடவள மாரும்வயல் வேதிகுடியே.

சொற்பிரி விலாதமறை பாடிநட மாடுவர்தொ லானையுரிவை
மற்புரி புயத்தினிது மேவுவரெந் நாளும்வளர் வானவர்தொழத்
துற்பரிய நஞ்சமுத மாகமுன் அயின்றவரி யன்றதொகுசீர்
வெற்பரையன் மங்கையொரு பங்கர்நக ரென்பர்திரு வேதிகுடியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போழுமதி பூணரவு கொன்றைமலர் துன்றுசடை வென்றிபுகமேல்
வாழுநதி தாழுமரு ளாளரிரு ளார்மிடறர் மாதரிமையோர்
சூழுமிர வாளர்திரு மார்பில்விரி நூலர்வரி தோலருடைமேல்
வேழவுரி போர்வையினர் மேவுபதி யென்பர்திரு வேதிகுடியே.

காடர்கரி காலர்கனல் கையரனல் மெய்யருடல் செய்யர்செவியிற்
தோடர்தெரி கீளர்சரி கோவணவர் ஆவணவர் தொல்லைநகர்தான்
பாடலுடை யார்களடி யார்கள்மல ரோடுபுனல் கொண்டுபணிவார்
வேடமொளி யானபொடி பூசியிசை மேவுதிரு வேதிகுடியே.

சொக்கர்துணை மிக்கஎயில் உக்கற முனிந்துதொழும் மூவர்மகிழத்
தக்கஅருள் பக்கமுற வைத்தஅர னாரினிது தங்கும்நகர்தான்
கொக்கரவ முற்றபொழில் வெற்றிநிழல் பற்றிவரி வண்டிசைகுலா
மிக்கமரர் மெச்சியினி தச்சமிடர் போகநல்கு வேதிகுடியே.

செய்யதிரு மேனிமிசை வெண்பொடி யணிந்துகரு மானுரிவைபோர்த்
தையமிடு மென்றுமட மங்கையொ டகந்திரியும் அண்ணலிடமாம்
வையம்விலை மாறிடினு மேறுபுகழ் மிக்கிழிவி லாதவகையார்
வெய்யமொழி தண்புலவ ருக்குரை செயாதஅவர் வேதிகுடியே.

உன்னிஇரு போதுமடி பேணுமடி யார்தமிடர் ஒல்கஅருளித்
துன்னியொரு நால்வருடன் ஆல்நிழலி ருந்ததுணை வன்றனிடமாங்
கன்னியரொ டாடவர்கள் மாமணம் விரும்பியரு மங்கலம்மிக
மின்னியலும் நுண்ணிடைநன் மங்கையரி யற்றுபதி வேதிகுடியே.

உரக்கர நெருப்பெழ நெருக்கிவரை பற்றியவொ ருத்தன்முடிதோள்
அரக்கனை யடர்த்தவன் இசைக்கினிது நல்கியருள் அங்கணனிடம்
முருக்கிதழ் மடக்கொடி மடந்தையரும் ஆடவரும் மொய்த்தகலவை
விரைக்குழன் மிகக்கமழ விண்ணிசை யுலாவுதிரு வேதிகுடியே.

பூவின்மிசை அந்தணனொ டாழிபொலி அங்கையனும் நேடஎரியாய்த்
தேவுமிவ ரல்லரினி யாவரென நின்றுதிகழ் கின்றவரிடம்
பாவலர்கள் ஓசையியல் கேள்வியத றாதகொடை யாளர்பயில்வாம்
மேவரிய செல்வநெடு மாடம்வளர் வீதிநிகழ் வேதிகுடியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஞ்சமணர் தேரர்மதி கேடர்தம்ம னத்தறிவி லாதவர்மொழி
தஞ்சமென என்றுமுண ராதஅடி யார்கருது சைவனிடமாம்
அஞ்சுபுலன் வென்றறுவ கைப்பொருள் தெரிந்தெழு இசைக்கிளவியால்
வெஞ்சினம் ஒழித்தவர்கள் மேவிநிகழ் கின்றதிரு வேதிகுடியே.

கந்தமலி தண்பொழில்நன் மாடமிடை காழிவளர் ஞானமுணர்சம்
பந்தன்மலி செந்தமிழின் மாலைகொடு வேதிகுடி யாதிகழலே
சிந்தைசெய வல்லவர்கள் நல்லவர்க ளென்னநிகழ் வெய்தியிமையோர்
அந்தவுல கெய்தியர சாளுமது வேசரதம் ஆணைநமதே.

திருச்சிற்றம்பலம்

## தாம்பத்திய உறவு முழு நிறைவுடன் நடைபெறுவதற்கும், தம்பதிகளுக்குள்ளே உள்ள பிணக்கு தீர்ந்து ஒற்றுமையாக வாழ்வதற்கும் ஓதவேண்டிய பதிகம்

திருமணஞ்சேரி

சுவாமிபெயர் - மணவாளநாயகர்,    தேவியார் - யாழ்மொழியம்மை
பண் - இந்தளம்    இராகம் - நாதநாமக்கிரியை

திருச்சிற்றம்பலம்

அயிலாரும் அம்பத னாற்புர மூன்றெய்து
குயிலாரும் மென்மொழி யாளொரு கூறாகி
மயிலாரும் மல்கிய சோலை மணஞ்சேரிப்
பயில்வானைப் பற்றிநின் றார்க்கில்லை பாவமே.

விதியானை விண்ணவர் தாந்தொழு தேத்திய
நெதியானை நீள்சடை மேல்நிகழ் வித்தவான்
மதியானை வண்பொழில் சூழ்ந்த மணஞ்சேரிப்
பதியானைப் பாடவல் லார்வினை பாறுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எய்ப்பானார்க் கின்புறு தேனளித் தூறிய
இப்பாலா யெனையும் ஆள வுரியானை
வைப்பான மாடங்கள் சூழ்ந்த மணஞ்சேரி
மெய்ப்பானை மேவிநின் றார்வினை வீடுமே.

விடையானை மேலுல கேழுமிப் பாரெலாம்
உடையானை ஊழிதோ றூழி உளதாய
படையானைப் பண்ணிசை பாடு மணஞ்சேரி
அடைவானை யடையவல் லார்க்கில்லை யல்லலே.

எறியார்பூங் கொன்றையி னோடும் இளமத்தம்
வெறியாருஞ் செஞ்சடை யார மிலைத்தானை
மறியாருங் கையுடை யானை மணஞ்சேரிச்
செறிவானைச் செப்பவல் லார்க்கிடர் சேராவே.

மொழியானை முன்னொரு நான்மறை யாறங்கம்
பழியாமைப் பண்ணிசை யான பகர்வானை
வழியானை வானவ ரேத்து மணஞ்சேரி
இழியாமை யேத்தவல் லார்க்கெய்தும் இன்பமே.

எண்ணானை யெண்ணமர் சீரிமை யோர்கட்குக்
கண்ணானைக் கண்ணொரு மூன்று முடையானை
மண்ணானை மாவயல் சூழ்ந்த மணஞ்சேரிப்
பெண்ணானைப் பேசநின் றார்பெரி யோர்களே.

எடுத்தானை யெழில்முடி யெட்டும் இரண்டுந்தோள்
கெடுத்தானைக் கேடிலாச் செம்மை யுடையானை
மடுத்தார வண்டிசை பாடும் மணஞ்சேரி
பிடித்தாரப் பேணவல் லார்பெரியோர்களே.

சொல்லானைத் தோற்றங்கண் டானும் நெடுமாலுங்
கல்லானைக் கற்றன சொல்லித் தொழுதோங்க
வல்லார்நன் மாதவ ரேத்து மணஞ்சேரி
எல்லாமாம் எம்பெரு மான்கழல் ஏத்துமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்றேயுந் தாமறி வில்சமண் சாக்கியர்
சொற்றேயும் வண்ணமொர் செம்மை உடையானை
வற்றாத வாவிகள் சூழ்ந்த மணஞ்சேரி
பற்றாக வாழ்பவர் மேல்வினை பற்றாவே.

கண்ணாருங் காழியர் கோன்கருத் தார்வித்த
தண்ணார்சீர் ஞானசம் பந்தன் தமிழ்மாலை
மண்ணாரும் மாவயல் சூழ்ந்த மணஞ்சேரி
பண்ணாரப் பாடவல் லார்க்கில்லை பாவமே.

திருச்சிற்றம்பலம்

## சகல கிரக பீடைகள் நீங்குவதற்கும் ஆயுள் பலம் பெருகுவதற்கும் ஓதவேண்டிய பதிகம்

கோளறு திருப்பதிகம்

பண் - பியந்தைக்காந்தாரம் இராகம் - நவரோசு

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழம் வெள்ளி
சனிபாம்பி ரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க
எருதேறி யேழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

உருவலர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேன்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசை தெய்வ மானபலவும்
அருநெதி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

மதிநுதல் மங்கையோடு வடபா லிருந்து
மறையோது மெங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுண நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

நஞ்சணி கண்டனெந்தை மடவாள் தனோடும்
விடையேறும் நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடு முருமிடியு மின்னு
மிகையான பூத மவையும்
அஞ்சிடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாள்வரி யதளதாடை வரிகோ வணத்தர்
மடவாள் தனோடு முடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

செப்பிள முலைநன்மங்கை ஒருபாக மாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியுமப்பும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

வேள்பட விழிசெய்தன்று விடமே லிருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன்ற னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனுமாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொத்தலர் குழலியோடு விசயற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியுநாகம் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரொ டமணைவாதில் அழிவிக்கு மண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும்நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.

திருச்சிற்றம்பலம்

## தவத்தால் சிவம்

சரியை கிரியை யோகங்களைச் செய்தல் மெய்த்தவமாகும். தவத்தைச் செய்வோரே சிவத்தைச் சார்வர். நித்த, அநித்த வேறுபாடுகளை உணர்ந்து அறஞ் செய்தல் வேண்டும். அறத்தால் அன்பு விளையும் அன்பினால் அருள் விளையும் அருளால் தவம் சித்திக்கும். தவத்தால் சிவமும் கைகூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டாமிடத்துச் சனி (அட்டமத்துச்சனி), ஏழரைச் சனி, கண்டச்சனி (நாலாமிடத்துச்சனி) யினால் வாழ்க்கையில் எதிர்பாராத இடர்பாடுகள் ஏற்படாமலிருக்கும் பொருட்டு ஓதவேண்டிய பதிகம்

திருநள்ளாறு

சுவாமிபெயர் - தெர்ப்பாரணியர், தேவியார் - போகமார்த்தபூண்முலையம்மை.

பண் - பழந்தக்கராகம் இராகம் - கந்தசாவேரி

போகமார்த்த பூண்முலையாள் தன்னோடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண்வெள் ளேற்றண்ணல் பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன் கோவண ஆடையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே.

தோடுடைய காதுடையன் தோலுடை யன்தொலையாப்
பீடுடைய போர்விடையன் பெண்ணுமோர் பாலுடையன்
ஏடுடைய மேலுலகோ டேழ்கடலுஞ் சூழ்ந்த
நாடுடைய நம்பெருமான் மேயது நள்ளாறே.

ஆன்முறையா லாற்றவெண்ணீ றாடி அணியிழையோர்
பான்முறையால் வைத்தபாதம் பத்தர் பணிந்தேத்த
மான்மறியும் வெண்மழுவுஞ் சூலமும் பற்றியகை
நான்மறையான் நம்பெருமான் மேயது நள்ளாறே.

புல்கவல்ல வார்சடைமேல் பூம்புனல் பெய்தயலே
மல்கவல்ல கொன்றைமாலை மதியோ டுடன்சூடிப்
பல்கவல்ல தொண்டர்தம்பொற் பாத நிழல்சேர
நல்கவல்ல நம்பெருமான் மேயது நள்ளாறே.

ஏறுதாங்கி யூர்திபேணி யேர்கொள் இளமதியம்
ஆறுதாங்குஞ் சென்னிமேலோர் ஆடர வஞ்சூடி
நீறுதாங்கி நூல்கிடந்த மார்பில் நிரைகொன்றை
நாறுதாங்கு நம்பெருமான் மேயது நள்ளாறே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திங்களுச்சி மேல்விளங்குந் தேவன் இமையோர்கள்
எங்களுச்சி யெம்மிறைவன் என்றடி யேயிறைஞ்சத்
தங்களுச்சி யால்வணங்குந் தன்னடி யார்கட்கெல்லாம்
நங்களுச்சி நம்பெருமான் மேயது நள்ளாறே.

வெஞ்சுடர்த்தீ யங்கையேந்தி விண்கொள் முழவதிர
அஞ்சிடத்தோர் ஆடல்பாடல் பேணுவ தன்றியும்போய்ச்
செஞ்சடைக்கோர் திங்கள்சூடித் திகழ்தரு கண்டத்துள்ளே
நஞ்சடைத்த நம்பெருமான் மேயது நள்ளாறே.

சிட்டமார்ந்த மும்மதிலுஞ் சிலைவரைத் தீயம்பினால்
சுட்டுமாட்டிச் சுண்ணவெண்ணீ றாடுவ தன்றியும்போய்ப்
பட்டமார்ந்த சென்னிமேலோர் பால்மதி யஞ்சூடி
நட்டமாடும் நம்பெருமான் மேயது நள்ளாறே.

உண்ணலாகா நஞ்சுகண்டத் துண்டுட னேயொடுக்கி
அண்ணலாகா வண்ணல்நீழ லாரழல் போலுருவம்
எண்ணலாகா வுள்வினையென் றெள்க வலித்திருவர்
நண்ணலாகா நம்பெருமான் மேயது நள்ளாறே.

மாசுமெய்யர் மண்டைத்தேரர் குண்டர் குணமிலிகள்
பேசும்பேச்சை மெய்யென்றெண்ணி அந்நெறி செல்லன்மின்
மூசுவண்டார் கொன்றைசூடி மும்மதி லும்முடனே
நாசஞ்செய்த நம்பெருமான் மேயது நள்ளாறே.

தண்புனலும் வெண்பிறையுந் தாங்கிய தாழ்சடையன்
நண்புநல்லார் மல்குகாழி ஞானசம் பந்தன்நல்ல
பண்புநள்ளா றேத்துபாடல் பத்தும் இவைவல்லார்
உண்புநீங்கி வானவரோ டுலகி லுறைவாரே.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தக் காரியத்தில் ஈடுபட்டாலும் ஏதாவது ஒரு தடை வருவதைத் தடுப்பதற்கும், வீண் பழி அவமானங்களிலிருந்து விடுபடுவதற்கும் ஓதவேண்டிய பதிகம்

திருநெடுங்களம்

சுவாமிபெயர் - நித்தியசுந்தரர். தேவியார் - ஒப்பிலாநாயகியம்மை
பண் - பழந்தக்கராகம் இராகம் - கந்தசாவேரி

மறையுடையாய் தோலுடையாய் வார்சடை மேல்வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே யென்றுனைப் பேசினல்லால்
குறையுடையார் குற்றமோராய் கொள்கையி னாலுயர்ந்த
நிறையுடையார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே.

கனைத்தெழுந்த வெண்டிரைசூழ் கடலிடை நஞ்சுதன்னைத்
தினைத்தனையா மிடற்றில்வைத்த திருந்திய தேவநின்னை
மனத்தகத்தோர் பாடலாடல் பேணி யிராப்பகலும்
நினைத்தெழுவார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே.

நின்னடியே வழிபடுவான் நிமலா நினைக்கருத
என்னடியான் உயிரைவவ்வேல் என்றடல் கூற்றுதைத்த
பொன்னடியே பரவிநாளும் பூவொடு நீர்சுமக்கும்
நின்னடியார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே.

மலைபுரிந்த மன்னவன்றன் மகளையோர் பால்மகிழ்ந்தாய்
அலைபுரிந்த கங்கைதங்கும் அவிர்சடை ஆரூரா
தலைபுரிந்த பலிமகிழ்வாய் தலைவநின் றாள்நிழற்கீழ்
நிலைபுரிந்தார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே.

பாங்கினல்லார் படிமஞ்செய்வார் பாரிட மும்பலிசேர்
தூங்கிநல்லார் பாடலோடு தொழுகழ லேவணங்கித்
தாங்கிநில்லா அன்பினோடுந் தலைவநின் றாள்நிழற்கீழ்
நீங்கிநில்லார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தனாகிப் பாலனாகி வேதமோர் நான்குணர்ந்து
கருத்தனாகிக் கங்கையாளைக் கமழ்சடை மேற்கரந்தாய்
அருத்தனாய ஆதிதேவன் அடியிணை யேபரவும்
நிருத்தர்கீதர் இடர்களையாய் நெடுங்கள மேயவனே.

கூறுகொண்டாய் மூன்றுமொன்றாக் கூட்டியோர் வெங்கணையால்
மாறுகொண்டார் புரமெரித்த மன்னவ னேகொடிமேல்
ஏறுகொண்டாய் சாந்தமீதென் றெம்பெரு மானணிந்த
நீறுகொண்டார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே.

குன்றினுச்சி மேல்விளங்குங் கொடிமதிற் சூழிலங்கை
அன்றிநின்ற அரக்கர்கோனை அருவரைக் கீழடர்த்தாய்
என்றுநல்ல வாய்மொழியால் ஏத்தியி ராப்பகலும்
நின்றுநைவா ரிடர்களையாய் நெடுங்கள மேயவனே.

வேழவெண்கொம் பொசித்தமாலும் விளங்கிய நான்முகனுஞ்
சூழவெங்கும் நேடவாங்கோர் சோதியு ளாகிநின்றாய்
கேழல்வெண்கொம் பணிந்தபெம்மான் கேடிலாப் பொன்னடியின்
நீழல்வாழ்வா ரிடர்களையாய் நெடுங்கள மேயவனே.

வெஞ்சொல்தஞ்சொல் லாக்கிநின்ற வேடமி லாச்சமணுந்
தஞ்சமில்லாச் சாக்கியருந் தத்துவ மொன்றறியார்
துஞ்சலில்லா வாய்மொழியால் தோத்திரம் நின்னடியே
நெஞ்சில்வைப்பார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே.

நீடவல்ல வார்சடையான் மேயநெ டுங்களத்தைச்
சேடர்வாழும் மாமறுகிற் சிரபுரக் கோன்நலத்தால்
நாடவல்ல பனுவல்மாலை ஞானசம் பந்தன்சொன்ன
பாடல்பத்தும் பாடவல்லார் பாவம் பறையுமே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழந்த பொருளை மீட்டுப் பெறுவதற்கு ஓதவேண்டிய பதிகம்

திருமுதுகுன்றம்

சுவாமிபெயர் - பழமலைநாதர், தேவியார் - பெரியநாயகியம்மை.

பண் - நட்டராகம் இராகம் - பந்துராவளி

திருச்சிற்றம்பலம்

பொன்செய்த மேனியினீர் புலித்தோலை அரைக்கசைத்தீர்
முன்செய்த மூவெயிலும் எரித்தீர்முது குன்றமர்ந்தீர்
மின்செய்த நுண்ணிடையாள் பரவையிவள் தன்முகப்பே
என்செய்த வாறடிகேள் அடியேமூனிட் டளங்கெடவே.இட்டளம் துன்பம்.

உம்பரும் வானவரும் உடனேநிற்க வேயெனக்குச்
செம்பொனைத் தந்தருளித் திகழும்முது குன்றமர்ந்தீர்
வம்பம ருங்குழலாள் பரவையிவள் வாடுகின்றாள்
எம்பெரு மானருளீர் அடியேனிட் டளங்கெடவே.

பத்தா பத்தர்களுக் கருள்செய்யும் பரம்பரனே
முத்தா முக்கணனே முதுகுன்றம் அமர்ந்தவனே
மைத்தா ருந்தடங்கண் பரவையிவள் வாடாமே
அத்தா தந்தருளாய் அடியேனிட் டளங்கெடவே.

மங்கையோர் கூறமர்ந்தீர் மறைநான்கும் விரித்துகந்தீர்
திங்கள் சடைக்கணிந்தீர் திகழும்முது குன்றமர்ந்தீர்
கொங்கைநல் லாள்பரவை குணங்கொண்டிருந் தாள்முகப்பே
அங்கண னேயருளாய் அடியேனிட் டளங்கெடவே.

மையா ரும்மிடற்றாய் மருவார்புரம் மூன்றெரித்த
செய்யார் மேனியனே திகழும்முது குன்றமர்ந்தாய்
பையா ரும்மரவே ரல்குலாளிவள் வாடுகின்றாள்
ஐயா தந்தருளாய் அடியேனிட் டளங்கெடவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடியான் நான்முகனும் இரவியொடும் இந்திரனும்
முடியால் வந்திறைஞ்ச முதுகுன்ற மமர்ந்தவனே
படியா ரும்மியலாள் பரவையிவள் தன்முகப்பே
அடிகேள் தந்தருளாய் அடியேனிட் டளங்கெடவே.

கொந்தண வும்பொழில்சூழ் குளிர்மாமதில் மாளிகைமேல்
வந்தண வும்மதிசேர் சடைமாமுது குன்றுடையாய்
பந்தண வும்விரலாள் பரவையிவள் தன்முகப்பே
அந்தண னேயருளாய் அடியேனிட் டளங்கெடவே.

பரசா ருங்கரவா பதினெண்கண முஞ்சூழ
முரசார் வந்ததிர முதுகுன்ற மமர்ந்தவனே
விரைசே ருங்குழலாள் பரவையிவள் தன்முகப்பே
அரசே தந்தருளாய் அடியேனிட் டளங்கெடவே.

ஏத்தா திருந்தறியேன் இமையோர்தனி நாயகனே
மூத்தாய் உலகுக்கெல்லாம் முதுகுன்ற மமர்ந்தவனே
பூத்தா ருங்குழலாள் பரவையிவள் தன்முகப்பே
கூத்தா தந்தருளாய் கொடியேனிட் டளங்கெடவே.

பிறையா ருஞ்சடையெம் பெருமான் அருளாயென்று
முறையால் வந்தமரர் வணங்கும்முது குன்றர்தம்மை
மறையார் தங்குரிசில் வயல்நாவலா ரூரன்சொன்ன
இறையார் பாடல்வல்லார்க் கெளிதாஞ்சிவ லோகமதே.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தையின் உடல்நலம், மனநலம், சீர்பெறுவதற்கும் தனக்குக் கிடைக்கவேண்டிய வாய்ப்புகள் நழுவாமல் இருப்பதற்கும் புண்ணியப் பயன்களை பெறுவதற்கும் ஓதவேண்டிய பதிகம்

திருவெழுகூற்றிருக்கை - திருப்பிரமபுரம்

இறைவன் - பிரமபுரீசுவரர் இறைவி - திருநிலை நாயகி

பண் - வியாழக்குறிஞ்சி இராகம் - சௌராஷ்டிரம்

ஓருரு வாயினை மானாங் காரத்
தீரியல் பாயொரு விண்முதல் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை
இருவரோ டொருவ னாகி நின்றனை

ஓரால் நீழல் ஒண்கழல் இரண்டும்
முப்பொழு தேத்திய நால்வர்க் கொளிநெறி
காட்டினை நாட்டமூன் றாகக் கோட்டினை
இருநதி யரவமோ டொருமதி சூடினை
ஒருதா ளீரயின் மூவிலைச் சூலம்

நாற்கால் மான்மறி ஐந்தலை யரவம்
ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்
திருகோட் டொருகரி யீடழித் துரித்தனை
ஒருதனு இருகால் வளைய வாங்கி
முப்புரத் தோடு நானிலம் அஞ்சக்

கொன்று தலத்துற அவுணரை யறுத்தனை
ஐம்புலன் நாலாம் அந்தக் கரணம்
முக்குணம் இருவளி யொருங்கிய வானோர்
ஏத்த நின்றனை யொருங்கிய மனத்தோ
டிருபிறப் போர்ந்து முப்பொழுது குறைமுடித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்மறை யோதி ஐவகை வேள்வி
அமைத்தா றங்க முதலெழுத் தோதி
வரன்முறை பயின்றெழு வான்றனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை
அறுபதம் முரலும் வேணுபுரம் விரும்பினை

இகலிய மைந்துணர் புகலி யமர்ந்தனை
பொங்குநாற் கடல்சூழ் வெங்குரு விளங்கினை
பாணிமூ வுலகும் புதையமேல் மிதந்த
தோணிபுரத் துறைந்தனை தொலையா இருநிதி
வாய்ந்த பூந்தராய் ஏய்ந்தனை

வரபுர மென்றுணர் சிரபுரத் துறைந்தனை
ஒருமலை யெடுத்த இருதிறல் அரக்கன்
விறல்கெடுத் தருளினை புறவம் புரிந்தனை
முந்நீர்த் துயின்றோன் நான்முகன் அறியாப்
பண்பொடு நின்றனை சண்பை யமர்ந்தனை

ஐயுறும் அமணரும் அறுவகைத் தேரரும்
ஊழியும் உணராக் காழி யமர்ந்தனை
எச்சனே ழிசையோன் கொச்சையை மெச்சினை
ஆறு பதமும் ஐந்தமர் கல்வியும்
மறை முதல் நான்கும்

மூன்று காலமுந் தோன்ற நின்றனை
இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்
அனைய தன்மையை யாதலின் நின்னை
நினைய வல்லவ ரில்லை நீள்நிலத்தே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலை இல்லாத தொல்லை நீங்குவதற்கும், பாராட்டுக்குரிய செயல்களைச் செய்து புகழைப் பெறுவதற்கும், தெய்வ வழிபாடு, புண்ணியச் செயல் ஆகியவற்றில் ஈடுபாடு கூடுவதற்கும் ஓதவேண்டிய பதிகம். இது "திருப்பாசுரம்" எனப்படும்.**

திருப்பாசுரம்

பண் - கௌசிகம் இராகம் - பயிரவி

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

அரிய காட்சிய ராய்த்தம தங்கைசேர்
எரியர் ஏறுகந் தேறுவர் கண்டமுங்
கரியர் காடுறை வாழ்க்கைய ராயினும்
பெரிய ராரறி வாரவர் பெற்றியே.

வெந்த சாம்பல் விரையெனப் பூசியே
தந்தை யாரொடு தாயிலர் தம்மையே
சிந்தி யாஎழு வார்வினை தீர்ப்பரால்
எந்தை யாரவர் எவ்வகை யார்கொலோ.

ஆட்பா லவர்க் கருளும் வண்ணமும் ஆதிமாண்புங்
கேட்பான் புகில்அள வில்லை கிளக்க வேண்டா
கோட்பா லனவும் வினையுங் குறுகாமை யெந்தை
தாட்பால் வணங்கித் தலைநின் றிவைகேட்க தக்கார்.

ஏதுக்க ளாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட் டுளன் எங்கள்சோதி
மாதுக்கம் நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீர் இறையே வந்து சார்மின்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடும் மெனவும் அருங்கூற்றம் உதைத்து வேதம்
பாடும் மெனவும் புகழல்லது பாவம் நீங்கக்
கேடும் பிறப்பும் அறுக்கும் மெனக்கேட்டீ ராகில்
நாடுந் திறத்தார்க் கருளல்லது நாட்ட லாமே.

கடிசேர்ந்த போது மலரான கைக்கொண்டு நல்ல
படிசேர்ந்த பால்கொண்டங் காட்டிடத் தாதை பண்டு
முடிசேர்ந்த காலையற வெட்டிட முக்கண் மூர்த்தி
அடிசேர்ந்த வண்ணம் அறிவார் சொலக்கேட்டு மன்றே.

வேத முதல்வன் முதலாக விளங்கி வையம்
ஏதப் படாமை யுலகத்தவர் ஏத்தல் செய்யப்
பூத முதல்வன் முதலே முதலாப் பொலிந்த
சூதன் ஒலிமாலை யென்றே கலிக்கோவை சொல்லே.

பாராழி வட்டம் பகையால் நலிந்தாட்ட ஆடிப்
பேராழி யானதிடர் கண்டருள் செய்தல் பேணி
நீராழி விட்டேறி நெஞ்சிடங் கொண்ட வர்க்குப்
போராழி யீந்த புகழும் புகழுற்ற தன்றே.

மாலா யவனும் மறைவல்ல நான் முகனும்
பாலாய தேவர்பக ரில்லமு தூட்டல் பேணிக்
காலாய முந்நீர் கடைந்தார்க் கரிதா யெழுந்த
ஆலாலம் உண்டங்கம ரர்க்கருள் செய்த தாமே.

அற்றன்றி அந்தண் மதுரைத் தொகை யாக்கினானுந்
தெற்றென்ற தெய்வந் தெளியார் கரைக்கோலை தெண்ணீர்ப்
பற்றின்றிப் பாங்கெதிர் வினூரவும் பண்பு நோக்கில்
பெற்றொன் றுயர்த்த பெருமான் பெருமானு மன்றே.

நல்லார்கள் சேர்புகலி ஞானசம் பந்தன் நல்ல
எல்லார் களும்பரவும் ஈசனை யேத்து பாடல்
பல்லார் களும்மதிக்கப் பாசுரஞ் சொன்ன பத்தும்
வல்லார்கள் வானோ ருலகாளவும் வல்ல ரன்றே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் நிரந்தரம் பெற

திருமயிலாப்பூர் - பூம்பாவைத்திருப்பதிகம்

சுவாமிபெயர் - கபாலீசுவரர். தேவியார் - கற்பகவல்லியம்மை.

பண் - சீகாமரம் இராகம் - நாதநாமக்கிரியை

திருச்சிற்றம்பலம்

மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்.

மைப்பயந்த ஒண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பயந்த நீற்றான் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஐப்பசி ஓண விழாவும் அருந்தவர்கள்
துய்ப்பனவுங் காணாதே போதியோ பூம்பாவாய்.

வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்
துளக்கில் கபாலீச் சரத்தான்தொல் கார்த்திகைநாள்
தளத்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்.

ஊர்திரை வேலை யுலாவும் உயர்மயிலைக்
கூர்தரு வேல்வல்லார் கொற்றங்கொள் சேரிதனில்
கார்தரு சோலைக் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்.

மைப்பூசும் ஒண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச்சரம் அமர்ந்தான்
நெய்ப்பூசு மொண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடுந்
தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
அடலானே றூரும் அடிக ளடிபரவி
நடமாடல் காணாதே போதியோ பூம்பாவாய்.

மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்
கலிவிழாக் கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
பலிவிழாப் பாடல்செய் பங்குனி யுத்திரநாள்
ஒலிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய்.

தண்ணா வரக்கன்றோள் சாய்த்துகந்த தாளினான்
கண்ணார் மயிலைக் கபாலீச்சரம் அமர்ந்தான்
பண்ணார் பதினெண் கணங்கள்தம் அட்டமிநாள்
கண்ணாரக் காணாதே போதியோ பூம்பாவாய்.

நற்றாமரை மலர்மேல் நான்முகனும் நாரணனும்
உற்றாங் குணர்கிலா மூர்த்தி திருவடியைக்
கற்றார்க ளேத்துங் கபாலீச்சரம் அமர்ந்தான்
பொற்றாப்புக் காணாதே போதியோ பூம்பாவாய்.

உரிஞ்சாய வாழ்க்கை அமணுடையைப் போர்க்கும்
இருஞ்சாக் கியர்க ளெடுத்துரைப்ப நாட்டில்
கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சரம் அமர்ந்தான்
பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்.

கானமர் சோலைக் கபாலீச்சரம் அமர்ந்தான்
தேனமர் பூம்பாவைப் பாட்டாகச் செந்தமிழான்
ஞானசம் பந்தன் நலம்புகழ்ந்த பத்தும்வலார்
வானசம் பந்தத் தவரோடும் வாழ்வாரே.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்யும் தொழில்கள் இலாபம் பெருகுவதற்கும், மூத்த சகோதரர்கள் வளமுடன் வாழ்வதற்கும் எவ்வளவு கடினமான வழக்காக இருந்தாலும் அதில் வெற்றி பெறுவதற்கும் ஓதவேண்டிய பதிகம்

திருவீழிமிழலை - திருவிருக்குக்குறள்

இறைவன் - வீழியழகேசுவரர் | இறைவி - சுந்தர குசாம்பிகை
பண் - குறிஞ்சி | இராகம் - அரிகாம்போதி

வாசி தீரவே, காசு நல்குவீர்
மாசின் மிழலையீர், ஏச லில்லையே.

இறைவ ராயினீர், மறைகொள் மிழலையீர்
கறைகொள் காசினை, முறைமை நல்குமே.

செய்ய மேனியீர், மெய்கொள் மிழலையீர்
பைகொள் அரவினீர், உய்ய நல்குமே.

நீறு பூசினீர், ஏற தேறினீர்
கூறு மிழலையீர், பேறும் அருளுமே.

காமன் வேவவோர், தூமக் கண்ணினீர்
நாம மிழலையீர், சேமம் நல்குமே.

பிணிகொள் சடையினீர், மணிகொள் மிடறினீர்
அணிகொள் மிழலையீர், பணிகொண் டருளுமே.

மங்கை பங்கினீர், துங்க மிழலையீர்
கங்கை முடியினீர், சங்கை தவிர்மினே.

அரக்கன் நெரிதர, இரக்க மெய்தினீர்
பரக்கு மிழலையீர், கரக்கை தவிர்மினே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயனும் மாலுமாய், முயலும் முடியினீர்
இயலும் மிழலையீர், பயனும் அருளுமே.

பறிகொள் தலையினார், அறிவ தறிகிலார்
வெறிகொள் மிழலையீர், பிரிவ தரியதே.

காழி மாநகர், வாழி சம்பந்தன்
வீழி மிழலைமேல், தாழும் மொழிகளே.

திருச்சிற்றம்பலம்

## நாள்தோறும் உணவும் உறக்கமும் சீராகப் பெறுவதற்கும், வீண் செலவுகள் ஏற்படாமல் இருப்பதற்கும், மறுபிறப்பைத் தவிர்ப்பதற்கும் இறை வழிபாட்டில் ஈடுபாடு மிகுவதற்கும் ஓதவேண்டிய பதிகம்

நமச்சிவாயத் திருப்பதிகம்
நல்லூர்ப் பெருமணம்

இறைவன் - சிவலோகத்தியாகேசர் | இறைவி - உமையம்மை
பண் - கௌசிகம் | இராகம் - பயிரவி

திருச்சிற்றம்பலம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

நம்பு வாரவர் நாவி னவிற்றினால்
வம்பு நாண்மலர் வார்மது வொப்பது
செம்பொ னார்தில கம்முல குக்கெலாம்
நம்பன் நாமம் நமச்சி வாயவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெக்கு ளார்வ மிகப்பெரு கிந்நினைந்
தக்கு மாலைகொ டங்கையில் எண்ணுவார்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்கன் நாமம் நமச்சி வாயவே.

இயமன் தூதரும் அஞ்சுவர் இன்சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தான்நினை வார்க்கினி யான்நெற்றி
நயனன் நாமம் நமச்சி வாயவே.

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனும் இயம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவ ரென்பரால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே.

மந்த ரம்மன பாவங்கள் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமும் மல்குமால்
நந்தி நாமம் நமச்சி வாயவே.

நரக மேழ்புக நாடின ராயினும்
உரைசெய் வாயினர் ஆயின் உருத்திரர்
விரவி யேபுகு வித்திடு மென்பரால்
வரதன் நாமம் நமச்சி வாயவே.

இலங்கை மன்னன் எடுத்த அடுக்கல்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கரன் ஊன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவன் உய்வகை
நலங்கொள் நாமம் நமச்சி வாயவே.

போதன் போதன கண்ணனும் அண்ணல்தன்
பாதந் தான்முடி நேடிய பண்பராய்
யாதுங் காண்பரி தாகி அலந்தவர்
ஓதும் நாமம் நமச்சி வாயவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஞ்சி மண்டையர் கையிலுண் கையர்கள்
வெஞ்சொல் மிண்டர் விரவில ரென்பரால்
விஞ்சை அண்டர்கள் வேண்ட அமுதுசெய்
நஞ்சுண் கண்டன் நமச்சி வாயவே.

நந்தி நாமம் நமச்சிவா யவெனுஞ்
சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யால்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
பந்த பாசம் அறுக்கவல் லார்களே.

திருச்சிற்றம்பலம்

## நல்வாழ்வுக்குரிய 10 நெறிகள்

1. காலையில் எழுந்தவுடன் கடவுளை நினைத்துப் பிரார்த்தனை செய்க
2. எல்லோருக்கும் இனியவராக, நல்லவராக இருக்க முயலுக.
3. மனத்தாலும் பிறருக்கு தீங்கு நினையாதே.
4. பிறர் பசியைப் போக்க முடிந்தளவு உதவுக.
5. உணவு உண்ணுமுன் மற்றவர்க்கோ, பறவைகளுக்கோ பிறவற்றுக்கோ சிறிது உணவளித்து விட்டுச் சாப்பிடுக.
6. இறைவனுடைய திருப்பெயரை உச்சரித்தவாறே உறங்குக.
7. தீயவைகளை எண்ணாமலும், பேசாமலும், கேட்காமலும், பாராமலும், இருக்கப் பழகிக்கொள்ள வேண்டும்.
8. பெரியோர்களை வணங்கி, அவர் கூறும் அறிவுரைகளை கேட்க வேண்டும்.
9. அடுத்தவர்களை அன்பாக நேசிக்கவும்.
10. உறங்கு முன் அன்றாட நன்மை தீமைகளை எண்ணிப் பார்த்து, தீமைகளை குறைக்க முயற்சிக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

## ஈஃபில் கோபுரம்

பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் 300 மீற்றர் (984 அடி) உயரமான இரும்புக் கோபுரம் ஒன்றுள்ளது. அதனை ஈஃபில் கோபுரம் என்பர். இக்கோபுரத்தைக் கட்டி முடிக்க 7300 தொன் இரும்பு செலவாயிற்று. இக்கோபுரத்தைக் கட்டியவர் (1889ல்) அலெக்சாந்தர் கஸ்டாவ் ஈஃபில் என்பவராவர். இக் கோபுரத்தின் மேல் மூன்று மாடிகளுள்ளன.

## சீனப்பெருஞ்சுவர்

வடசீனாவின் எல்லையில் பெரியதொரு சுவர் உள்ளது. இது 2400 கிலோமீற்றர்கள் நீளமும், 6தொட்டு 16மீற்றர் உயரமும், 4மீற்றர் அகலமும் கொண்டது. கி.பி. 200 அளவில் இப்பெருஞ்சுவர் கட்டப்பட்டது. அந்நிய படையெடுப்புக்கள் சீனாவிற்குள் நிகழாது இருப்பதற்காக சீஹுயகங்ரி என்ற சீனச் சக்கரவர்த்தியால் இச்சுவர் கட்டப்பட்டது. காவல் காக்கும் படைவீரர் தங்கும் கோபுர மாடங்களும் இச்சுவரிலுள்ளன.

## எம்பயர் ஸ்டேட் கட்டிடம்

ஐக்கிய அமெரிக்காவில் வாஷிங்டன் நகரத்தில் 102 மாடிகளைக் கொண்ட ஒரு கட்டிடம் உண்டு. அது 1250அடி உயரமானது. (415 மீற்) அதனை எம்பயர் ஸ்டேட் கட்டிடம் என்பர். இதுவே உலகிலே மிகவுயரமான கட்டிடமாகும்.

## பனாமாக் கால்வாய்

உலகிலுள்ள முக்கியமான கால்வாய்களில் ஒன்று பனாமாக் கால்வாய் ஆகும். இது வடஅமொரிக்காவிற்கும் தென் அமெரிக்காவிற்கும் இடையிலுள்ள ஒடுங்கிய நிலப்பகுதியில் வெட்டப்பட்டுள்ளது. அத்திலாந்திக் சமுத்திரத்திலிருந்து பசுபிக் சமுத்திரத்திற்குச் செல்ல வேண்டுமாயின் முன்பு தென்அமெரிக்காவைச் சுற்றியே செல்ல வேண்டும். இக்கால்வாய் வெட்டப்பட்டதும் பிரயாணத் தூரம் நூறில் ஒரு பங்காக குறுகியது. இக்கால்வாயின் நீளம் 80 கிலோமீற்றர்களாகும். 1913இல் இக்கால்வாய் வெட்டி முடிக்கப்பட்டது. ஆண்டுதோறும் 12000 கப்பல்கள் இதனூடாகச் செல்கின்றன.

## சுயெஸ் கால்வாய்

செங்கடலையும் மத்தியதரைக் கடலையும் இணைத்து வெட்டப்பட்டிருக்கும் கால்வாய் சுயெஸ் ஆகும். இந்து சமுத்திரத்திலிருந்து ஆபிரிக்காவைச் சுற்றி ஐரோப்பாவிற்கு நடந்த கப்பல் போக்குவரத்தை சுயெஸ் கால்வாய் குறுகிய பாதையாக்கியது. 20000 கிலோ மீற்றர் பயணத்தை சுயெஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்வாய் 9500 கிலோமீற்றராக குறுக்கியது. சுயெஸ் கால்வாயின் நீளம் 165 கிலோமீற்றராகும். இதனை வெட்டியவர் பேர்டினன்ட்டி லெஸ்ஸெம்ஸ் என்ற பிரான்சியர். 1858இல் வெட்டத் தொடங்கி 1869இல் முடித்தார். 55கோடி ரூபா செலவாயிற்று.

## உடலுறுப்புக்களைப் பெயர்த்துப் பொருத்துதல்

1954 டிசம்பர் 23ம் திகதி பொஸ்டன் நகரிலுள்ள ஒரு வைத்தியசாலையில் முதன்முறையாக உடலுறுப்புஒன்றுபெயர்த்துப்பொருத்தப்பட்டது.ரிச்சார்ட்ஹெரிக் என்பவர் சிறுநீரக நோய் ஒன்றினால் தாக்கப்பட்டு இறக்கும்தறுவாயில் இருந்தபோது அவருக்கு இன்னொருவரின் சிறுநீரகம் பொருத்தப்பட்டதால் உயிர் தப்பினார். அதற்குப் பின்னர் இவ்வகைச் சத்திரசிகிச்சை சர்வசாதாரணமாகிவிட்டது. முதன்முறையாக மனித இதயத்தை பெயர்த்துப் பொருத்திப் பெருஞ்சாதனையை ஈட்டிய பெருமை தென்னாபிரிக்காவைச் சேர்ந்த கிறிஸ்டியன் பேர்னாட் என்ற மருத்துவரையே சாரும்.

## சூரியன்

பிரபஞ்சத்திலுள்ள கோடானகோடி நட்சத்திரங்களில் ஒன்று சூரியனாகும். புவியைப் போல 109 மடங்கு விட்டத்தைக் கொண்டது. சூரியனின் விட்டம் 13,90,000 கிலோ மீற்றர்களாகும். சூரியன் பூமியிலும் பார்க்க 333,000 மடங்கு கனமானது. ஆனால் பூமியிலும் பார்க்க அடர்த்தி குறைந்தது. சூரியன் வாயுக்களால் ஆக்கப்பட்டதாகும். 70 தொட்டு 80 சதவீதம் ஐதரசன் வாயுவைக் கொண்டுள்ளது. சூரிய மண்டலக் கோள்கள் ஒன்பதும் ஒன்று சேர்ந்தாற் கூட சூரியனின் பருமன் 750 மடங்கு அதிகமாகவே காணப்படும். ஆயினும் உள்புற வெப்பநிலை மிகமிக உயர்வு. சூரியன் ஒவ்வொரு நிமிடமும் ஒரு சதுர அங்குலத்திலிருந்து 6,00,000 கலோரி வெப்ப சக்தியை எல்லாத் திசைகளிலும் வாரி இறைக்கின்றது. இவ்வளவு சக்தி தோன்ற ஒவ்வொரு வினாடியும் 40இலட்சம் தொன் எடையுள்ள ஐதரசன் எரிந்து 50 கோடி தொன் ஹீலியமாக மாறிக் கொண்டிருக்கின்றது.

## வெள்ளி

ஞாயிற்றுத் தொகுதிகளில் மிகவும் பிரகாசமான கோள் வெள்ளி ஆகும். 108 மில்லியன் கிலோ மீற்றர் தூரத்தில் சூரியனிலிருந்துள்ளது. 12,100 கி.மீ விட்டத்தினையுடையது. அது சூரியனை ஒரு தடவை சுற்றி வர 225 நாட்களும் தன்னைத்தானே சுழல 243 நாட்களும் எடுத்துக் கொள்கின்றது. சூரியன் உதிப்பதற்கு முன் இதனை விடிவெள்ளியாகவும். சூரியன் அஸ்தமித்த பின்னர் மாலைவெள்ளியாகவும் காணலாம். இக்கோளின் மேற்பரப்பு தான் பெறுகின்ற சூரியஒளியில் 75 சதவீதத்தைத் தெறித்து விடுகின்றது. அதனால் மிகப்பிரகாசமாகவுள்ளது. புவியிலிருந்து நோக்குவோருக்குத் தெரிகின்ற வெள்ளியின் பிறைநிலைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்துவமானவை. வெள்ளிக்கோள் சூரியனுக்கும், புவிக்குமிடையில் வருவதால் சந்திரன் போன்ற வளர்பிறை, தேய்பிறை வடிவங்களில் தெரிகின்றது.

## நட்சத்திர மீன்கள்

நட்சத்திர மீன் பெயருக்கேற்ப வடிவினது. நட்சத்திர மீனின் ஐந்து கரங்களும் இறுகப் பற்றக் கூடிய நூற்றுக்கணக்கான மயிர்ப்பீலி உறிஞ்சிகளைக் கொண்டிருக்கின்றன. ஒரு நிமிடத்திற்கு 2அங்குலம் வரையிலான வேகத்தில் நகரக் கூடியன. ஒரு நட்சத்திர மீனின் ஒரு கரம் துண்டிக்கப்பட்ட கரத்துண்டும் சிலவேளைகளில் தனித்த ஒரு நட்சத்திர மீனாக வளர்ந்து விடுவதுண்டு.

## அன்னாசி

அமெரிக்க வெப்ப வலயப் பழம் அன்னாசி ஆகும். பேரு நாட்டில் நானாஸ் எனப்பட்டது. தென்னமெரிக்காவிற்குச் சென்ற ஸ்பெயின் நாட்டவர் அன்னாசியை ஐரோப்பாவிற்கு முதன்முதலில் கொண்டு வந்தனர். அன்னாசிப் பழத்தில் சுமார் 90 வகைகளுள்ளன. ஒரு தடவை செய்கை பண்ணிய அன்னாசித் தோட்டத்திலிருந்து எட்டு முதல் பத்து ஆண்டு வரை பயன் பெறமுடியும்.

## கடல் சாமந்தி

கடலில் வாழும் விந்தையான உயிரினங்களில் ஒன்று கடல் சாமந்தி. பார்ப்பதற்கு ஒரு பூவைப் போலிருக்கும். வெள்ளை, பச்சை, நீலம் ஆகிய பல வர்ணங்களிற் கடற் சாமந்திகள் காணப்படுகின்றன. தடித்த மயிர் போன்ற பற்றுக் கொம்புகளுள்ளன. கடல் சாமந்தியின் வாயில் ஒரு மீன் சிக்கினால் இப்பற்றுக் கொம்புகளிலுள்ள நஞ்சு ஏறி அது மயங்கி விடும். கடல் சாமந்தியியன் கருவிலிருந்து புழுப்போன்ற லார்வாக்கள் வெளிவந்து தனித்தனி கடல் சாமந்திகளாக வளர்கின்றன.

## சாணக் கோலம்

ஒரு வகைக் கறுப்பு நிற வண்டுகள் தமது பின்னங்கால்களால் சாண உருண்டைகளை உருட்டித் தள்ளித் செல்வதைப் பொதுவாக அவதானிக்கலாம். வண்டு உருட்டுகின்ற சாண உருண்டை அதன் வடிவத்திலும் பெரிதாக இருக்கும். சிலவேளைகளில் அது ரெனிஸ் பந்தின் அளவில் இருக்கும். இதனைச் சிரமத்தோடு ஏன் இந்த வண்டு உருட்டிச் செல்கின்றது? இந்த வண்டு தான் வசிப்பதற்கு ஏற்ற ஓரிடத்தைக் கண்பிடித்ததும் ஒரு நிலவறையை அகன்று அதனுள் தான் உருட்டிவரும் சாணத்தைப் பாதுகாப்பாக வைக்கின்றது. அதன் மீது முட்டையிடுகின்றது. முட்டைகள் பொரித்துக் குஞ்சுகள் வெளிவந்ததும் அவற்றின் உணவாக இச்சாணம் பயன்படுகின்றது. பெண் வண்டு ஒரு வருடத்தில் ஆக நான்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு முட்டைகளை இடும். அதனால் அது சேகரிக்கின்ற சாண உருண்டை குஞ்சுகள் வளரப்போதுமானது.

**மின்சார மீன்**

தங்கள் உடலில் மிக்சக்தியை உற்பத்தி செய்யும் பலவகை மீன்கள் உள்ளன. அவற்றின் விஷேச தசைகளில் மின்சக்தி உற்பத்தியாகின்றது. ஒரு நரம்பு தூண்டிவிடும் பொழுது பெரும்பாலான தசைகள் சுருங்கும். ஆனால் விஷேசமான மின்தசை சுருங்க முடியாது. நரம்பு அதைத் தூண்டும் போது ஒரு மின் அதிர்ச்சி உண்டாகின்றது. மின்சார யீல் எனப்படும் மின் 500 வோல்ட் மின்சக்தியை உற்பத்தி செய்கிறது. தன்னருகிலுள்ள ஓர் உயிரினத்தை ஸ்தம்பித்துப் போகச் செய்ய அது போதுமானதாகும். தன் இரையை இவ்வாறு கவர்ந்து விழுங்கிக் கொள்கின்றது.

## மாதங்களின் பெயர் வந்த கதை

| | | |
|---|---|---|
| ஜனவரி | – | சொர்க்கத்தின் வாயிற்காப்போனாகிய (Janus) என்பவரின் பெயரால் அழைக்கப்படுகின்றது. |
| பெப்ரவரி | – | பாவங்களுக்குப பரிகாரம் தேடும் காலத்தை பெப்ருவாலியா (Februalia) என்பர். அப்பெயரால் வழங்கப்படுகின்றது. |
| மார்ச் | – | யுத்த தேவதையான மார்ஸ் (Mars) என்பவரின் பெயரால் அழைக்கப்படுகின்றது. |
| ஏப்பிரல் | – | ஏப்பிறிரே (Aperire) என்ற லத்தீன் வார்த்தை. அதன் அர்த்தம் மலர்வு அரும்புதல். |
| மே | – | தாவரங்களை வளர வைக்கும் தேவதையான மேய்யா (Maia) வின் பெயரால் அழைக்கப்படுகின்றது. |
| ஜூன் | – | ஜுவனிஸ் (Juvenis) |
| ஜூலை | – | யூலியர்சீஸரின் பெயரால் அழைக்கப்படுகின்றது. |
| ஆகஸ்ட் | – | முதலாவது ரோமானியச் சக்கரவர்த்தி ஆகஸ்தஸ்சின் (Augustus) பெயரால் அழைக்கப்படுகின்றது. |
| செப்டம்பர் | – | லத்தீன் வார்த்தையான செப்ரம் (Septem). அதன் அர்த்தம் ஏழு |
| ஒக்டோபர் | – | லத்தீன் வார்த்தையான ஒக்டோ (Octo). அதன் அர்த்தம் எட்டு. |
| நவம்பர் | – | லத்தீன் வார்த்தையான நவம் (Novem). அதன் அர்த்தம் ஒன்பது. |
| டிசம்பர் | – | லத்தீன் வார்த்தையான டிசம் (Decem) அதன் அர்த்தம் பத்து. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயனுள்ள மருத்துவ குறிப்புக்கள்

01. பாகற்காயை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொண்டால் இருமல், களைப்பு, நீரிழிவு வயிற்றுப்புழு போன்ற பிரச்சனைகட்கு நிவாரணம் கிடைக்கும்

02. வேப்பங்குச்சியில் மேசையுப்பைத் தொட்டுத் பற்களைத் துலக்கி வர பற்கள் பளிச்சென்ற வெண்ணிறத்தைப் பெறும்.

03. காலையில் எழுந்தவுடன் 04 ரம்லர் தண்ணீர் தினமும் பருகி வந்தால் மலச்சிக்கல் நீங்கும்.

04. மஞ்சள் பொடியை வேப்பிலையுடன் சேர்த்துத் தண்ணீர் விட்டு அரைத்து பூச்சுக்கடி, சருமக்கிரந்தி உள்ள இடத்தில் பூசி வரக் குணம் தெரியும்.

05. மஞ்சள்த்துண்டை ஊசியில் குற்றி நெருப்பில் பிடித்து எரிந்த பின்பு வரும் புகையை மூக்குத் துவாரத்தினருகில் பிடித்து உள்ளிழுத்துக் கொண்டால் (தொடர்ந்து 03 நாட்களுக்கு) தலைவலி, தடிமன், மூக்கடைப்பு என்பன குணமாகிவிடும்.

06. பீற்றூட், கரட் போன்றவற்றைச் சுத்தப்படுத்திக் கழுவிப் பச்சையாகச் சாப்பிட்டு வந்தால் உடலுக்குவேண்டிய இரும்புச்சத்து கிடைப்பதுடன் கண் பார்வை சீராகும். இளநரையும் ஏற்படாது.

07. இரத்த அழுத்தமுள்ளவர்கள் காலையில் அரை மூடி தேசிப்பழச்சாறுடன் அல்லது இஞ்சிச்சாறுடன் இரண்டு தேக்கரண்டி தேன் விட்டு அருந்தி வர இரத்த அழுத்தம் சமப்படும்.

08. தொண்டை நோவிற்கு வேப்பெண்ணையைத் தொண்டையின் வெளிப்புறத்தில் பூசி வரக் குணமாகிவிடும்.

09. சிறு காயங்கள் ஏற்பட்ட இடங்களில் தேன் சிறிதளவு பூசிவர காயங்கள் ஏற்பட்ட இடங்களில் தேன் சிறிதளவு பூசிவர காயங்கள் விரைவில் குணமாவதுடன், காயத்தின் வடுவும் நீங்கிவிடும்.

10. முந்திரி வற்றல் 50 கிராம் எடுத்து சுத்தமாகக் கழுவி ரம்ளர் தேனில் இரவில் ஊறவைத்து காலையில் சாப்பிட்டு வர மலட்டுத்தன்மை நீங்கும்.

11. படுக்கைக்கு செல்லும் முன் அளவான சூடான நீரில் பாதங்களைப் 10 நிமிடங்கள் அமிழ்த்தி வைத்துக் கொண்டால் பாதங்களில் வெடிப்புக்கள் ஏற்படாமல் மிருதுவாக இருக்கும்.

12. காதுகுத்துதல், மூக்குத்தி போடுவதற்காக மூக்கில் குத்துதல் போன்ற நிகழ்வுகளால் ஏற்படும் புண் மாறாவிட்டால் சிறிதளவு பெருங்காயத்தை எடுத்து தண்ணீர் விட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரைத்து புண் உள்ள இடத்தின் மீது தடவி விட்டால் மறு நாளே புண் காய்ந்து விடும். அல்லது கடுகை அரைத்து பூசிக் கொள்ளலாம்.

13. புளியமிலைகளை அவித்து நீரை இறக்கி ஆற வைத்து நகச் சூடாக இருக்கும் போது குளித்தால் உடல் வலி நீங்கி விடும்.

14. நல்லெண்ணெயில் உலர்ந்த வேப்பம் பூக்களைப் போட்டு ஊற வைத்துக் கொண்டு தேவையான போது தலைக்குத் தேய்த்து முழுகி வர பொடுகு நீங்கிவிடும்.

15. பஸ்சில் பயணம் செய்யும் போது வாந்தி எடுப்பவர்கள் காதில் பஞ்சை வைத்துக் கொண்டு பயணம் செய்தால் வாந்தி வராது அல்லது தேசிப்பழத்தை நன்கு கசக்கி மணந்து கொண்டிருந்தால் வாந்தி வராது.

16. தினசரி காலை ஒரு ரம்ளர் இளம் சூடான நீரில் தேன் கலந்து பருகி வர உடல் பருமன் குறையச் தொடங்கும். அல்லது வாழைத்தண்டை இடித்துச் சாறு பிழிந்து வாரம் ஒரு தடவை அருந்தி வர உடல் பருமன் குறையும்.

17. குழந்தைகளுக்கு இரவில் இரண்டு பேரிச்சம்பழங்களும், 1/2 ரம்ளர் பாலும் உண்ணத் தினமும் கொடுத்து வந்தால் மனோபலமும், மூளைப்பலமும் ஏற்படும்.

18. அப்பிள் பழத்தைத் தினமும் சாப்பிட்டு வர மலச்சிக்கல், அஜீரணம் குடலில் ஏற்படும் சளியின் தொல்லை ஆகியன நீங்குவதுடன் சிறுநீர்ப்பையில் கற்கள் ஏற்படாமல் தடுக்கிறது.

19. வயிற்றுப் போக்கு உள்ளவர்கள் கடுமையான தேயிலைச்சாயம் அருந்தினால் வயிற்றுப் போக்குக் கட்டுப்படும்.

20. ஒரு ரம்ளர் பசுப்பாலைக் காய்ச்சி 1/2 தேக்கரண்டி மிளகு துாள் 1/2 தேக்கரண்டி மஞ்சள்தூள் கலந்து மூன்று நாட்கள் காலையும், மாலையும் குடித்து வர இருமல் குணப்பட்டு களைப்பும் நீங்கும்.

21. முகத்தில் எண்ணெய் வடிவத்தைத் தடுப்பதற்கு முட்டையின் வெண்கருவுடன் அரை மூடி தேசிப் பழச்சாறும் கலந்து முகத்திற்குப் பூசிப் பத்து நிமிடம் ஊறவிட்ட பின்பு கழுவினால் முகத்தில் பிசுபிசுப்புத் தன்மை நீங்கி விடும்.

22. பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை கொழுந்து வேப்பிலையை அரைத்துப் பசுப்பாலில் கரைத்து இரண்டு தேக்கரண்டி வெறும் வயிற்றில் கொடுத்து வந்தால் எந்தக் கொடிய நோயும் ஏற்படாது.

23. தினமும் ஒரு முறை எலுமிச்சம்பழச்சாறு குடித்து வர சரும நோய்கள் ஏற்படாது.

24. கர்ப்பிணிகள் வாரத்தில் இரண்டு நாட்கள் கடலையை வேக வைத்துச் சாப்பிட்டு வந்தால் அதிக நன்மை ஏற்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. தேங்காயெண்ணெயில் கற்பூரத்தைப் போட்டுச் சூடாக்கி தலைப்பிடிப்பு ஏற்பட்ட பகுதிகளில் நன்கு தேய்த்துப் பூசினால் குணமுண்டாகும்.

26. வல்லாரையிலை 1/4 கிலோகிராம் எடுத்து இடித்துச் சாறு பிழிந்து சாற்றை சம அளவிற்குத் தேங்காயெண்ணெய் கலந்து காய்ச்சி வடி கட்டித் தினமும் இரண்டு தேக்கரண்டி தலையில் அழுத்தித் தேய்த்து வர தலைமுடி செழிப்பாக வளரும்.

27. இரவு படுக்கப் போவதற்கு முன்பு ஒலிவ் எண்ணெயை முகத்திற்குப் பூசிக் காலையில் குளிர்ந்த நீரில் கழுவி வர சிறிய தழும்புகள், சுருக்கங்கள், கரும்புள்ளிகள் நீங்கும்.

28. குப்பைமேனி இலையுடன் சிறிது உப்பு சேர்த்து அரைத்துத் தேமல் உள்ள இடங்களில் பூசி வரக் குணமாகும்.

29. சீரகம் ஒரு மேசைக்கரண்டியினை எடுத்துக் குடிப்பதற்கான தண்ணீர் கொதிக்க வைக்கும் போது அதில் போட்டுத் கொதிக்க வைத்து மண் பானையில் ஊத்தி வைத்து ஆறிய பின்பு குடித்து வர உடல் உஸ்ணம் சமப்படும்.

30. குளிர் காலத்தில் உதடுகளில் வெடிப்பு ஏற்படுவதைப் தடுப்பதற்காகப் படுக்கச் செல்லும் முன்பு உதடுகளிற்கு கிளிசறீன், தேசிப்பழச்சாறு, பன்நீர் மூன்றையும் சம அளவில் கலந்து பூசி வர வெடிப்புக்கள் ஏற்படாது.

31. கர்ப்பிணிகள் முருங்கையிலை, நெல்லிக்காய் போன்றவற்றை உணவில் சேர்த்து வந்தால் காலில் நீர் கட்டி வீக்கம் ஏற்படாது.

32. சிறிய வெங்காயத்தில் 1/4 கிலோகிராம் எடுத்து வெட்டி 1/2 போத்தல் நல்லெண்ணெய் இட்டு வெங்காயம் சருகாகும் வரை காய்ச்சித் தலைக்கு அழுத்தித் தேய்த்து வர முடி உதிர்வது கட்டுப்படும்.

33. துளசிச் சாற்றில் சந்தனம் கலந்து இரவில் முகத்திற்குப் பூசி வர முகப்பரு மறையும்.

34. கண் பார்வை கெடாமலிருக்க கரட்டைத் தினமும் பச்சையாவோ, சாறு பிழிந்தோ சாப்பிட்டு வர வேண்டும்.

35. ஓமத்தைக் கழுவி காய வைத்து வறுத்துப் பொடி செய்து சிறிதளவு சர்க்கரை சேர்த்து இடித்து வைத்துக் கொண்டு, வயிற்றுப் போக்கு ஏற்படும் போது தேன் கலந்து சாப்பிட்டால் வயிற்றுப்போக்கு நின்று விடும். தேன் கிடைக்காவிடில் சும்மாவாகவும் சாப்பிடலாம்.

36. சீதத்துடனும், இரத்தத்துடனும் வயிற்றுப்போக்கு ஏற்பட்டால் வெந்தயத்தை வறுத்துப்பொடி செய்து சீனி கலந்து சாப்பிட்டால் வயிற்றோட்டம் குணமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. வாரத்தில் ஒரு தடவையாவது நீராவியை முகத்திற்குப் பிடித்தால் முகத்திலுள்ள அழுக்குகள் நீங்குவதுடன் சீரான சுவாசத்திற்கு உதவும்.

38. தொண்டை கட்டிக்கொண்டு இயல்பான பேச்சு வராவிடின் மாவிலைகளின் இளம் தளிர்களை ஒரு கைபிடியளவு எடுத்துக் கசாயமாக்கித் தேன் கலந்து சாப்பிட தொண்டை கட்டு நீங்கும். அல்லது சிறிதளவு சுண்ணாம்புடன் தேன் கலந்து தொண்டை குழியின் வெளிப்புறம் தடவக் குணம் தெரியும். அல்லது வேப்பெண்ணெய்யைத் தொண்டையின் வெளிப்புறம் பூசி வரக் குணமுண்டாகும்.

39. வெள்ளரிப்பிஞ்சைஞப் பச்சையாகச் சாப்பிட்டு வர இரத்தக் கொதிப்பு மறையும்.

40. தாய்ப்பால் சுரப்பதை நிறுத்தவேண்டிய தேவை ஏற்பட்டால் மல்லிகைப் பூவைப் பசுந்தையாக அரைத்து மார்பில் பற்றுப்போட்டு வந்தால் தாய்ப்பால் வற்றிவிடும்.

41. தேசிப்பழத்தைத் தாட்டு வைத்தெடுத்து இளஞ்சூட்டோடு தலையில் தேய்த்து 1/4 மணி நேரம் கழித்து முழுகி வரப் பொடுகு நீங்கிவிடும்.

42. வாயில் ஒரு தேக்கரண்டி வெந்தயத்தைப் போட்டு ஒரு கப் தண்ணீரை குடித்தால் வயிற்றுவலி உடனே குறைந்து விடும்.

43. துளசியிலைச்சாறுடன் ஒரு தேக்கரண்டி தேன் கலந்து வெறும் வயிற்றில் அருந்தி வர முகப்பரு நீங்கிவிடும். அல்லது உள்ளியைப் பாலில் இட்டு பசுந்தையாக அரைத்துப் பரு உள்ள இடத்தில் பூசி வரலாம்.

44. உள்ளியை இடித்துச் சாறெடுத்து இரண்டு துளிகள் காதில் விட்டால் காது வலி உடனேயே நின்றுவிடும்.

45. மசக்கையால் ஏற்படும் வாந்தியைக் குறைக்க மாதுளம்பழத்தை உண்டு வர வாந்தி குறையும்.

46. பொட்டு வைக்கும் இடத்தில் அலர்ஜி ஏற்பட்டால் கடுக்காயை சந்தனக்கல்லில் அரைத்துப் பூசி வரக் குணமாகிவிடும்.

47. அசைவ உணவு அருந்திய பின்பு சிறிதளவு வெல்லவத்தை வாயில் போட்டு மென்றால் உணவு விரைவாக ஜீரணமாகிவிடும்.

48. இஞ்சி சாறுடன் சுடுநீர் கலந்து காலையும், இரவும் அருந்தி வர ஆஸ்மா தொல்லை நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரைநகர் வியாவில் ஐயனார் தேவஸ்தானம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காரைநகர்
வியாவில்
ஐயனார்
தேவஸ்தான
மணிமண்டபம்



காரைநகர்
வியாவில்
ஐயனார்
தேவஸ்தான
நூல் நிலையம்



காரைநகர்
வியாவில்
ஐயனார்
தேவஸ்தான
கம்பியூட்டர்
சென்ரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






காரைநகர் வியாவில் ஐயனார்
தேவஸ்தான
தேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







வியாவில்

பால்பண்ணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# அஞ்சலிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகன் E.S.P. நாகரத்தினத்தின் ஆதங்கம்

# "சீர்மிகு வாழ்வினைத் தந்தவளே......"

உன்னை உருக்கி
என்னை ஈன்ற அன்னையே
உதிரத்தைப் பாலாக்கி
எனக்கு ஊட்டினாய்
எனக்கு மட்டுமா இல்லை
என் உடன் பிறப்புகளுக்கும்தான்

தாலாட்டிச் சீராட்டிப்
பாலூட்டி வளர்த்த தாயே
உன் மடியில் தவழ்ந்தபோதும்
ஊர் உலகம் போற்ற
உயர்ந்து நின்ற போதும்
எந்தக் குறையும் நீ எனக்கு
வைக்கவில்லை அம்மா

எந்தையும் தாயும் மகிழ்ந்திருந்தும்
சிந்தையில் நாமும் உயர்ந்திருந்தோம்
தந்தை அமரராகியும் - எந்தன்
சிந்தை தளராமல் சீர்மிகு வாழ்வினைத்
தந்தவளே தாயே உன்றன்
சிந்தையில் எண்ணியபடி
ஊரினில் உன் ஈமைக்கிரியைகள்
நடக்க நீ கொடுத்து வைக்கவில்லை அம்மா

உன் இறுதி நாளில் நான்
ஊர் திரும்ப எண்ணி உன்னை
தலைநகரில் வந்து பார்த்தபோது
தலை நிமிர்த்திப் பார்த்தாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்தாமரையாய் உன் முகம்
ஒளிர்கிறது என்றேனே
உன் பிரிவுக்குக் கட்டியம் கூறியதை
அன்று நான் அறியவில்லை
மருமகளுக்குத் தெரிந்தும் கூட
அவள் சொல்லவில்லை எனக்கு

சொல்லாமல் கொள்ளாமல்
சென்றுவிட்டாய் நீ
உன் பிரிவு அறிந்து
ஊர் முழுதும் இன்றுவரை
என் வீட்டில் கூடுகிறது
உன் கிரியை ஊரில்
நடத்தவில்லை என்றுதான்
ஏங்குகிறது என்மனம்

தலைநகரில் உயிர் பிரிந்தாய்
வி.ஐ.பி விருந்தினர் போல்
விழாவெடுத்துச் சென்றுவிட்டாய்
கொள்ளி வைக்க கொடுத்து வைத்த
மனத் தெளிவில் உன் ஆத்மா சாந்திபெற
வாரிவளவு கணபதியை வணங்கி
தினமும் தில்லைக் கூத்தன்
திருவடியைத் தொழுகின்றேன் அம்மா!

அன்பு மகன்,
**லயன் E. S. P நாகரத்தினம் MJF**
*"பொன்மனச்செம்மல்", "மனிதநேய ஈகையாளன்",*
*"கல்விக் காருண்யன்"*

மருமகள் தங்கமலர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மகன் E.S.P. கணேசலிங்கத்தின் ஆதங்கம்

# எங்கே என் தாயெனும் தெய்வம்

கையிலே உறங்க வைத்து கட்டி அரவணைத்து
காதலித்து முத்தமிட்டு வளர்த்த தாயே
கண்கலங்கி கதறியழ என்னை விட்டு
காற்றாய் பறந்து போன தெய்வத் தாயே
தண்ணொளி தளர்ந்திடா புன்முறுவல் முகத்தாளே
தளர்விலா உறுதியும் குறைவுபடா வார்த்தையும்
கூறிடும் வார்த்தையில் கோடி அர்த்தமும்
கொண்ட எம் அம்மாவே ! பாரினில்
உமை போல் ஒரு தாயை காண்போமா உமதன்பை
காலனவன் செய்த மாயத்தால்
கண்கலங்கி வாடுகின்றேனம்மா
எடுக்கும் ஜென்மமெல்லாம் தாயாக நீ இருக்க
என் மடி மீது முகம் புதைத்து மாண்புற வேண்டுமம்மா
ஈழத்து சிதம்பர சுந்தரேஸ்வரப் பெருமானே
உன் எல்லையில் உலகுதனில் என் தாயை
ஒருவனாக்கி அல்லல் இல்லாமல் காத்திடவே
நான் இருகரம் கூப்பி உன்னை வேண்டுகிறேன் - அம்மா
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை நோக்கி
இருகரமேந்தி வேண்டுகிறேன் அம்மா!

இங்ஙனம்

**E.S.P. கணேசலிங்கம்**

*அகில இலங்கை சமாதான நீதவான்*

*வணிக மாமணி*

*இறைபணிச் செம்மல்*

*சிவத்தொண்டன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் பிள்ளைகள் புலம்பல்

ஒப்பாரும் மிக்காரும் இல்லாத
உயர்ந்த தலைவியாய் தாயாய்
ஆற்றி வைத்த கருமமெல்லாம்
நெஞ்சிலே நிலைத்திருந்தாலும்
சொல்லில் வடிக்க வொரு வார்த்தை வர மறுக்குதம்மா
பெற்றெடுத்த நாள் முதலாய் எமை
கட்டி வைத்த நாள் வரையில் பட்ட துயர்
நெஞ்சில் அடுக்கடுக்காய் இருந்தாலும்
சொல்லில் வடிக்க வொரு வார்த்தை வர மறுக்குதம்மா
பாலூட்டும் போதே நல்ல பண்பினையும்
கல்வியையும் சேர்த்தூட்டி எமக்கு
ஞாலம் போற்றும் ஞானம் தந்தாயே அம்மா
ஏற்ற வரன் தேடி இனிதே முடித்து வைத்தீர்
நாம் பெற்ற செல்வங்களை நலமுடனே
வளர்த்தெடுத்த எம் தாயே
செய்ததெல்லாம் போது மென்று
சில நொடியில் பறந்ததேனோ
வையமெல்லாம் தேடியும் கண்டிலமோ
வார்த்தை வர மறுத்தாலும் விழி நீர் - ஊற்று
நிற்க மறுக்குதம்மா ஒருமுறை தானும் வந்து
எம் கண்ணீருக்கு அணைகட்ட மாட்டாயோ
இப்பிறவிக் கடன் யாவும் இனிதே முடித்தமையால்
மறுபிறப்பொன்று இல்லையென்று நம்புகிறோம்
இருந்தும் பிறந்து விட்டால் - என்றும் எம் தாயாய் வந்து விடம்மா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்கள் உள்ளங்களில் சில துளிகள்

மண்மீது மருமக்கள்
மனம்நோக விடாது எங்கள்
கண்ணாக இருந்த காருண்ய ஈஸ்வரியே
பெண்ணுக்கு இலக்கணமாய்
பேணும் தனயளாய்
எண்ணியிருக்க
எம்மை விட்டு எங்கு சென்றீர்

மாமி என்றழைக்க மகத்தான தாயே நீங்கள்
மக்களாகிப் போனோம் நாம் மகத்தான உள்ளம் கண்டு
ஏச்சிருக்கும் பேச்சிருக்கும் எரிந்து விழல் நிதமிருக்கும்
என்றிருக்கும் உலகினிலே எம்மாமி தெய்வமன்றோ

பாசத்தாலெமை வளைத்து பக்குவமாய் நேசித்து
வாசமிகு மலர்கள் போல வருடி நெஞ்சை மகிழ்வித்து
தேசு மிகு சந்திரனாய் தெளிவான ஒளி தந்தாயே
மாசில்லா மாமியாரே உமை எங்கு காண்போம் நாமே
மங்காத ஒளி விளக்கே மாமி எனும் பெரு நதியே
ஊழிக்காலம் வரை உளங்காது உம் நினைவு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்றார் உறவினர் புலம்பல்

சிரிப்பும் நடையழகும் சினக்காத பேச்சழகும்
உரித்துடனே என்றும் உபசரிக்கும் உத்தமியே
தரித்து மறப்போமா தாராள குணமதனை
மரித்தாயே அம்மா மண்மறைந்து போனாயோ
பொல்லாத துயர் கண்டு புழுங்கி மனம் வாடுகின்றோம்

உற்றார் உறவினர் உளம் மகிழ விருந்துண்டு வாழ
வினைகள் பல செய்வீர்
பச்சை அரிசி சோறும் பச்சடியும்
பருப்பும் என்றாலும் பண்பான குணத்துடனே
மற்றவருக்குப் பரிமாறி பாசத்தை காட்டிடுவீர்
நேசத்தை வளர்த்திடுவீர்

# பெறா மக்கள் புலம்பல்

பெற்ற தாய்க்கு ஒப்பான எம் தாயே
பேறு பெற்ற வாழ்வென்று பெருமையாய் இருந்தோம்
கூறு போட்டு விட்டானே கொடிய காலனவன்
மாறுபட்ட மனத்தோடு மயங்கி அலைகின்றோம்
கூறுமம்மா நீ சென்ற இடம் யாமறியோம்
ஆறாகிக் கண்கள் மெய் நனைக்க
தேற வழி இன்றி தேம்பி அழுகின்றோம்
காட்டி விட மாட்டீரோ ஒரு தடவை
கருணை முகம் பார்த்து நாம் உய்திடவே
வேற்றாகி ஒன்றாகி நின்றாள் பதம் போற்றி
விண்ணில் முன் இருக்கவென்று
வேண்டுகின்றோம் நாள் தோறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்துனர்கள் புலம்பல்

அண்ணி என்றும் மச்சாள் என்றும்
அன்பொழுகப் பேசி நாம்
அகமகிழ்ந்து வாழ்ந்தோமே
ஒருகைக்கு மறுகை உதவியாய்
ஒன்று பட்டு வாழ்ந்ததெல்லாம்
ஒரு நொடியில் வீணாச்சு
மைத்துணரே ஆனாலும்
உடன் பிறந்த சகோதரராய் ஒன்றி இருந்தோமே
மறவாத அன்பும் இறவாத பாசமும்
நிறைவான நெஞ்சமும் கொண்டு
நானிலம் போற்ற வாழ்ந்தோமே
இன்று பதைபதைத்து வாடுகின்றோம் - உம்
பேச்சு நின்ற காட்சி எங்கள் மூச்சை அடைக்குதம்மா
பேதலித்து வாடுவதே எம் நிலையாம்
அல்லல் பிறவி அறுப்பான் தாள் பற்றி
தொல்லையின்றி வாடி வேண்டுகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப் பிள்ளைகள் பரிதவிப்பு

அப்பம்மா அம்மம்மா என்று நாமும் அழைத்திடவே
ஆசையாய் இனி எமக்கு யாருளரோ இப்பாரினிலே
ஒப்புடனே உவகையினால் நீ எங்களை உபசரித்தே
செப்பிடும் மொழியிலே சேதி கண்டோம்
முட்டியே ஒரு கணம் முத்தங்கள் ஈந்ததை
எப்படி நாங்கள் எளிதில் மறந்திடுவோம்.

# பூட்டப்பிள்ளைகள் ஏங்கல்

அன்பாக எம்மை அள்ளியே அணைத்துக் கொஞ்சிய பூட்டியே
பண்பாக எம்முடனே உம்மொழியைப் பேசிடுவீர்
அமுதம் போல் இனிக்கும் அளவற்ற அன்புதனை
குமுதம் போல் தந்தாயே பேரழகுப் பெட்டகமாய்
பூட்டியே தந்திட்டாய்
பெருமை தரும் உவகை மொழி பேச்சைக் கேட்டு நாமும்
ஆற்றொணா சோகமான அழுகையுடன் நிற்கின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் எம் அப்பம்மாவுக்கு...

**அ**ன்பை அள்ளித் தந்த

**ஆ**த்திசூடி கூறித் தந்த

**இ**றவாப் புகழ் கொண்ட

**ஈ**ற்றிலும் பேறு கண்ட

**உ**த்தம புத்திரியாய் இருந்த

**ஊ**னுருக்கி கடவுளை வழிபட்ட

**எ**த்துயரும் எங்களை அணுகாது

**ஏ**ற்றமாய் இருந்து எம்மை

**ஐ**யமில்லாது வளர்த்து

**ஒ**ப்புடனே நல்லவர்களாக்கி

**ஓ**யாமல் எம்முடனிருந்த

**ஔ**வைக்கு நிகரான அப்பம்மாவே!

நீங்கள் இறைவனடி சேர பிரார்த்திக்கின்றோம்!

*இங்ஙனம்*

*பாசமிகு பேரப்பிள்ளைகள்*

**E.S.P. கணேசலிங்கம் அபிராமி**

**E.S.P. கணேசலிங்கம் செந்தூரன்**

**E.S.P. கணேசலிங்கம் வைஷிகா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Teardrops in our eyes

You had given us the most powerful and
kind care more than our parents.
You had given us the important advices which
helped us to be a good citizen today.
The enjoyable moments which we spent
with you are still hovering and lingering
in our eyes....
We are alone in this world
without you grandma....
We are always thankful to you grandma...
Why did you leave us?
Eventhough you left us, we pray
to the God for your spirit to meet God.

Your beloved grand daughters

**E.S.P. Ganeshalingam Abirame**

**E.S.P. Ganeshalingam Vaishika**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் நீ எம்மனதில் வாழ்கின்றாய்

அப்பாச்சி அப்பாச்சி என்று
ஆசையுடன் அழைக்க இன்று
நீ இல்லை என்று கூட
எம் மனம் ஏங்கவில்லை
என்றும் நீ எம் மனதில்
வாழ்கின்றாய் என்றுதான்
எண்ணுகின்றோம்

பேரமார் பெருமைகளைப்
பேசி மகிழ்ந்திருந்தாய்
கடைக்குட்டிப் பேரன் நான்
கடைசிவரை வைத்தியசாலையில்
உயிருடன் உன்னைப்
பராமரிக்கும் பேறு பெற்றேன்

இறுதி யாத்திரையில் - உன்
உடலத்தைத் தோளில் சுமந்து
சுடுகாடு வரை வந்ததை
உலகமே கண்டு வியந்ததாம்
பேரமார் பாசத்தைப்
பறைசாற்றி நின்றதாம்

ஊர் பேசிய உன் புகழைக்
கேட்டு மகிழ்ந்திருந்தோம்
பார் புகழ உன்னோடு
பாதயாத்திரை வந்தோம்
அப்பாச்சி உன் ஆத்மாசாந்திபெற
தொப்பையப்பன் பாதம் தொழுகின்றோம்
ஓம் சாந்தி சாந்தி சாந்தி !

*- பிரிவால் துயருறும் பேரன்மார்*

**கஜேந்திரன்**

**கஜமுகன்**

**கமலநேசன்**

**கமலநாதன்**

**கமலரூபன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Beloved grandma!

Beloved and humble
Kind and simple
Helpful and affectionate and
That is my grandma
We will miss you  forever, but
We will remember you forever
Your kind words had made a
Progress in my life
She used to utter these following kind words – which
Still linger in my thoughts
*"Chenthura, my lovely chap, you should  study well and I want you*
*To be a useful citizen*
*This is my wish, my boy"*
I pray to the Lord for the spirit of yours to meet God's feet

*Your loving Grandson*
**E.S.P. Ganeshalingam Chenthuran**
*Colombo International School*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசமிகு சீனியாச்சி !

எமது சிறு வயதினிலே
பாசமுடன் நெஞ்சமதில் நேசமூட்டி
நேர்வழியில் வாழ்க்கை காட்டி
துயரமென்று வந்த வேளை
துடைத்தனை இன்பமூட்டி
அகிலமதில் மதிப்பின் மனிதராக ஆக்கி
எம்மைப் பாரினில் புகமுடன் வாழ வைத்தீர்

கணபதியைக் கைதொழுத காருண்ய சீலரே !
கண்ணியமானவரே
கற்பக விநாயகரைக் கரங்குவித்து
காலமெல்லாம் நல்ல காரியமாற்றி வந்தீர் - அவனை
தினமும் வந்தனை செய்தே நாம் வாழ்விலே
வளம் பெறவே வரம் வேண்டி நின்றீர்

உற்றார் தமக்கு உயர் குணத்திலகமாய் திகழ்ந்தீர்
அயலவர் தமக்கு அற்புத மாணிக்கமாய் நின்றீர்
நற் பயன்கள் சுரக்கும் மக்கள்
ஞாலமெங்கணுமே போற்ற வைத்தீர்
இறைவனடி சேரும் காலம் அணுகவே
இவ்வுலகு நீத்துப் பேரின்பப் பெருவாழ்வு பெற்றீர்

உங்கள் ஆத்மா சாந்தி பெற கற்பக விநாயகரை
உருகியே வேண்டுகிறோம்

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

**நடராசா கணேசன் (கணபாலா)**
*பேரமகன்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சிலே நிறைந்த அமரர்
# திருமதி E.S.பேரம்பலம் மாணிக்கம்

மண்ணில் பிறக்கும் எந்தவொரு உயிரும்
மண்ணுக்குச் சொந்தமில்லை ! அது
விண்ணுக்குத் தெரிந்த உண்மை
கண்ணில் தெரிந்திட்ட நேற்றைய
உயிர்களும் இன்று இருப்பதில்லை
விதையொன்று வீழ்வதும் பின் அது
மண்ணில் முளைப்பதும் வாழ்க்கையில்
மாற்றங்களாம் அது வருவது நிச்சயம்
பிறக்கின்ற உயிருக்கு நிச்சயம் இறப்புண்டு
ஆண்டவன் சட்டமிது ! அதை
அழித்திட முடியாது ஆகையால்
ஆறிடுவோம் ஆறியே தேறிடுவோம்

*யாழ். காரையம்பதி சற்பிரசங்க சைவமணி*

**செ. சண்முகரத்தினம்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

காரைநகர்

திண்ணபுரம்

# ஈழத்துச் சிதம்பரம் பிரதம சிவாச்சாரியாரின் இரங்கற் செய்தி



அமரர் மாணிக்கம் அவர்களின் ஆன்மா ஈடேற பூரணைபுட்கலை சமேத ஆண்டிக்கேணி ஐயனாரின் அருளும், சிவகாம சௌந்தரி சமேத நடராஜப் பெருமாளின் அருளுடனும் எனது இதயத்தின் இரங்கல்.

"ஈன்ற பொழுதின் பெரிதுவர்க்கும் தன் மகனை
சான்றோன் எனக் கேட்டதாய்"

(பொய்யா மொழித்தேவர்)

என்ற வாக்கியத்துக்கமைய அன்னார் காலம் சென்ற பிரபல வர்த்தகர் பேரம்பலத்தின் தர்மபத்தினி நவரத்தினத்தில் ஓர் இரத்தினம் மாணிக்கம் அது போன்று நாகரத்தினத்தின் அன்புத்தெய்வமும், குலவிளக்குமான அமரர் திருமதி பேரம்பலம் மாணிக்கம் அவர்கள் 25.07.2012ல் ஈழத்துச்சிதம்பர நடராஜனின் குஞ்சிதபாத நீழலை அடைந்து விட்டார் என்று கேள்வியுற்றதும் ஆறாத துயரம் அடைந்தேன். இவரது இழப்பு அன்னாரது குடும்பத்துக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். அன்னாரது ஆன்மா சாந்தி பெற ஈழத்துச்சிதம்பர சௌந்தராம்பிகா சமேத சுந்தரேஸ்வர பெருமானை பிரார்த்தனை செய்து நிற்கின்றோம்.

**சிவஸ்ரீ. V.ஈஸ்வரக்குருக்கள்**
*பிரதம சிவாச்சாரியார்*
*ஈழத்துச் சிதம்பரம்*
*காரைநகர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SRI KAMALAMBIKA SAMETHA SRI KAILASANATHASWAMY
DEVASTHANAM
NALLUR SIVAN TEMPLE
Tel : 021 222 3833
Point Pedro Road,
Nallur, Jaffna.

# அனுதாபச் செய்தி

அமரர் பேரம்பலம் மாணிக்கம் அம்மையார் அவர்கள் வாரிவளவு கற்பக விநாயகரை அனுதினமும் வழிபட்டு அருள் பெற்றவர். இவர் விநாயகரின் அருளால் மக்கள் பணி, மகேசன் பணி போன்ற சிவபுண்ணியச் செயல்களைச் செய்கின்ற மேன்மையான பிள்ளைகளுக்குத் தாயாக விளங்கி அவர்களுடைய அறப்பணிகளுக்கு வழிகாட்டியாகவும், உந்துசக்தியாகவும் விளங்கியவர். இத்தகைய சிவபுண்ணியச் செயல்களுக்கு ஆதாரமாக விளங்கிய அம்மையார் அவர்கள் சாஸ்திரங்கள் கூறுகின்ற வகையில் பிறப்பறுக்கும் பிஞ்சகன்றன் அருளால் பிறவா நெறியை அடைந்துள்ளார். அன்னாரின் ஆத்மா ஸ்ரீ சொர்ணாம்பிகா சமேத சுந்தரேஸ்வரப் பெருமானின் திருவடிகளில் சாந்தியடைவதாகுக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி !

*பிரதம குருவும் பரிபாலகரும்*
*சிவன் கோவில்*
*நல்லூர்*

**ஸ்ரீ கிருஷ்ணானந்த சர்மா,**
*சிரேஷ்ட விரிவுரையாளர்,*
*சமஸ்கிருதத்துறை,*
*யாழ் பல்கலைக்கழகம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் நமசிவாய

## சிவஸ்ரீ நா. பாலஸ்கந்தரூபகுருக்கள்

பிரதமகுரு

நீராவியடி கடையிற் சுவாமி கோவில் தேவஸ்தானம், வண். வடகிழக்கு கொண்டலடி தேவஸ்தானம்,
யாழ் சத்திரம் ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தானம், புதுவை ஆலடி முருகன் தேவஸ்தானம்,
செயலாளர் : ஸ்ரீ நாகேந்திரபீடம் காப்பாளர் ஸ்ரீ ஐயப்பன் மணி கண்ட சபை.

T.P : 0777 141657 T.P : 0712 373357

*வாரிவளவு ஸ்ரீ கற்பக விநாயகர்*
*ஆலயம்*
*காரைநகர்*

# அமரர் திருமதி மாணிக்கம் பேரம்பலம் அவர்களின் ஆத்மசாந்தி பிரார்த்தனை உரை



பிறவிகளில் அதி உயர் பிறவியான மானிடப்பிறப்பு பாக்கியத்தை பெற்ற நாம் ஒவ்வொருவரும் தாம் பிறந்த வாழ்ந்த மண்ணிற்கும் மதத்திற்கும் தம்மால் இயன்ற சிறு நன்மையாவது செய்ய வேண்டும். அப்படிச் செய்கையில் இந்த மண்ணில் இருந்து மறைந்தாலும் மனித மனங்களில் வாழ்ந்து கொண்டே இருப்பார்கள். இதற்கு அமைவாக தினந்தோறும் வாரிவளவு ஸ்ரீ கற்பக விநாயகர் பொற்பாதம் பணிந்து இன்று இறைபாதம் எய்தி எம்மை எல்லாம் ஆழ்ந்த துயரில் ஆற்றிய திருமதி மாணிக்கம் அம்மா அவர்கள் தன் வாழ்நாளில் செய்த சமய தொண்டுகளும், சமூகப்பணிகளும் எண்ணில் அடங்காது. இவர் தன் வாழ் நாளில் தன்னிடம் வருவோருக்கு இனிமையான வரவேற்பும் நல்ல விருந்தோம்பல் பண்பும் பலரது குடும்பத்திற்கு குலவிளக்காகவும் எல்லோருடனும் புன்னகையோடு இனிமையாக பேசும் சுபாவம் கொண்டவர். தன் பிள்ளைகளுக்கு ஆதரவும் கொடுத்து தன் கணவன் போல் பிள்ளைகளும் இறைபணி, சமயப்பணி, அறப்பணி, அன்னதானப்பணி, சமூகப்பணி, மருத்துவப்பணி, விளையாட்டுத்துறைப்பணி போன்ற நற்பண்புகளை ஊட்டி வளர்த்த தாய் எம்மை எல்லாம் விட்டுப்பிரிந்தாலும் எல்லோர் மனதிலும் வாழ்ந்து கொண்டிருப்பார். இப்பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி அன்னாரது ஆத்மா வாரிவளவு ஸ்ரீ கற்பக விநாயகர் பாதம் சேர பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி !

*இவ்வண்ணம்*
**பா. ஸ்கந்தரூபக்குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குருபாதம்

**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்**

நல்லூர் யாழ்ப்பாணம் - இலங்கை

**Nallai Thirugnanasambantar Atheenam**

NALLUR, JAFFNA - SRI LANKA.

07.03.2012

# அனுதாபச் செய்தி

திருமதி.பேரம்பலம் மாணிக்கத்தின் மறைவை அறிந்து மிகுந்த வேதனை அடைந்தோம். திரு.பேரம்பலம் அவர்களுடைய துணைவியாராக இருந்து கணவனுக்கு நல்ல மனைவியாகவும், பிள்ளைகளுக்கு நல்ல தாயாகவும், அயலவருக்கு நல்ல நண்பியாகவும், எல்லோருடனும் இனிமையாக பழகி தானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வைத்து காரைநகர் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற அம்மையார். E.S.P நிறுவனத்தினுடைய வளர்ச்சிக்காக உதவிய தன்மையினால் இன்று இந்த நிறுவனம் சமய சமூக பணிகளை ஆற்றி அனைவருடைய தேவைகளையும் பூர்த்தி செய்யும் செயலை கொண்டிருப்பது அனைவருக்கும் மகிழ்ச்சி. அம்மையார் இன்றைய சமூகத்திற்கு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறார். திருமதி பேரம்பலம் மாணிக்கத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகளால் ஜீரணிக்க முடியாத பிரிவு



உறவுகளில் உண்மையான உறவு ஒரு பெத்த தாயாரின் உறவு. அந்த அதி உன்னதமான உறவின் பிரிவினை எந்த மனிதனாலோ அல்லது எந்த ஜீவராசிகளாலோ அப்பிரிவின் துயரின் பாரத்தை ஜீரணிக்க முடியாது. அந்த வகையிலே காரைநகர் வாரிவளவு திருமதி ஈ.எஸ்.பி.மாணிக்கம் அம்மையாரின் பிரிவால் வாடி நிற்கும் அவரது பிள்ளைகள், உறவுகளாலும் அத் துயரை ஜீரணிக்கவே முடியாது.

அம்மையாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட மக்கள் வெள்ளம் அம்மையாரின் புதல்வரும் எமது ஜனநாயக மக்கள் முன்னணியின் ஒரு குடும்ப அங்கத்தவருமான திரு.கணேசலிங்கத்தின் பரந்த மக்கள் நட்புரிமையையும் பிறரை மதிக்கும் நற்பண்பையும் அந்நிகழ்வு எடுத்துக்காட்டி நின்றது. அம்மையாரின் துயரால் வாடி நிற்கும் அவரது குடும்பத்தினருக்கு, முன்னணியின் உடன்பிறப்புக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

**மனோ கணேசன்**

*தலைவர்*

*ஜனநாயக மக்கள் முன்னணி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரம் பிறைகள் கண்ட அம்மையார்

"நெருதல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு"

- தெய்வப்புலவர் வள்ளுவர் -

நேற்று இருந்தவன் இன்று இல்லாமல் இறந்து போனான் எனும் பெருமை உடையது தான் இவ் உலகம்.

அந்த வகையிலே மறைந்தவர்தான் மூதாட்டியார் காரைநகர் பாரிவளவு பெருவர்த்தகர் அமரர் ஈ.எஸ்.பி.பேரம்பலம் அவர்களது அருமைத் துணைவியார் திருமதி.மாணிக்கம் அவர்கள். திரு.பேரம்பலம் அவர்கள் யாழ் கஸ்தூரியார் வீதி பிரபல பெருவர்த்தகராவார். மூதாட்டியார் நாத்தாண்டியா வர்த்தகர் திரு.திருமதி. கணபதிப்பிள்ளை- முத்துப்பிள்ளை தம்பதிகளின் அருமைப்புதல்வியார். மாணிக்கம் என தங்கள் அருமை மகளுக்குப் பெயர் அமைத்து பெயருக்கு ஏற்ற பெருவாழ்வு வாழத் திருமணமும் செய்து வைத்தனர்.

இல்லற வாழ்வில் செல்வச் சீமாட்டியாக வாழ்ந்து தான தர்மங்களில் ஆலயத் திருப்பணிகளில் ஈடுபாடு கொண்டு வாழ்ந்து நின்றார். அத்தோடல்லாது தனது இல்லத்துக்கு எப்போ விருந்து வரும் என எதிர்பார்த்து விருந்தாடி வருபவர்களுக்கு விருந்தளிப்பதில் ஆர்வம் காட்டி உபசரிக்கும் பண்பு இவரது இயல்பான ஒரு பண்பு நிறைந்த செயற்பாடுகளாகும்.

திருமண வாழ்வில் தனது இடையறா தெய்வ வழிபாட்டின் பலனாக அவர் பெற்றெடுத்த மக்கட் செல்வங்கள் எழுவர். இதில் இன்று நான்கு பெண்களும் இரண்டு ஆண்களும் இனிது வாழ்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இரு ஆண் பிள்ளைகளும் பெற்றோருக்குப் புகழ் சேர்த்துப் பெருந்தொழிலதிபர்களாக விளங்கி வருகின்றனர்.

கடைக்குட்டி மகனார் திரு.கணேசலிங்கம் அவர்கள் என்னுடன் இனிமையாகப் பழகி வரும் ஒரு சிறந்த பண்பினர். அதிகமாக இவரை கொழும்பிலுள்ள பல ஆலயங்களிலும் சந்திப்பேன். குறிப்பாக தெஹிவளை ஸ்ரீ ஆஞ்சநேயர் பெருமான் ஆலயத்தில் நான் காண்பது வழக்கம். பல ஆலயங்களிலும் உபயங்களைச் செய்து வரும் இயல்பினர். இவரது தாயார் ஆயிரம் பிறைகள் கண்ட அம்மையார் என்பது புகழாரமற்ற உண்மை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" ஈன்ற பொழுதில் பெரிதுவர்க்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்"

என்ற குறளுக்கு ஏற்ப அம்மையாரின் மக்கள் அவரது தவத்துக்கு கிடைத்த பரிசுகள் எனலாம்.

அம்மையாரின் ஈமைக்கிரியைகளில் கலந்த கொண்ட மக்கள் வெள்ளம் அம்மையாரின் மக்களின் அன்பு உள்ளங்களின் நட்புரிமையை எடுத்துக் காட்டியது. அதே போலவே இறுதி ஊர்வலமும் தமிழர் பண்பாட்டுக்கு அமையக் காணப்பட்டது புகழாரமற்ற உண்மை. அதனைச் சான்று பகன்று தமிழருவி திரு.சிவகுமரன் உட்பட பலரும் இரங்கல் உரையில் கூறினர்.

வாரி வழங்கும் பண்பில் மிக்க மூதாட்டியாரின் ஆத்மா சாந்திக்காக ஈழத்துச் சிதம்பரநாதர் தம் திருமென்மலர்ப் பாதங்களைப் பணிகின்றேன்.

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

- வள்ளுவர்

**வேலணை வேணியன்**

*ஐ.ம.மு. சிரேஷ்ட உபதலைவர்*

*கொழும்பு மாநகர சபை உறுப்பினர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் விடுதலைக் கூட்டணி
# දෙමළ එක්සත් විමුක්ති පෙරමුණ
# TAMIL UNITED LIBERATION FRONT



Tel/Fax : (+94) 21 222 3631
(+94) 21 320 7500
Mobile : (+94) 777890171

'Thanthai Selva Akam',
57/48, Stanley Road,
Jaffna, Sri Lanka.


## வாரிவளவு பெண் என்பதால் வாரிவழங்கினாரா?
## அன்றேல் வாரி வழங்கியமையால் மாணிக்கமானாரா?



ஈ.எஸ்.பி என்ற விலாசம் மிகவும் பிரபல்யமாக முன்பே நான் அமரர் ஈ.எஸ்.பி அவர்களை நன்கு அறிந்திருந்தேன். பார்த்துப் பேசியும் உள்ளேன். ஆனால் அவரின் வாழ்வில் ஒளி ஏற்றிவைத்த மாணிக்கம் அம்மையார் அவர்களை நான் முதல் முதலில் பார்த்ததே அன்னார் அமரத்துவம் அடைந்தபின்பே. இரவிரவாக பிரயாணம் செய்துவந்து அன்னாரிற்கு அஞ்சலி செய்யும் பாக்கியத்தையும் அன்னாரை இழந்து தவிக்கும் குறிப்பாக அவர் தம் பிள்ளைகளிற்கும் சில ஆறுதல் வார்த்தைகள் கூறும் வாய்ப்பையும் பெற்றேன். மாணிக்கம் அம்மா பிரபல்யமானவர் என நான் கூற முன்வரவில்லை. ஆனால் அன்னாரின் கணவர் அவர்கள் ஈ.எஸ்.பி என்ற விலாசம் கொடிகட்டிப் பறக்க அமைதியாக இருந்து செயற்பட்ட சூத்திரதாரி அவர்கள் என்பது மறக்கமுடியாதது மட்டுமல்ல மறுக்கவும் முடியாது.

தன்னைக் கரம்பிடித்த கணவரிலும் தான் பெற்றெடுத்த பிள்ளைகளில் ஆண், பெண் என்ற பேதமின்றி அன்பை சொரிந்து, கணவரின் வாழ்வை வளம் படுத்த உதவியதோடு பிள்ளைகளின் வளமான வாழ்விற்கும் உதவினார். தன்னை சுற்றியிருந்த மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர்கள் ஆகியோருடன் பேசிப்பழகி மகிழ்ச்சியாக வாழ்ந்த அம்மையாருக்கு ஒரு குறையும் இருக்கவில்லை என நான் கூறமாட்டேன். எல்லோருக்கும் இருப்பது போல் அனைவரையும் விட்டுப் பிரிந்து செல்லப்போகின்றேனே என்ற துயரம் ஒருபுறம் இருக்க யாரிடமும் கூறாமல் தமக்குள்ளே அடக்கி வைத்திருந்த ஒரு பெரும் குறையின் பெரும் பங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னாரது ஈமைக்கிரிகையின்போது மறைந்துவிட்டது. எஞ்சியுள்ள அக்குறையின் சிறுபகுதியும் அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையின் மூலமாக மறைந்து அவரின் குடும்ப உறவுகள் அனைவரிற்கும் பெரும் மனநிறைவைக் கொடுக்கும், கொடுக்கவேண்டும் என்பதே அனைவரின் பேரவாவாகும் என்பது மட்டுமன்றி ஈ.எஸ்.பி என்ற விலாசம் மேலோங்கி நிற்கும் என்பது எனது நம்பிக்கை.

பல வகையிலும் பயனடைந்த பாடசாலை மாணவர்கள் உட்பட அமரர் மாணிக்கம் அம்மையாரை உற்றார் உறவினர் போல நேசித்த பலர் உள்ளனர். அயலவர் வாழ்வில் நலிந்தோர் பல்வேறு நற்பணிகள் புரிந்தோர் ஆலய தர்ம கர்த்தாக்கள் என பலரின் அன்பையும் நன்மதிப்பையும் பெற்றவர். இவ்வாறு அன்னாரின் பிரிவால் துயருறுவோர் ஏராளம்.

அமரர் மாணிக்கம் அம்மையார் மாதருள் ஓர் மாணிக்கமாக திகழ்ந்தவர். அவரின் பிரிவு அனைவரையும் துயரில் ஆழ்த்துகிறது. அவர் பிரிவால் துயருறும் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள் மற்றும் உறவினர் அயலவர் ஆகிய எல்லோருக்கும் என் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து அம்மையாரின் ஆத்மா சாந்திக்காக ஆண்டவனிடம் வேண்டுகின்றேன். தம் சக்திக்கு உட்பட்டு பொதுத் தொண்டுகளில் ஈடுபடும் அன்னாரின் வாரிசுகள் தொடர்ந்து தம் பணியை ஆற்ற சக்தியையும் போதியவசதியையும் ஆண்டவன் கொடுக்கட்டும்.

**வீ. ஆனந்தசங்கரி**
*செயலாளர் நாயகம்*
*தமிழர் விடுதலைக் கூட்டணி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற் செய்தி

யாழ்ப்பாணம் காரைநகரில் புகழ்பூத்த வர்த்தகர் காலம் சென்ற பேரம்பலத்தின் துணைவியர் திருமதி பே. மாணிக்கத்தின் மறைவு தமிழ் சமூகத்திற்குப் பெரும் இழப்பாகும். இன்றைய வாழ்க்கை வசதிகள், மருந்து, மருத்துவ துறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தினால் இன்னுமொரு தசாப்தத்திற்கு மேல் வாழ்ந்திருக்கலாம் என்ற எண்ணம் மனதில் ஏற்படுகின்றது.

இவர் வாழ்ந்த 80 ஆண்டுகளுள் தனக்கு முன்னாலும், பின்னாலும் இருந்த ஏழு பரம்பரையை பார்த்துச் சென்றுள்ளார். இவர் தனது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளின் சீரிய வாழ்க்கையைக் கண்டு மகிழ்ந்துள்ளார். தனது தந்தை, கணவன், மகன்மார் வர்த்தகத்தில் பிரசித்தி பெற்றிருந்ததையும்,தனதுபேரப்பிள்ளைகள்,பூட்டப்பிள்ளைகள்கல்வியில்சிறப்புற்று விளங்குவதையும் கண்டுள்ளார். இவரது வழிகாட்டலில் இவரது பரம்பரை சிறப்புப் பெற்று எல்லோரது அன்புக்கும், கௌரவத்துக்கும் பாத்திரமாகியுள்ளனர். இவரது இரு ஆண்பிள்ளைகளான E.S.P. நாகரத்தினமும், E.S.P. கணேசலிங்கமும் வர்த்தகத்தில் சிறந்து விளங்குவதுடன் சமூக முன்னேற்ற நடவடிக்கையில், சமயம், கல்வி, விளையாட்டு, இளைஞர் முன்னேற்றம் ஆகிய துறைகளில் பெரும் பங்காற்றி வருகின்றனர். வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெரும் உதவிகள் புரிந்து வருகின்றார்கள். இவரது மகள்மார், மருமக்களும் தொழில் துறையில் சிறப்புற்று விளங்குவதுடன் சமூக முன்னேற்ற நடவடிக்கையில் தங்களை இணைத்துள்ளார்கள்.

அமரர் மாணிக்கம் கடின உழைப்புக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தவர். சைவத் தமிழ் பெண்ணுக்குரிய சிறந்த பண்புகளை வெளிக்காட்டி நிற்பவராக இருந்துள்ளார். விருந்தோம்பலில் சிறந்து விளங்கினார். எத்தகைய செல்வம் ஈட்டிய பொழுதும் அடக்கமான, இறைநம்பிக்கையுடன் சிறப்பான வாழ்க்கையை விரும்பி நின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னாரது ஆத்மா சாந்தி அடைய இறைவனை இறைஞ்சுகின்றேன்.

**பேராசிரியர்.பொ. பாலசுந்தரம்பிள்ளை**
*முன்னாள் துணைவேந்தர், வாழ்நாட் பேராசிரியர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திப்போமாக

திருமதி பேரம்பலம் மாணிக்கம் அவர்கள் அகவை எண்பதில் திடீரெனச் சுகவீனமுற்று இறைவனடி சேர்ந்த நிகழ்வு அவரது குடும்பத்தாருக்கு ஓர் அதிர்ச்சியான நிகழ்வாகத் தென்பட்டாலும் அவரைப் பொறுத்தமட்டில் இறைவன் அவரைபட பக்குவமாக அரவணைத்துக் கொண்டார் என்றே சொல்ல வேண்டும். இறப்பை நிச்சயிப்பவன் இறைவனே. அதுவும் காலையில் பிள்ளைகள் ஏனைய குடும்பத்தினர் ஆகியோருடன் அன்பாகவும் பாசத்துடனும் அளவளாவிய அன்னையின் உடல்நிலை மாலையில் இறைவனடி சேருவதற்கான ஒரு பக்குவ நிலையே காட்டி இருந்தது என்பதை எவரும் எண்ணிப் பாராத விதத்தில் அன்னை இறைவனடி சேர்ந்து விட்டார். இத்தகைய நிலை எல்லோருக்கும் கிட்டுவதில்லை. இதனை அடைபவர்கள் உண்மையிலேயே கொடுத்து வைத்தவர்கள் பாக்கியசாலிகள்.

அன்னையை பொறுத்தமட்டில் இல்வாழ்வின் பலனை நிறைவாக அனுபவித்தவர். எதுவித குறையுமின்றி வாழ்ந்த இவர் முதலில் தமது கணவரோடும் பின்னர் அவர் மறைவுக்கும் பின்னர் தமது பிள்ளைகளோடும் சிறப்பான முறையில் இதன் பலனை அனுபவித்தவர் வள்ளுவர் கூறியது போல

"இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்ற இலக்கணத்திற்கமைய பலரையும் போஷிக்கும் பண்பையும் பெற்றவர். நாமுண்டு நமது குடும்பமுண்டு என்ற இன்றைய உலகின் மனப்பாங்கிற்குபுறநடையாகவாழ்ந்துஇறைவன்தந்தமனிதப்பிறவிஏனையோரை அரவணைத்து ஆதரவு அளிப்பதற்கே என உணர்ந்து வாழ்ந்தவர்.

இல்வாழ்வு என்பது பற்றற்ற நிலையிலே பலருக்குப் பயன்பட வாழ்வதற்கே என்பது நம் முன்னோரது சிந்தனையாகும். அன்னையின் வழிவந்த மைந்தர்கள் இன்று இதற்கு இலக்கணமாக வாழ்கிறார்கள். குறிப்பாக E. S. P. நாகரத்தினம் அவர்களை அறியாதவர் யாருமிலர். ஊர் நடுவில் பழுத்த மரமொன்று நற்கனிகளை பலருக்கும் அளிப்பது போல் பல நல்ல பணிகளை சளைக்காது முன்னின்று செய்பவர். தொண்டைப் போற்றி வாழ்பவர். எமது சமுதாயம் இவரைப் போன்று பலரின் பணியை எதிர்பார்க்கிறது.

பக்குவமாக இறைவனடி சேர்ந்த அன்னையின் ஆத்ம சாந்திக்கு நாம் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

**பேராசிரியர் சி.க. சிற்றம்பலம்.**
*ஓய்வுநிலை தகைசால் பேராசிரியர்,*
*தலைவர், இந்து சமயப் பேரவை*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியின் உள்ளத்திலிருந்து

## தன்னிகரில்லாத் தாயே.........

இந்த தரணியிலே பிறந்த யாவரும் தனித்துவமாய் மிளிர்வதில்லை. எண்ணற்றோர் பிறக்கின்றனர் இறக்கின்றனர். இவை யாவும் சிறு சிறு சம்பவங்களாய் நிகழ்வுகளாய் மங்கி மறைந்து போகின்றன. ஆனால் ஒரு சிலர் மாத்திரம் இந்த தரணியிலே தமக்கென ஓர் இடத்தை பிடித்து காலத்தையும் வென்ற காவியங்களாய் மிளிர்கின்றனர். அந்த வரிசையிலே மேலும் ஒரு பெண்மணி "மேன்மை மிக்க ஒரு தாய்" இணைந்து கொள்கிறார். அமரர் பேரம்பலம் மாணிக்கம் அவர்கள் அமரத்துவம் அடைந்துவிட்டார் என்ற செய்தி கேட்டு அதிர்ந்த உள்ளங்கள் ஆயிரம் ஆயிரம். அதற்குக் காரணம் அவரின் அற்புத வாழ்வு. அவரால் உருவாக்கப்பட்ட அரிய புதல்வர்கள்.

ஒரு குடும்பத்தின் உயர்வு அதன் குல விளக்காய் அமைந்த பெண்ணிலேயே தங்கியுள்ளது என்பதை வாழ்வில் மெய்ப்பித்துக் காட்டியவர். பெயருக்கு ஏற்றாற் போல் இறுதி வரை ஒரு மாணிக்கமாய் மிளிர்ந்த இவர் தன் கணவர் E.S.பேரம்பலம் அவர்கள் வியாபாரத் துறையில் கொடிகட்டிப் பறப்பதற்கும் பல்வித பணிகளை ஆற்றுவதற்கும் உறுதுணையாய் இருந்தார்.

தந்தையின் வழியிலேயே மைந்தன் உயர் திரு E.S.P நாகரத்தினம் அவர்கள் நல்லதோர் வர்த்தகராய், நாடு போற்றும் மனிதனாய், கல்விச் செயற்பாடுகளுக்கு முன்னின்று கைகொடுக்கும் கல்விக் காருண்யனாய் மிளிர்வதற்கு அத்திவாரமிட்ட அரிய தாய். அமரர் மாணிக்கம் அவர்கள் இரண்டு ஆண் பிள்ளைகளிற்கும் ஐந்து பெண்பிள்ளைகளிற்கும் இனிய தாயாய் வாய்த்த இவர் அனைவரையும் பெருமையுடனும் ஈடில்லா மகிமையுடனும் வாழ வழி சமைத்தார். இறுதிவரை தன் ஊரையும், மக்களையும், உறவுகளையும், மண்ணையும், நேசித்து மாண்புடன் வாழ்ந்த இவர் 25/07/12 அன்று தன் வையத்து வாழ்வைப் பூர்த்தி செய்து வானுறையும் தெய்வத்துள் வைக்கபடுவதற்காய் அழைத்துக் கொள்ளப்பட்டார். இந்த தன்னிகரில்லாத் தாய் தனக்குவமை இல்லாதான் தாழ்களின் கீழ் இருந்து நிச்சயமாய் நம் அனைவரையும் ஆசீர்வதிப்பார்.

அன்னையின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

**திரு.எஸ்.கே.யோகநாதன்**

*பீடாதிபதி*

*யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் செய்தி

அகவை எண்பது நிறைவடைந்த நிலையில் மனிதருள் மாணிக்கமாக வாழ்ந்து இறைபதமடைந்த அமரர் திருமதி பேரம்பலம் மாணிக்கம் அவர்களின் நல்ல பண்புகளை அவரது நினைவாக வெளியிடப்படும் மலரில் பகிர்ந்து கொள்ளலாமென எண்ணுகின்றேன். இவர் கடல் சூழ் ஈழநாட்டில் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ்ப்பாண நகரில் இயற்கை அழகும் செயற்கை அழகும் ஒருங்கே அமையப் பெற்றதும் ஈழத்துச் சிதம்பரம் உட்பட பல சிவாலயங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள சிவபூமியாகிய காரைநகரில் இற்றைக்கு எண்பது ஆண்டுகளின் முன்னே 16.02.1932 அவதரித்தார்.

ஏழு பிள்ளைகளை பெற்று ஒரு பெரிய குடும்பத்தினை எவ்வித குறையுமின்றி நடாத்தினார். அத்துடன் கணவருடைய வர்த்தக நிறுவன மேம்பாட்டிலும் தனது பங்களிப்பினை வழங்கத் தவறவில்லை. உற்றார் உறவினர்கள் நிகழ்வுகளில் சந்தோஷமாகப் பங்குபற்றும் இவர் ஒவ்வொரு மாதப்பிறப்பன்றும் பெரிய அர்ச்சனை த்தட்டுடன் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய காலை பூசைகளில் கலந்து கொள்ள த்தவறுவதில்லை.

தனது எண்பது வயது பூர்த்தியடைந்த முதுமை நிலையிலும் இவ்வாண்டு புதுவருடப்பிறப்பன்று வாரிவளவு விநாயகர் ரதோற்சவ நிகழ்வில் தேரோடும் வீதி அடியளித்துத் தனது ஆன்மீக உணர்வை வெளிப்படுத்தியுள்ளார். இவரது நல்ல இறைபக்தி காரணமாக இவரது பிள்ளைகள் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

குறிப்பாக இவரது மூத்த புதல்வன் நாகரத்தினம் அவர்கள் பொன்மனச்செம்மல், மனிதநேய ஈகையாளன், கல்விக் காருண்யன், என்ற கௌரவப் பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். பல சமூக சமய சேவைகளில் ஈடுபடும் இவர் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் ஆலயத் திருப்பணிகள் சமய நிகழ்வுகள் பாடசாலை நிகழ்வுகள் சமூக கலை நிகழ்வுகள் சிறப்புற அமையத் தாராள பொருளுதவி வழங்கி வருகின்றார். குறிப்பாக காரைநகரில் இடம் பெற்ற பல வேலைத்திட்டங்களுக்கு இவரது பங்களிப்பு மிகையாக இருப்பதுடன் தானே நேரடியாக பங்கேற்று அனைவரையும் உற்சாகப்படுத்தும் பண்பினையும் கொண்டவர்.

ஆயிரம் பிறை கண்ட அமரர் மாணிக்கம் அவர்கள் வாரிவளவு கற்பக விநாயகரின் பாதார விந்தங்களில் சாந்தி பெற்றுள்ள நிலையில் அவரது பிரிவால் துயருறும் பிள்ளைகள் உறவினர்கள் நண்பர்களுக்கு வடமாகாண கல்விச் சமூகத்தின் சார்பில் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து நிற்கின்றேன்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி

**ப.விக்னேஸ்வரன்**
*பிரதிச் செயலாளர்*
*வடமாகாண கல்வி அமைச்சு*
*யாழ்ப்பாணம்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**LIONS CLUBS INTERNATIONAL DISTRICT 306 B1 - SRILANKA**

Lion S.S.THANGARAJAH MJF
Dist Governor 2012/2013
" Marutha Mahal " Manipay
0212255152 ®, 0212255152 (O)
0776909577 (M), 0112691368 (F)
E-mail : thangarajah10@yahoo.com

Lion Dr.S.S.ARULANANDAM MJF JP
Deputy Cabinet Secretary (N)
Spouse : L/L Sivayogam
H/C : Chavakarchcheri
Vethavanam Sangathanai, Chavakarchcheri
TP. 0777423510 E-mail ssarulanandam@yahoo.com

# நீத்தார் பெருமை

## அமரர் திருமதி பேரம்பலம் மாணிக்கம்

வடபகுதியில் துவிச்சக்கரவண்டி விநியோகத்தரான E.S.பேரம்பலம் அவர்கள் மிக பிரபல்யமானவர். E.S.P.என்று வர்த்தகர்களால் அழைக்கப்பட்டவர். அவரின் பாரியார் வாரிவளவு காரைநகரை பிறப்பிடமாகக் கொண்டு வாழ்ந்தார். கணவர் இறைபதம் அடைந்த பின்பும் வாரிவளவில் வாழ்ந்து வாரிவளவு விநாயகப் பெருமானை தினம் வணங்கி நித்திய கருமங்களை செய்து பிள்ளையார் உள் வீதி உலா வந்த போது அடி அழித்து பிள்ளையாரை வணங்கிய பெருந்தகை.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த (E.S.) பேரம்பலம் மாணிக்கம் இன்று எம்மிடம் இல்லை. நெருநல் உளல் ஒருவன் இன்று இல்லை என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு என்பதற்கமைய அவர்எம்மை விட்டுப்பிரிந்து விட்டார்.

தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும் என்பதை மெய்ப்பித்து அவரது பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள் நல்ல நிலையில் உள்ளனர் விஷேடமாக அவரது குடும்பம் செய்யும் பொது ச் சேவைகளுக்கும் சமய சேவைக்கும் கல்விச் சேவைக்கும் சிகரம் வைத்தாற் போல மாவட்டம் 306B1வலயத் தலைவரான லயன் E S P நாகரத்தினம் அவர்களை நல்லூர் லயன்ஸ் கழகமூடாக சர்வ தேச லயன்ஸ் கழக குடும்பத்திற்கு தந்தனர். தனது மகன் லயன் E S P நாகரட்ணம் PMJF நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவராக இருந்து குடா நாட்டிலும் வன்னியிலும் பயன் தரு மரக்கன்று பல்லாயிரம் விநியோகித்ததையும் பாடசாலை வளர்ச்சிக்கும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் கோயில்களின் வளர்ச்சிக்கும் நிதி வளங்கியவர் இதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மே மாதம் நீர் கொழும்பில் நடந்த லயன் கழக 306B1 மாவட்ட மகா நாட்டில் பல கேடயங்களையும் விருதுகளையும் பெற்ற பெருமை அறிந்து பெருமையோடு புழுங்காகிதம் அடைந்தவர். வலயத் தலைவரான பதவியேற்பிற்கு கொழும்பு வராமல் கோயில் அன்னதான வைபவத்திற்காக ஊரில் தாயாரோடு நின்றார். அவரின் தாயாரின் இறுதி ஊர்வலத்தில் நாம் கண்ட காட்சி பிறந்த ஊரிலிருந்து பல பஸ் நிறைய மக்கள் கொழும்பு சென்று கொழும்பு 5லிருந்து பொரளை கனத்தை வரை கைதூக்காக அவரது உடலை தாங்கிச் சென்றமை அன்னாரின் வாழ்வின் சிறப்பாகும். அவரது வாழ்விற்கு ஊர் மக்கள் கொடுத்த கௌரவமாகும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி அன்னார் ஆத்மா சாந்தியடைய லயன்ஸ் மாவட்டம் 306B1 சார்பில் பிரார்த்திக்கிறேன்.

**லயன்ஸ் டாக்டர் S.S. அருளானந்தம். MJF, JP**

*பிரதி மாவட்ட செயலாளர் (வடக்கு)*

*FOSTER UNITY THROUGH SERVICE.*

**சிந்தனைக்கு...**

- அருள் என்னும் வடிவம் உள்ள ஆண்டவனை அன்பாகவே காணலாம்.
- இல்லறத்தில் இருந்து இதயம் அடக்கிய வல்லவன்தான் மகாயோகியாவான்.
- ஆசைகளை விடாமல் எவனொருவன் பற்றுகிறானோ அவனை விட்டு துன்பங்கள் நீங்க மறுக்கிறது.
- மறையாத ஆறுதல் அளிக்கக்கூடியது ஒவ்வொருவர் மனத்துக்குள்ளேயும் ஒளிந்திருக்கும் உள்ளொளியே.
- பிறருக்காக வாழும்போதுதான் நாம் வாழ்க்கையின் நிறைவை நுகர்கிறோம்: நம் உயர்வை உணர்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வத்தாய்

அமரத்துவம் அடைந்த மாணிக்கம் பேரம்பலம் அவர்கள் இறைபக்தியுள்ள மாதருள் ஓர் மாணிக்கம் ஆவார்கள். அவர் புகழ் பூத்த பிரபலமான அமரர் E.S. பேரம்பலம் அவர்களை கணவராக அடைந்தது மட்டுமல்லாது நற்குணமுடைய புதல்வர்களையும் புதல்விகளையும் பெற்றிருந்தார். தாய்க்குத் தலைமகனான லயன் E.S.P நாகரத்தினத்தினம் அவர்களைப் பெற்றதனால் புகழையும் அடைந்திருந்தார்.

லயன் E.S.P. நாகரெத்தினம் அவர்கள் இன்று யாழ் நகரில் பிரசித்தி பெற்ற தொழில் அதிபர் மட்டுமல்லாது சிறந்த கொடைவள்ளலும், சமூக சேவையாளருமாவார். லயன் E.S.P நாகரெத்தினம் அவர்கள் மத அமைப்புகளுக்கும், கோவில்களுக்கும் பெருமளவில் உதவி செய்வதோடு நிற்காமல் சமூக சேவைகளுக்கும், மக்கள் நலன் திட்டங்களுக்கும் பெருமளவில் உதவி செய்து வரும் கருணை உள்ளம் கொண்ட கொடை வள்ளல் ஆவார். முக்கியமாக வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக பல வழிகளில் உதவி செய்து வருகின்றார். இதனால் மக்கள் சமூகம் இவருக்கு கல்வி காருண்ணியன், பொன்மனச் செம்மல் “மனித நேய ஈகையாளன்”.

இவர் எமது சர்வதேச சேவை அமைப்பாளன் சர்வதேச லயன் கழகங்களின் அமைப்பில் The International Association of Lions Clubs ஓர் நீண்டகால அங்கதினவராக உள்ளார். இந்த அமைப்பிற்கு உதவிவரும் ஓர் சிரேஷ்ட உறுப்பினர் ஆவார். நல்லூர் லயன்ஸ் கழக தலைவராக செயற்பட்ட போது அக்கழகத்திற்கு சேவைகளுக்கான தேசிய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் பல விருதுகளைப் பெற்றுக்கொடுத்தார். இவர் இந்த லயன் அமைப்பில் மிக உயர்ந்த பட்டமான PMJF ஐப் பெற்றுள்ளார். அமரர் மாணிக்கம் பேரம்பலம் அவர்களின் மறைவுச் செய்தியை அறிந்தும் லயன் E.S.P நாகரெத்தினம் அவர்களிடம் பலன்களைப் பெற்ற பல அமைப்புகளும், தனி நபர்களும் பத்திரிகைகளில் இரங்கல் அஞ்சலிகள் மூலம் நிறைந்து வழியச் செய்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்"

தன் மகனைச் சான்றோன் எனக் கேட்டதோடு நல்லவராவது அன்னை வளர்ப்பினிலே என்ற உண்மையை உணர்த்தி மறைந்த மாணிக்கம் அம்மா அவர்களின் ஆன்மாவிற்கு உனது பிரார்த்தனை உரித்தாகட்டும்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பார் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

தெய்வ மகனைப் பெற்ற தெய்வத் தாய்க்கு எனது நன்றியும் அஞ்சலியும்.

**லயன் S.S. தங்கராஜா M.J.F**
*மாவட்ட ஆளுனர்*
*சர்வதேச லயன் கழகங்களின் அமைப்பு*
*மாவட்டம் 306B,*
*கொழும்பு*

## ஏழு நற்குணங்கள்

1. ஏழ்மையிலும் நேர்மை
2. கோபத்திலும் பொறுமை
3. தோல்வியிலும் விடாமுயற்சி
4. வறுமையிலும் பரோபகாரம்
5. துன்பத்திலும் தைரியம்
6. செல்வத்திலும் எளிமை
7. பதவியிலும் பணிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவநெறி மறவா சிந்தையாளர்

அன்பும் அறனும் உடையதாய் இல்வாழ்வில் வாழ்ந்து பண்பும் பயனும் பெற்று அமரரான தர்ம பத்தினி திருமதி.மாணிக்கம் பேரம்பலம் அவர்களை தங்கத்தில் இரத்தினம் பதித்த 1981 இல் இருந்தே நானறிவேன்.

பிள்ளைகள் உயர்நிலையில் வாழவும் சமய, சமூக பணிகளில் பணியாற்றவும் உந்துதலாக இருந்தது அன்னை அவர்களே. அந்த வகையில் அன்னசத்திரங்கள், ஆலய மடாலயங்கள், கல்விக்கூடங்கள், கவின்மிகு கலை மன்றங்கள் இன்னும் எத்தனையோ அமைப்புக்களில் தன்னை அர்ப்பணித்து பணியாற்றும் கல்விக் காருண்யன் லயன் திரு. E.S.P.நாகரத்தினம் அவர்களை எமக்களித்த அன்னை அல்லவா.

ஈழத்து சிதம்பர தேர்த்திருவிழா உற்சவத்தின் போது அந்த பிரமாண்டமான தேரோடும் வீதியில் தள்ளாடும் வயதிலும் தளராத சிவபக்தியில் திழைத்து தேரோடு தானும் வீதிவலம் வருவது அவரது பக்திக்கு எடுத்துக்காட்டு.

எமது மடாலயத்திற்கு வரும்போது பாலன்னை நாகராசன் நிற்கிறானே எனக் கேட்பார், உள்ளே வந்து தனது மகனின் சிவப்பணியை கண்டு இன்புற்று அன்னதானத்திலும் கலந்து கொள்வார்.

இப்படியாக எங்கள் அன்பிற்கும், மதிப்பிற்கும் உரிய அன்னையாகவிருந்து எங்கள் மடாலய நிரந்தர தலைவராக தனது மகனை உவந்தளித்த அன்னையின் ஆத்மா ஈழத்து சிதம்பர ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமாளின் நித்தியானந்தத்தில் நிலைத்திருக்க எமது மடாலய பொதுச்சபையின் சார்பில் பிராத்திக்கிறேன்.

**நாகலிங்கம் பாலகிருஷ்ணன்**

*செயலாளர்*

*மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை*

*ஈழத்து சிதம்பரம்*

*காரைநகர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஐயப்பன் துணை

## காரைநகர் வியாவில்

# ஐயனார் கோயில்

பதிவு இல - HA/5/JA/35
இலங்கை வங்கி காரைநகர் கணக்கு இல - 123

50, பெரியகடை,
யாழ்ப்பாணம்
தொ.பே: 222 3104

காரைநகர்,
[illegible]

## "வானுறையும் தெய்வமாகிவிட்ட அன்னை"



"தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை" என்ற வாக்கிற்கிணங்க வாழ்ந்து காட்டி தனது பிள்ளைகளையும் சிறந்த முறையில் வாழ வைத்து இன்று வானுறையும் தெய்வமாகி விட்ட அன்னை அமரர் பேரம்பலம் மாணிக்கம் மண்ணுலகை விட்டுப் பிரிந்தாலும் எமது நெஞ்சங்களில் நீங்காத இடத்தினைப் பெற்று விட்டார்

மாணிக்கம் அம்மா எங்கு சென்றாலும் தனது நெற்றியில் திருநீற்றைத் திரிபுண்டகமாக அணிந்து செல்வார். அகவை எண்பதைக் கடந்த நிலையிலும் அமரத்துவமடைவதற்கு சில நாட்கள் முன்பாக வாரிவளவு பிள்ளையார் ஆலய தேர்த் திருவிழாவில் அடியழித்து தனது நேர்த்தியை முடித்துக் கொண்டார்

இல்லறத்தை நல்லறமாகக் கொண்டு வாழ்ந்து வந்த அன்னை பேரம்பலம் மாணிக்கம் தன் பிள்ளைகளை நல்ல முறையில் வாழவைத்து அவர்கள் சீரும் சிறப்பும் பெற்று வாழ்வதை கண்டு மகிழ்ந்திருந்தவர்

இறைபக்தியும் தெய்வீக உணர்வும் மிக்க அமரர் மாணிக்கம் வியாவில் ஐயனார் மீது அளவு கடந்த பற்று கொண்டவர். தனது புதல்வர்கள் ஊடாக ஐயனார் தேவஸ்தான திருப்பணி வேலைகளுக்கு பெரும் நிதி கொடுத்து பேருதவி புரிந்தவர்.

"மண்ணிற் பிறந்தவர் பயன் பிறரையும் வாழவைத்தல்" என்பதற்கிணங்க கணவர் மூலமாகவும் பிள்ளைகள் ஊடாகவும் ஆலயங்கள் கல்விச்சாலைகள் மருத்துவமனைகள் மேலோங்க உதவிகள் பல புரிந்தவர்.

இத்தகைய பரோபகாரியாக வாழ்ந்து காட்டிய அன்னையின் ஆத்மா சாந்தி பெற அவர் கூறியபடி பிள்ளைகள் மகிழ்வுடன் வாழ்ந்து அன்னைக்கு ஆத்ம திருப்தியை வழங்கி அவர் பிரிவால் வாடும் குடும்பத்தவர்களது துயரில் நாமும் பங்கு கொண்டு அன்னையின் ஆத்மா சாந்தி பெற பூரணை புட்கலை சமேத ஐயனாரை இறைஞ்சி அமைகிறேன்.

**க. சோமசுந்தரம்**
*ஆலய அறங்காவலர்*

*ஐயனார் தேவஸ்தானம்*
*வியாவில்*
*காரைநகர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி
அன்பே சிவம்

ஓம் ஸ்ரீ விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

" வேழ முகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும் "
" மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம் "
" அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாமே"



# எமது அன்புக்குரிய கல்விக் காருண்யன் அவர்களின் அமரராகிவிட்ட அன்னைக்கு அஞ்சலி

திருமதி பேரம்பலம் மாணிக்கம் (E.S.P)
அன்புக்கோர் அன்னையாய் பண்புக்கோர் இருப்பிடமாய்
ஆசையுடன் அழைத்த அம்மாவே! எங்குற்றாய்
இன்ப வாழ்வை எமக்களித்து உன்னையே அர்ப்பணித்தாயே
ஈசன் திருவடியில் பெற்றிடுக நற் சாந்தி!
நன்மைகள் செய்யவே நாகரத்தினத்தை ஈந்தாய்!
நாளும் உனையே போற்றி வணங்குகின்றோம்!
ஒன்றே தெய்வம் ஒருவனே தேவன் என வாழ்ந்தாய்!
இன்று எமைப்பிரிந்து இறைவனடி சேர்ந்தீரோ!

புண்ணியமே செய்திட்ட பேரம்பலம் மாணிக்கமே!
பூதலத்தார் புகழ்ந்தேத்த புகழேணியில் உயர்ந்தீர்!
கண்ணியமாய் வாழும் கல்விக் காருண்யன் நாகரத்தினத்தின்
கனிவு திகழ் திருமிகு அன்னையே! ஏன் மறைந்தாய்?
எண்ணிலாப் பேரின்ப எழில் வெள்ளத்தில் மூழ்கியே
ஏழைப் பங்காளியாய் என்றும் இனிதாய் இருப்பவரே!
மண்ணிலே நின் புகழ் நல்ல மாண்புடன் திகழுமன்றோ!
மனதார அஞ்சலிக்கிறேன் பெற்றிடுக சாந்தி!

எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய கல்விக் காருண்யன் திரு. E.S.P. நாகரத்தினம் அவர்களது அன்புத் தாயார் இறையடி சேர்ந்ததையிட்டு எமது அஞ்சலியைச் செலுத்துவதுடன் அவரது ஆத்மா சாந்தி பெறவும் அவரை இழந்து தவிக்கும் உயர் திரு நாகரத்தினம் கும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி!

*பிரிவால் வருந்தும்*
*புகழ்வானில் உயர் இடம் வகிக்கும்*
*அன்புத் தெய்வத்தின் நண்பர்*
*"சிவநெறிக் கலாநிதி" கலாபூஷணம்"*
**இராசையா ஸ்ரீதரன்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SEEMATI (PVT) LTD

சீமாட்டி (வரையறுக்கப்பட்ட நிறுவனம்)

129 (122), மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்

TEL : 021 2228564. FAX : 021 2222102


## அமரர் பேரம்பலம் மாணிக்கம் (E.S.P)

யாழ்ப்பாணத்தில் காரைநகர் ஊர் முனிவர்களையும் ஞானிகளையும் கற்றறிந்த அறிஞர்களையும் பிரபலமான வியாபார விற்பன்னர்களையும் கற்றறிந்த சமூகப் பெரியவர்களையும் ஈன்றெடுத்த அற்புதமான கோயில்கள் பாடசாலைகளை தன்னகத்தே கொண்டது.

இவ்வூரிலே மொழி சமய சமூக பண்பாட்டுடன் வாழ்ந்த ஒப்பற்ற குல விளக்கு.

நல்ல மகளாக தாயாக குடும்பத் தலைவியாக துணைவனதும் பிள்ளைகளின் செயற்பாடுகளுக்கு வெற்றிச் செயற்பாட்டாளராக செயற்பட்ட விளக்கு விடிவெள்ளி.

ஒருவர் வாழும் காலத்தில் அவரின் வாழ்க்கை முறை அடுத்தவரும் பின்பற்ற வேண்டிய தேவை உண்டு. அவ்வகையில் சமய சமூக மொழி குடும்பச் செயற்பாடுகளில் மற்றவர்களையும் ஈர்க்கக்கூடிய வகையில் செயற்பட்ட ஒப்பற்ற குடும்ப விளக்கு அமரர் பேரம்பலம் மாணிக்கம்

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வாரிவளவு ஸ்ரீ கற்பக விநாயகர் பாதங்களை பணிந்து நிற்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி !

*சமூக சேவையில்*

**லயன் த.சற்குணராசா J.P.M.J.F.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JAFFNA ASSOCIATION FOR THE VISUALLY HANDICAPPED

**KAITHADI - SRI LANKA**

# யாழ் விழிப்புலனற்றோர் சங்கம் - கைதடி

Reg. No. Then/Dis/01
28, Temple Road,
1st Lane, Jaffna.

பதிவு இல. தென்/அங்./ 01
28, கோயில் வீதி,
முதலாம்ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

BankAccount No. 104-2-001-5-0011261 People's Bank, No. 104, Main Street, Jaffna.
Bank Account No. 8060054235 Commerical Bank, Hospital Road, Jaffna.
T.Phone No. 021 222 7336 Fax No: 021 222 7336 E.Mail: voiceofvis@gmail.com

தொலைபேசி இல. 021 222 7336 தொலை நகல்: 021 222 7336 மின்னஞ்சல்: voiceofvis@gmail.com



Patron
Mrs. Emalda Sugumar
(G.A. Jaffna District)

Rev. Fr. K. J. Jeyakumar
(M.A. in Developmental Studies Jaffna)
(M.A in Sociology Rome)

Mr. Ara. Thirumurugan
(Principal, Skandavarodaya College, Chunnakam)

Justice Committee:
Divisional Secretary,
Chavakachcheri,
Thenmaradchi.

Divisional Secretary,
Jaffna.

Pricipal Nuffield School,
Kaithady.

International Cordinater@
Rev. Fr. T. E. T. Rajan,
Gospel Vision,
London.

Legal Adviser
Mr. A. Atputharaj L.L.B (Hons)
(Out District Coadinater)

President:
Mr. V. Kanagasabai

Vice President
Mr. A. Mahendren

Secretary:
Mr. K.Varatharaja

Vice Secretary:
Mrs. P. Nagulambikai

Treasurer:
Mr. F. Kamiles

Committee Members:
Mr. R. Sivakumaran
Mr. J. Jeyaseelan
Mr. A. Rangadambanathan
Mr. A. Kirishanth


03.08.2012

உரிமையாளர்
திரு. நாகரத்தினம்
கஜமுகன் ஹாட்வெயர்

## துயர் பகிர்கின்றோம்

தங்கள் குடும்பத்தினராகிய தாயாரின் மறைவையிட்டு எமது விழிப்புலனற்ற சங்க அங்கத்தினர் அனைவரும் செய்தியை கேட்டு ஆழ்ந்த கவலையடைந்தோம். அன்னாரின் பிரிவால் துயறிற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து 01.08.2012 நடைபெற்ற எமது சங்க செயற்குழு கூட்டத்திலும் இவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அன்னாரின் ஆத்மா இறைவன் திருப்பாதம் அடைந்து இணையில்லா பேரின்ப முக்தியடைய இறையருள் வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

நன்றி !

இங்ஙனம்

*செயலாளர்*
*யாழ்.விழிப்புலனற்றோர் சங்கம்*
*28 கோயில் வீதி முதலாம் ஒழுங்கை*
*யாழ்ப்பாணம்*

விழி இழந்தோருக்கு வழி காட்டுங்கள்: வெள்ளைப்பிரம்புக்கு மதிப்பளியுங்கள்.
Guide to Visually Handicapped; Respect to White Cane.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# இணுவில் பொதுநூலகம் சனசமூக நிலையம்
# INUVIL PUBLIC LIBRARY COMMUNITY CENTRE

Web: www.inuvilinfo.com 1930 e.mail: inuvil_lib@yahoo.com info@inuvilinfo.com

Prof. K. Thevarajah
Faculty of Management Studies. University of Jaffna.

Mr.S.P.Nadarajah (J.P)
Anna Industries

Patrons

Mr.M.Jeyakanthan
President

Mr.K.Tharshan
Vice. President

Mr.P.Seyon
Secretary

Mr.R.Tharaneevasan
Vice. Secretary

Mr.P.Thevaraj
Treasurer

Mr.B.Sathiyamoorthy
Editor

Mr.S.Harigajan
Mr.G.Sashikumaran
Coordinators

Web:- www.inuvilinfo.com/library

T.P / Fax :- +9421 224 1930

July 28, 2012

இ.ச.பே.நாகரட்ணம்,
கல்விக் காருண்யன்,
பிரபல தொழிலதிபர்,
யாழ்ப்பாணம்.

## இரங்கற் செய்தி

இணுவில் பொதுநூலகத்தின் மீது அன்பும் அக்கறையும் கொண்டுள்ள தங்களுக்கு எமது வணக்கங்களும் நன்றியும் உரித்தாகுக.

தங்களது அன்புத் தயார் இறந்த செய்தி கேட்டு துயரடைந்தோம். அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இத்துயரத்தால் துன்புற்றிருக்கும் தங்களுக்கும் தங்களது குடும்பத்தினருக்கும் எமது நூலக அங்கத்தவர்கள் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

தலைவர்

போசகர்

செயலாளர்

INUVIL PUBLIC LIBRARY COMMUNITY CENTRE INUVIL MANIPAY ROAD, CHUNNAKAM ... Reg. No. ... /C6593

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இறவாப் புகழால் இதயம் நிறைந்தவர்....



காலத்தின் சுழற்சியிலும் நீட்சியிலும் பூமியின் மடியில் அவ்வப்போது சில ஆச்சரியமான நிகழ்வுகள் நடைபெறுகின்றன. பூமித்தாய் தனது பிரசவிப்பால் பெறுதற்கரிய பிள்ளைகளை மாந்தருள் மாணிக்கங்களை தோற்றுவிப்பதும் தனது மடியில் தவழ விடுவதுமான சம்பவங்கள் பல இடையறாது நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. இத்தகைய பெறுதற்கரிய திருமகளாக மாதருக்குள் மாணிக்கமாகப் பிறந்தவர் அமரர் திருமதி. பேரம்பலம் மாணிக்கம் அவர்கள்.

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும்
கருமமே கட்டளைக் கல்"

எனும் பொய்யாமொழியினை நெஞ்சிருத்தினாற் போல் செயற்கரிய செயற்திறனால் பீடும் பெருமையும் மிக்கவராய் விளங்கினார். சிவமணம் கமழும் தெய்வீக ஒளி பொருந்திய தோற்றம் புன்னகை மாறாத கனிவான பேச்சு அமைதியும் சாந்தமும் குடிகொண்டிலங்கும் இனிய முகம் அனைவரையும் அன்போடும் கருனையோடும் அரவணைத்து ஒழுகும் செயற்திறன் ஆகியவை அம்மையாரிடம் எப்போதும் நிலைபெற்றிருந்தன.

அம்மையாரைக் காணும்போது "மாதராய்ப் பிறப்பதற்கே மாதவம் செய்திடல் வேணுமம்மா" எனும் கவிமணியின் வார்த்தைகள் என் மனதில் நிழலாடுவதுண்டு. அத்தகைய மாதவச் செல்வியாக தனது வாழ்வியலை இனிதுற நடாத்தியவர். அனைவரது சுக துக்கங்களிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். "வாடிய பயிரை கண்ட போதெல்லாம் நானும் வாடினேன்" எனும் வள்ளலாரின் வாக்கினை மெய்ப்பிப்பது போல அனைவரிடத்தும் இரங்கும் குணமிக்கவராகவும் கருணை உள்ளம் படைத்தவராகவும் விளங்கினார். வறுமையால் நலிந்தோர்க்கும் வாழ்க்கையில் தளர்ந்தோர்க்கும் தன்னால் இயன்ற பேருதவிகளைத் தாயன்போடு வழங்கினார். இத்தகைய கருமங்களால் அயலவர்களாலும் பிறராலும் பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிவுடன் நேசிக்கப்பட்டவர். வாழ்வியலின் அர்த்தத்தைத் தனது வாழ்க்கையின் மூலம் பதிவு செய்தவர்.

"நிலத்தின் இயல்பு பயிர்க்குளதாகும்" என்பது போல அம்மையாரின் அருங்குணங்களின் அடையாளமாக, அவரின் இயல்பின் வெளிப்பாடாக அவரது பிள்ளைகள் விளங்குகின்றனர். இளமை தொட்டு தன்னலங்கருதாப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பினர்களாக தகை சான்ற பெருங்குணத்தவர்களாக அனைவருக்கும் அள்ளி வழங்கும் புரவலர்களாக இவரது பிள்ளைகள் விளங்குகின்றனர் எனில் அது இவரின் வளர்ப்பின் விளைபேறாகும்.

இந்த வகையில் அம்மையாரின் புதல்வாரன திருவாளர் ஈ.எஸ்.பி. நாகரத்தினம் அவர்கள் எமது கல்லூரியின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் பல்வேறு வழிகளில் தோளாகவே நின்றவர்-நிற்கின்றார். மேலான மனித நேயமும் ஈகைத் திறனும் மிக்க இவரது பேருதவியினை எமது கல்லூரி என்றென்றும் பயன் கொண்டுள்ளது. கல்லூரியில் வருடாந்தம் நிகழும் அனைத்து துடுப்பாட்ட போட்டிகளும் சிறப்புற நடைபெற நிதி வளத்தாலும் பொருள் வளத்தாலும் அனுசரணை செய்து பேருதவி புரிந்துள்ளனர். மேலும் வறிய மாணவர்களின் கல்வி தடையின்றித் தொடரவும் வருடாந்தம் நடைபெறும் பரிசளிப்பு விழாக்கள் சிறப்புற நிகழவும் மாணவர்கள் கற்றல் செயற்பாடுகள் மேம்படவும் எனத் தனது திடம்படு கொடைத்திறனாற் கல்லூரி அன்னையின் உள்ளத்தை குளிர்வித்தவர். இத்தகைய செயற்பாடுகளால் மானிடம் போற்றும் மாண்பினராக பெருமதிப்புக்குரிய திருவாளர் ஈ.எஸ்.பி. நாகரத்தினம் அவர்கள் விளங்குகின்றார் எனில் அது இவரது தாயாரின் அன்புமிக்க வாழ்வியலின் வழிகாட்டல் என்றால் அது மிகையல்ல.

இவ்வாறு போற்றுதற்கரிய மக்கட் செல்வத்தை தரணிக்கு உவந்தளித்து என்றும் அருட்செல்வத்துடனும் பொருட் செல்வத்துடனும் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த அம்மையார் அவர்கள் 25.07.2012 இன்று இவ்வுலக வாழ்வை நீத்து ஈசன் திருக்கழலில் இணையில்லாப் பேரின்ப வாழ்வு அடைந்து விட்டார். அவரது பிரிவுச் செய்தி அறிந்து எமது கல்லூரி சமூகம் ஆழ்ந்த கவலையடைகின்றது.

தோற்றுவதும் மறைவதும் தொல்லியல்பு எனும் வாக்கை கருத்திற் கொண்டு நாம் தேறுதல் அடைவதோடு நமது பெறுதற்கரிய அன்னையை இழந்து துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் அனைத்து உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா நித்தியமாகய் இறைசுகம் பெற எல்லாம் வல்ல ஈசன் கழலை இறைஞ்சுகின்றோம்.

**திரு. அ. அகிலதாஸ்**
*அதிபர்*
*கொக்குவில் இந்துக் கல்லூரி.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JAFFNA CHAMBER OF COMMERCE

## YARL VANEGAR KALAGAM
## யாழ் வணிகர் கழகம்

Regd. No.GA 2601 Under Companies Act No. 7 of 2007

இல. 165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்,
இலங்கை.
தொ. பே. இல. 021 - 222 2367, 8593
021 - 321 1375
தொலைநகல் 021 - 222 2367
மின்னஞ்சல் jaffnacc@sltnet.lk

No. 165, Manipay Road,
Jaffna,
Sri Lanka.
T. P. No. 021 - 222 2367 / 8593
021 - 321 1375
Fax No. 021 - 222 2367
e-mail: jaffnacc@sltnet.lk

Our Ref :

Your Ref :

## பேரம்பலம் மாணிக்கம் (ESP)

காரைநகர் வாரிவளவை பிறந்த இடமாகவும், புகுந்த இடமாகவும் கொண்ட அமரர் பேரம்பலம் மாணிக்கம் பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட காலத்தில் தனது மொழி சமயம் சார்ந்த சமூகப்பண்பாட்டுடன் வாழ்ந்தது மட்டுமல்லாமல் சமய சமூகப்பணிகளில் தனது குடும்பத்துடன் சேர்ந்து பணியாற்றியவர் என்றால் மிகையாகாது.

இவர் எளிமையான தோற்றமும், புன்னகையும் அரும்பிய முகமும், நேர்த்தியான பேச்சும், சுறுசுறுப்பான தன்மையும், அடக்கமான சுபாவமும் கொண்டவர். எல்லோருடனும் இனிமையாகவும் கதைத்து உறவாடுபவர். இவ் உயர்ந்த பண்புகளை தனது குடும்பத்திற்கும் ஊட்டி வளர்த்துள்ளார்.

ஐம்பது ஆண்டுகளிற்கு மேலாக வர்த்தக சமூகத்துடன் அவருடைய கணவர் பிள்ளைகளுடன் சேர்ந்து வர்த்தகர்களுடைய மேம்பாட்டுக்காக உழைத்த பேரம்பலம் மாணிக்கம் அவர்களுடைய இழப்பு எமது வர்த்தக சமூகத்திற்கும் நாட்டிற்கும் அவர்களுடைய உறவினர்களுக்கும் பெரிய இழப்பாகும். என்றும் எங்கள் வரலாற்றில் நிலையாக நின்று என்றும் மாணிக்கமாய் வழிகாட்டுவீர்கள் உங்கள் கனவுகளும், இலட்சியங்களும் நிறைவேற உழைப்பதே எங்கள் எல்லோருடைய கடமையாகும்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்ற பொய்யா மொழிக்கு அமைய இப்பூவுலகில் சிறப்புற வாழ்ந்து இறைபதம் அடைந்துள்ளார். மாயை உடல் அழிந்தாலும் அவரது புகழ் என்றென்றும் மக்களின் மனதிலும், ஆத்மா தெய்வத்தின் பாதங்களிலும் மலர்ந்து கொண்டே இருக்கும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிராத்திக்கின்றேன்.

ஓம் சாந்தி சாந்தி !

**யாழ் வணிகர் கழகம்**

*யாழ்ப்பாணம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்நாள் முழுவதும் வளம் பெருக்கி அறம் வளர்த்த அன்னை
# அமரர் திருமதி மாணிக்கம் பேரம்பலம்



காரைநகரில் அருளாட்சி செய்யும் ஆலயங்கள் நிறைந்த வாரிவளவில் நிகரில்லாப் பெரியராய் வாய்மை, பொறுமை, எளிமை, தாய்மை, தயையுடைமை, ஆகிய பண்புகளில் குன்றாப் பெருந்தகையாய் திருமதி பேரம்பலம் மாணிக்கம் திளைத்தார் என்பது மிகையாகாது.

ஊரார் உற்றார் உறவினர் மற்றவர் என்று வேறுபாடு காட்டாது அனைவருக்கும் வாழ்விலும் தாழ்விலும் துணையாகவிருந்து துன்பங்களைத் துடைத்தவர். அறிவுரைகளை வழங்கி ஊன்றுகோல் போல உதவிகள் பல வழங்கிய அம்மையாரின் இழப்பு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

தமிழ் மக்களின் உன்னதமான விழுமியங்களை வளர்ப்பதற்கும் கல்விச் சாலைகளைக் கட்டிக் காக்கவும் தானத் தர்மங்களைச் செய்யவும் வழிப்படுத்தியது மட்டுமன்றி அடுத்த தலைமுறையினருக்கும் தனது வாழ்க்கையில் தான் கடைப்பிடித்த அரிய பண்புகளைப் படிமானங்களாக பதித்தவர்.

வியாபாரத்துறையில் எவ்வெவ் வகையில் முன்னேற வேண்டும் என்பதை தம்மக்களுக்கு அடிக்கடி அறிவுறுத்தி அறிவோனாக வாழ்வதற்கு அத்திபாரமிட்டவர். சொல்லையும் செயலையும் ஒன்றாக்கி வாழ்ந்து நலம் பெற வேண்டும் என உறுதியுடன் நெறிப்படுத்தியவர். இல்லற வாழ்வை அன்பும் அறமும் உடையவராய் பண்பும் பயனும் உற வாழ்ந்து காட்டியவர். இத்தகைய செல்வங்களை எல்லாம் அமையப் பெற்ற இவ்வம்மையார் ஆடம்பர வாழ்வை வெறுத்தவர் எவருடனும் எளிமையாகப் பழகி உள்ளத்தை கவர்ந்து ஈர்த்தமையால் அவரது இழப்பு கண்களை கண்ணீரால் குளமாக்கியது.

தகைமை பல பெற்ற இத்தாயின் வயிறாகிய குகையில் அவதரித்தவர்களும் தாயைப் போல் பிள்ளை நூலைப்போல் சேலை என்ற மொழிக்கேற்ப வாழ்ந்து வருகின்றனர். அவர்களுள் தொழில் அதிபரும் கல்விக் காருண்ணியரும் பொன்மனச் செம்மலுமாகிய E.S.P. நாகரத்தினம் அவர்களும் தாயின் வழியை அடியொற்றி பொன்டெ..ழியும் புன் சிரிப்பும் நிழலாட நாடு போற்ற உயர்ந்து நிற்கின்றார். நாட்டில் கல்வி அறிவை வளர்க்கவும் பண்பாட்டு விளையாட்டுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைகளையும் கலாச்சார விழுமியங்களையும் போற்றிப் பாதுகாக்கவும் இனம் பேதமின்றி யாவரும் பெருமைபடக் கூடியளவுக்கு போற்றிப் பாதுகாத்து வருகின்றார். என்பதன் ஊடாக மறைந்த அம்மையாரின் பெருமை மகன் மூலம் மகிமைப்படுத்தப்படுகின்றது. கனிவான சிந்தனையுடன் துணிவாக ஆற்றி வரும் பண்புகளால் எமது யாழ் இந்துக் கல்லூரி அன்னையும் மைந்தர்களும் பயன் பல பெற்றனர் பெற்றும் வருகின்றனர். கல்லூரி அன்னையை இதயத்தால் அரவணைக்கக் கூடிய மைந்தர் ஒருவரை அம்மையார் ஈன்றெடுத்து தந்துள்ளார் என்பது கண்கூடு. எமது சமூகம் சாய்ந்து சரிந்து விழுகின்ற வேளையில் முண்டு கொடுத்து நிமிர்த்துகின்ற கரங்களை உருவாக்கிய அன்னை மாணிக்கம் அவர்கள் மரணித்த செய்தி கதிகலங்க வைத்தது புகழ் பட்டம் பதவி பாராட்டுக்களை ஒதுக்கி விலக்கி வாழுகின்ற மைந்தரின் சேவை என்றும் கிடைக்கும் என்று நம்புகின்றேன்.

**வீ. கணேசராசா**

*அதிபர்*

*யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி*

*யாழ்ப்பாணம்*

## வெற்றியின் இரகசியம்

அன்பு காட்டு ஆனால் அடிமையாகிவிடாதே!
இரக்கம் காட்டு ஆனால் ஏமாந்து போகாதே!
பணிவாய் இரு ஆனால் கோழையாய் இராதே!
கண்டிப்பாய் இரு ஆனால் கோபப்படாதே!
சிக்கனமாய் இரு ஆனால் கஞ்சனாய் இராதே!
வீரனாய் இரு ஆனால் போக்கிரியாய் இராதே!
சுருசுருப்பாய் இரு ஆனால் பதட்டப்படாதே!
தர்மம் செய் ஆனால் ஆண்டியாகிவிடாதே!
பொருளைத் தேடு ஆனால் பேராசைப்படாதே!
உழைப்பை நம்பு ஆனால் கடவுளை மறவாதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆல் போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி



வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட அன்னை அமரர் மாணிக்கம் ஒரு பெரு விருட்சமாய் விளங்கியவர். நறுந்தீஞ்சுவைக் கனிகள் நல்கும் நல்மரம் ஒன்று நடு ஊரில் பழுத்து நாற்றிசையின் கண் இருந்து வருவோருக்கும் நறுங்கனிகளை வாரி வழங்குவது போல எவருக்கும் இல்லை என்னாது வாரி வழங்கிய குடும்பம் அவரது குடும்பம்.

காரைமாநகரின் வாரிவளவில் அவதரித்த மாணிக்கம் அம்மா இன்று தலைநகரில் அமரத்துவமாகி "இந்திர விழா" போன்று அவரது இறுதி யாத்திரை அமைந்தமை அவரது பூர்வீக புண்ணிய பயன் மட்டுமன்றி இப்பிறவியில் அம்மையார் ஆற்றி வந்த அறவாழ்வின் பிரதிபலிப்பு என்றே கூறவேண்டும்.

ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரூன்றிய குடும்பம் அம்மையாரின் குடும்பம். பிரபல வர்த்தகர் பேரம்பலத்தை கரம் பிடித்து இல்லறத்தை நல்லறமாக்கி ஈழவளநாட்டின் இரு புரவலராம் கல்விக் காருண்யன் லயன் நாகரத்தினம் கொடை வள்ளல் லயன் கணேசலிங்கம் ஆகிய இரு ஆண் சிங்கங்களையும் ஐந்து பெண்மணிகளையும் பிள்ளைச் செல்வங்களாக பெற்றவர். இருபத்தியிரண்டு பேரப்பிள்ளைகளையும் பதினொரு பூட்டப்பிள்ளைகளையும் கண்டவர் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் பூட்டப் பிள்ளைகளோடு கொஞ்சி மகிழ்ந்து குலாவி வாழ்ந்ததோடு உற்றார் உறவினர் அயலவர்களையும் அரவணைத்து வந்தவர்.

கணவனார் பேரம்பலம் தொழிலதிபராக உறுதுணையாக நின்றவர் கணவனை இழந்த நிலையிலும் தளராது தன் பிள்ளைகளை வாழ்வில் உயர வழிகாட்டியாக நின்றவர். எல்லாப் பிள்ளைகளுக்கும் நல்வாழ்க்கை அமைத்துக் கொடுத்தவர். தன் பிள்ளை போன்று மாற்றான் பிள்ளையையும் நேசிக்கும் நல் மனம் படைத்தவர். அவர் பிரிவு அனைவரையும் ஆழாத சோகத்தில் ஆழ்த்தி விட்டது.

திருமூலர் இலங்கையை சிவபூமி என்றார். எமது நாடு இன்றும் சிவபூமியாக இருப்பதற்கு அம்மாவின் குடும்பமும் காரணமாய் அமைகின்றது. சைவமும் தமிழும் தழைத்த பூமி காரைநகர் என்பார்கள். காரைநகரில் இன்றும் ஆலயங்கள் புதுப் பொலிவு பெற்று சைவம் தழைத்தோங்குவதற்கு உறுதுணையாக இருப்பவர்கள் அன்னையின் புதல்வர்கள் யாழ்ப்பாணத்திலும் சரி தலைநகர் கொழும்பிலும் சரி கல்வித்துறை வளர ஆலயங்கள் செழிப்புற அள்ளி வழங்கும் புரவலராய் விளங்குபவர்கள் அன்னையின் புதல்வர்கள். அவர் குடும்பம் போற்றப்பட வம்சம் விளங்க அவரது புதல்வர்களை போல் பேரமாரும் பூட்டப்பிள்ளைகளும் புகழ்பூத்த தலைவராய் கொடைமனம் கொண்டவராய் வையகம் போற்ற நல்லறம் புரிந்து வாழ வேண்டும். அது கண்டு அன்னையின் ஆத்மா தில்லைக் கூத்தன் திருவடி நிழலில் நிரந்தரமாய் உறைந்திட வேண்டும்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி !


*கல்லூரி வீதி*
*காரைநகர்*


**நடராசா கணேசமூர்த்தி**
*ஆசிரியர் ஊடகவியலாளர்.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மலர்வளையம் செலுத்திய அன்பு நெஞ்சங்கள்...






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Deepest Sympathies*

from : CITY CYCLE STORES COLOMBO

**MAHINDA FLORISTS**
422, Deans Road, Colombo 10. Tel: 2695681
MT. LAVINIA - WATTALA & RATNAPURA.

---

SURIYA CHIMIQUES (PVT) LTD.
Sole Distributors of Suriyalack quality Paints.
Enamel, Emulsion, Wall Filler, Wall Putty & Lacquer Paints
Old Moor Street, Colombo-12.

**Nihal Flora**
No. 430, Deans Road, Colombo 10.
Sri Lanka.

---

SIVAN MOTOR STORES
Manipay Rd,
Jaffna

**Nihal Flora**
No. 430, Deans Road, Colombo 10.
Sri Lanka.

---

*Our Deepest Sympathies* ..........

Lion S. Navanethan MJF
President of Nallur
Lions club

Orel Flora
# 424 Deans Road,
Colombo 10, Sri Lanka.
Tel: 11 7207021

---

*With Deepest Sympathies*

*From :* PRESIDENT AND LION MEMBERS OF NALLUR LIONS CLUB

**CHAMINDA FLORIST**
No. 428, Deans Road, Colombo - 10.
Tel : 2688512

---

*With Deepest Sympathies*

*From :* MANAGER & THE STAFF
THE FINANCE Co PLC
JAFFNA BRANCH.

**CHAMINDA FLORIST**
No. 428, Deans Road, Colombo - 10.
Tel : 2688512

---

*With Deepest Sympathies*

*From :* N. KAMALANESHAN
AUSTRALIA.

**CHAMINDA FLORIST**
No. 428, Deans Road, Colombo - 10.
Tel : 2688512

---

*Deepest Sympathies*

*From :* T. KUMARASAMY TEXTILE
T. KUMARASAMY & SON'S
JAFFNA.

*Tilakshika Florist*
No.440, Deans Road, Colombo 10.
Tel: 0112682140



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Deepest Sympathy
From
ROHITH
NAGARAJAH

**Jayasiri Flora**
Deans Rd, Colombo 10.
Tel: 2682156/ 2673980

---

With Deepest Sympathies from...

Y. K. Kumarasiri &
Chandra Mohan

ජයන්ත ෆ්ලෝරා
*Jayantha Flora*
No. 426, Deans Road, Colombo 13.
TEL : 0112-697275, 0113-169169

---

With Deepest Sympathy
From
SUPUN
GROUP
OF
COMPANY
Camy

SILANI FLORA (PVT) LTD.

---

*With Deepest Sympathies*
From :
N. KAJANUGAN
CANADA.

**CHAMINDA FLORIST**
No. 428, Deans Road, Colombo - 10.
Tel : 2688512

---

*Jayaratne Florists (Pvt) Ltd.*

432, Deans Road, Colombo 10.
Tel: 2695545, 4949459

With Deepest Sympathies
From: Mr. V. Rajan,
M/s. Rajan Umayal (Prt) Ltd.
No. 21. Clock Tower Road.
Jaffna.
M/s. Apollo House.
No. 618 Hospital Road.
Jaffna.

---

*Deepest Sympathies*
From : [illegible]

*Tilakshika Florist*
No.440, Deans Road, Colombo 10
Tel: 0112682140

---

With Deepest Sympathies From :
பெட்டக் பயானர் லிமிடெட்
- A - சிப்பா,

*Rohini Florists*
*& Funeral Undertakers*
274, Galle Road, Dehiwala. Tel : 2715471

---

With Deepest Sympathy


**OUR DEEPEST CONDOLENCE**

PEPSI



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்கின்றோம்



## அமரர் பேரம்பலம் மாணிக்கம் [E.S.P.]

ஈழத் திருநாட்டின் வடபாலமைந்த
காரையம்பதியின் வாரிவளவில்
வந்துதித்த மாணிக்கமே,
பேரம்பலம் என்னும் பெருந்தகையை
[illegible]பிடித்து E.S.P என்னும் மூன்றெழுத்தை
இனிதே வளர்த்து,
மக்கட் செல்வமென்னும் மகத்தான
ஏழு செல்வங்களைப் பெற்று
ஊருக்கு உதவிடவே உத்தமர்களாய்
வளர்த்தெடுத்து பார் போற்ற
பல் தொழில் விற்பன்னர்களாய்
அன்பு மிகு மருமக்கள், ஆனந்தமான பேரமார்,
கனிவான பூட்டப் பிள்ளைகள்,
இன்பமாய் அணைத்தெடுத்து
[illegible] நின் கைகள் எங்கே?
இறைவா உன் நினைவுகள் எம் பொழுதில்
[illegible]ப் போவதுவோ?
உன் ஆத்மா சாந்தியடைய
[illegible] திருப்பாதம்
[illegible]வோமாக,
சாந்தி. சாந்தி. சாந்தி.

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்,
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.


உரிமையாளரும்,
ஊழியர்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

பிரபல வர்த்தகர் (E.S.P) இ.ச.பே. நாகரத்தினம் அவர்களின்
பாசமிகு தாயார்

## திருமதி பேரம்பலம் மாணிக்கம்



அவர்கள் கடந்த 25.07.2012 அன்று மறைந்த செய்தி கேட்டு மிகுந்த துயர் அடைவதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளர்கள்,
பணியாளர்கள்.
கதிர் வேளாண்
A9, கரடிப்போக்குச் சந்தி
கிளிநொச்சி.

# கண்ணீர் அஞ்சலி

எமது மன்ற பணிப்பாளர்சபை அங்கத்தவரும் முன்னணி வர்த்தகரும், சமூகசேவையாளருமான E.S.P. நாகரத்தினம் அவர்களின் அன்புத் தாயார்

திருமதி
## மாணிக்கம் பேரம்பலம்



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நடராஜப் பெருமானை பிராத்திக்கிறோம்.

தலைவர், பணிப்பாளர்சபை,
மன்ற அங்கத்தவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள்
வர்த்தக தொழிற்துறை மன்றம், யாழ்ப்பாணம்.

6/2013(5-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



பிரபல வர்த்தகரும், சைவசமய
அபிமானியுமான
E.S.P நாகரத்தினம்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி மாணிக்கம் பேரம்பலம்
அவர்களின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை
தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

*ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாள் தேவஸ்தானம்*
*கொக்குவில்*

---

## அறம் செய்யும் மைந்தரைப் பெற்ற அன்னைக்கு அஞ்சலி



*திருமதி*
*மாணிக்கம் பேரம்பலம்*

**அவர்களின் பிரிவு குறித்து எமது இதய பூர்வமான கண்ணீர் அஞ்சலி உரித்தாகுக**

*யாழ்ப்பாணம்.*

*தம்பையா - தியாகலிங்கம்*
*வைகுந்தன் களஞ்சியம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
16
02
1932



மறைவு
25
01
2012

திருமதி. பேரம்பலம் மாணிக்கம்(JP)
கொழும்புப் பல்கலைக்கழகத்தின் நண்பன்

கமலரூபனின் அப்பம்மாவின் மறைவையிட்டு

ஆழ்ந்த துயரடைகின்றோம். எமது ஆழ்ந்த

அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின்

ஆத்மா சாந்தி அடைய இறைவனை

பிரார்த்திக்கின்றோம்

நண்பர்கள்
கொழும்புப் பல்கலைக்கழகம்

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் நலன் விரும்பி
திரு. பேரம்பலம் நாகரத்தினம் அவர்களின்
பாசமிகு தாய்

## திருமதி பே. மாணிக்கம்

அவர்களின் பிரிவுத்துயரில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச்சங்கம்,
(சி/1728)(6-7-8) கொக்குவில் இந்துக்கல்லூரி, கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



லயன் நாகரத்தினம் (P.M.J.F)

அவர்களின் தாய்

திருமதி மாணிக்கம் பேரம்பலம்

அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா இறைவன் திருவடி
நிழலில் இளைப்பாற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

[illegible] லயன் மன்றம், சைவ அருள்நிலையம், நல்லூர். (21085) (45.6.7)

# கண்ணீர் அஞ்சலி



எமது மகுத்தாலயத் தலைவர்

திரு. E.S.P.

நாகரத்தினம் அவர்களின்

பாசமிகு அன்னை

திருமதி E.S.P. மாணிக்கம்

அவர்களின் பிரிவின் துயரில்
ஆழ்ந்திருக்கும் அவர்களது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவித்துக்கொள்கின்றோம்.
அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
ஈழத்துசிதம்பர நடராசப்பெருமானையும் மாணிக்கவாசக
நாயனாரையும் பிராத்திக்கின்றோம்.

மாணிக்கவாசகர் மகுத்தாலய அபிவிருத்திச் சபை
ஈழத்துச் சிதம்பரம் (சிவன்கோவில்) காரைநகர்.

(J/1773) (45.6.7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளப்பூர்வமான அஞ்சலிகள்

## திருமதி மாணிக்கம் பேரம்பலம்



எங்கள் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் அபிவிருத்திப் பணிகளுக்குத் தம்மாலான பங்களிப்பினை மனமுவந்து நல்கிவரும் உயர்திரு. பேரம்பலம் நாகரத்தினம் (ஈ.எஸ்.பி) அவர்களின் அருமைத் தாயாரான திருமதி மாணிக்கம் பேரம்பலம் அவர்களின் பிரிவினால் வாடும் அவரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எங்கள் முடிமன்னருடன் கூடிய வித்தக விநாயகப் பெருமானை வேண்டிநிற்கின்றோம்.

*யாழ்ப்பாணம்*
*தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகம்,*
*கோப்பாய்.*

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி பேரம்பலம் மாணிக்கம் (ESP)




அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
அவரது குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து
கொள்வதோடு அன்னாரது ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

செல்லப்பிள்ளையார்
Acro சென்ரர்
புளியம் பொக்கணைச் சந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



## திருமதி பேரம்பலம் மாணிக்கம் (E.S.P)

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

- காரைநகர் வியாவில்
ஐயனார் கோயில் தேவஸ்தானம்

# கண்ணீர் அஞ்சலி



E.S.P. நாகரத்தினம் அவர்களின்
அன்புத் தாய்
*திருமதி*
*பேரம்பலம் மாணிக்கம்*(E.S.P)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*அருண் ஹார்ட்வெயார் அன் மல்ரி ரேடர்,*
*அருண் மோட்டோர்ஸ், பெரிய நாவலடி, கண்டி வீதி, கொடிகாமம்.*

(617631 (3.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



திருமதி மாணிக்கம் பேரம்பலம்

பிரபல வர்த்தகரும்
கொடைவள்ளலுமான E.S.P
நாகரத்தினம் அவர்களது தாயார்
திருமதி மாணிக்கம் பேரம்பலம்
அவர்களது பிரிவுத்துயர் அறிந்து
நாமும் கவலை அடைந்தோம்.
அவரது பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் ஆத்ம
சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

## நன்றி நவில்கின்றோம்



## கண்ணீர் அஞ்சலி



மண்ணில்
16.02.1932

விண்ணில்
25.07.2012

ஊரெங்கும் உலாவி வந்த
உயிர்ப்பறவை ஒன்று ஜகத்தில்
தன் குஞ்சுகளிற்கு ஏணியாக
ஏற்றமுடன் இருந்துவிட்டு
திடீரெனத்தன் குஞ்சுகளைத் தவிக்கவிட்டுச்
சென்றதுவோ - கனவுபோலும்
நம்ப முடியவில்லை, நாம் படும் வேதனையை
வடிக்க இவ் ஜகத்தில் வார்த்தையுமில்லை
அனுஅனுவாய் நிதம் கதிகலங்கித் துடிக்கின்றோம்
ஒரு தூய அன்பின் சகாப்தம் முடிவடைந்துவிட்டதென
பெறுக சாந்தி எல்லாம் வல்ல
இறைவன் பாதார விந்தங்களில்.

அன்னாரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தவருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

அமரர்
**திருமதி பேரம்பலம் மாணிக்கம்**

165, மானிப்பாய் வீதி
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
**வணிகர் கழகம்**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன்
நா.கமலநாதனின்
அன்புப் பேர்த்தியார்
(அப்பம்மா)
திருமதி மாணிக்கம்
பேரம்பலம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

[illegible] சோலை
நண்பர்கள்

(817786) (3.14)

# கண்ணீர் அஞ்சலி



எமது கலாமன்றத்தின் அபிமானியான திரு. E.S.F நாகரத்தினம் அவர்களது அன்புத்தாயார்

*திருமதி. மாணிக்கம் பேரம்பலம்*

அவர்களது மறைவினால் துயரடைந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா எல்லாம் வல்ல ஈழத்துச்சிதம்பர தில்லைக் கூத்தன் திருவடிகள் சேரப்பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*கிழவன்காடு கலாமன்றம்,*
*கனகநகர்.*

(21202) (15-14)

*நிர்வாகசபையினர், ஆசிரியர்,*
*மாணவர்கள், பெற்றோர்கள்*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

பிரபல வர்த்தகர் (E.S.P) இ.சு.பேரம்பலம் அவர்களின் பாசமிகு துணைவி

## திருமதி பேரம்பலம் மாணிக்கம்



அவர்கள் கடந்த 25.07.2012 அன்று
மறைந்த செய்தி கேட்டு மிகுந்த துயர்
அடைவதுடன் அவரின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்
வல்ல ஈழத்துச் சிதம்பரப் பெருமானை
வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி....! ஓம் சாந்தி.....!! ஓம் சாந்தி.....!!!

**உரிமையாளர்களும்,**
**பணியாளர்களும்.**
[illegible],
125, 127, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# துயர் பகிர்கின்றோம்



E.S.P. நாகரத்தினம் அவர்களின்
அன்புத் தாய்

திருமதி

**பேரம்பலம் மாணிக்கம் (E.S.P.)**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம்
யாழ். இந்துக் கல்லூரிச் சமூகம்.

G/1777 (6,7,10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்கின்றோம்



எமது வேம்படி ஸ்ரீ சித்திவிநாயகர்
தேவஸ்தான திருவிழா உபயகாரரும்
சிறந்த அபிமானியும் பற்றாளருமான
இ.ச.பே. நாகரத்தினம் அவர்களின்
அன்புத் தாயார்

**திருமதி மாணிக்கம் பேரம்பலம்**

அவர்களின் பிரிவுத் துயரில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல வேம்படி ஸ்ரீ சித்திவிநாயகரை பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகத்தினர்,
வேம்படி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்
அன்னசத்திர ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(1073) (6,7,10)

# கண்ணீர் அஞ்சலி

தலைசிறந்த சமூக சேவையாளனும், காருண்ய கொடை வள்ளலுமான உயர்திரு. பேரம்பலம் நாகரத்தினம் அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி மாணிக்கம் பேரம்பலம்**



அவர்களின் பிரிவு குறித்து எமது நிறுவனம் தனது இதய அஞ்சலிகளை சமர்ப்பிக்கின்றது. அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஜாவா சிவில் எஞ்ஜினியறிங் கொன்ஸ்ரக்சன்
12, யமுனா வீதி, நல்லூர்.

(2111)(5-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



திருமதி. பேரம்பலம் மாணிக்கம் (E.S.P)
அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரது ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

மணியம் ஸ்ரோஸ்,
A9, வீதி, கொடிகாமம்

(H/1733) (15-14)

# கண்ணீர் அஞ்சலி



எமது ஸ்ரீ துர்க்காதேவி
தேவஸ்தானம், துர்க்காதேவி
மணிமண்டபம் ஆகியவற்றின் சிறந்த
அபிமானியும், பற்றாளருமான
இ.ச.பே.நாகரத்தினம் அவர்களின்
அன்புத் தாய்

**திருமதி**
**மாணிக்கம் பேரம்பலம்**


அவர்களின் பிரிவுத்துயரில் ஆழ்ந்திருக்கும் அவரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
ஸ்ரீ துர்க்காதேவியைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகசபை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

துர்க்காதேவி மணிமண்டபம்
நல்லூர்.

(F/1449) (45.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்ணீர் அஞ்சலி

நல்லூர் லயன்ஸ்கழக சிரேஸ்ட
உறுப்பினரும் சர்வதேச லயன்ஸ் கழக
306 B-1 மாவட்டத் தலைவருமாகிய
லயன் நாகரத்தினம் PMJF அவர்களின்
அன்புத் தாயார்

## திருமதி மாணிக்கம் பேரம்பலம் E.S.P.

(வாரிவளவு காரைநகர்)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவின் துயரில்:

தலைவர் மற்றும் கழக அங்கத்தவர்கள்,
நல்லூர் லயன்ஸ் கழகம்.

(21114) (2.6.7)

# கண்ணீர்க் காணிக்கை



நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தின் தலைவரும்,
யாழகம் விளையாட்டு பொருள்கள் விற்பனை
நிறுவனத்தின் உரிமையாளரும்,
சிறந்த சமூக, சமய சேவையாளருமான

உயர்திரு நா.சோமசுந்தரம்

அவர்களின் அன்பு மாமியாரும்
பிரபல வர்த்தக பிரமுகரும்,
கொடைவள்ளலுமான

உயர்திரு E.S.P. நாகரத்தினம்
அவர்களின் அன்புத் தாயாருமான

அமரர்

## திருமதி மாணிக்கம் பேரம்பலம்

அவர்கள் இறைவனடி சேர்ந்ததனையிட்டு அவர்களின் குடும்பத்துக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய நல்லூர்கந்தனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

* நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தினர்
* நல்லூர் தெற்கு கிராம அபிவிருத்தி சங்கத்தினர்
* நல்லூர் தெற்கு மூத்த பிரஜைகள் சங்கத்தினர்
* நல்லூர் தெற்கு மாதர் அபிவிருத்தி சங்கத்தினர்
* நல்லூர் முருகன் சிறுவர் கழகத்தினர்.

75/2, செட்டித் தெரு,
நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் நலன் விரும்பியும்,
கல்விக்காருண்யருமான திரு.E.S.P நாகரத்தினம்
அவர்களின் அன்புத் தாயார்


திருமதி பேரம்பலம் மாணிக்கம் (E.S.P)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்
யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி.

(T/2065) (9.6.7)

# இதய அஞ்சலி



கல்விக்காருண்யன்
E.S.P.நாகரட்ணம்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி
## பேரம்பலம் மாணிக்கம்

அவர்களின் மறைவுக்கு எமது இதய அஞ்சலியைச் செலுத்தி அன்னாரின் ஆத்மா தில்லைக் கூத்தனின் திருவடிகளில் சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பா.அ.ச., ப.மா.ச.
யா/திருநெல்வேலி இ.த.க.பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



இ.ச.பே.நாகரத்தினம் அவர்களின்
பாசமிகு தாயார்

## திருமதி மாணிக்கம் பேரம்பலம்

அவர்களின் பிரிவில் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,
யா/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், காரைநகர்

(2117)(8 -14)

# கல்விக் காருண்யனின் அன்னைக்கு கண்ணீர்க் காணிக்கை



எமது கல்லூரியின் கல்வி, விளையாட்டுத் துறை
வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றிவரும்
கல்விக்காருண்யன், பொன் மனச் செல்வன்
திரு.ச.எஸ்.பி.நாகரட்ணம் அவர்களின் அன்புத்தாயார்

## திருமதி மாணிக்கம் பேரம்பலம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினரின் ஆறாத்துயரில் நாமும்
பங்கெடுத்து, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறையருள் இறைஞ்சுகிறோம்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

– யாழ். இந்துக்கல்லூரிச் சமூகம் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



E.S.P நாகரத்தினம்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி மாணிக்கம் பேரம்பலம்
அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு
அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம்,*
*வட மாகாண கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம்.*

(21128)15-14)

## வளங்களைக் காத்து வாரி
## வள்ளல் அன்னைக்கு எம்
## இதயம் கனிந்த அஞ்சலி



திருமதி **மாணிக்கம்**
**பேரம்பலம்**
அவர்களின் பிரிவு குறித்து
எமது ஸ்தாபனம் இதய
அஞ்சலிகளை
சமர்ப்பிக்கிறது

*கொழும்பு,*
*யாழ்ப்பாணம்.*

(81757) (15-14)

**S.V.M** *ஸ்தாபனமும்*
*பங்காளரும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



E.S.P. நாகரத்தினம் அவர்களின்
அன்புத் தாய்
திருமதி
**பேரம்பலம் மாணிக்கம்(E.S.P)**
அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(6/1702)(3.14) ஹோம் ரேட்ஸ் மெயின் வீதி, இளவாலை.

## கண்ணீர்க் காணிக்கை



**திருமதி பேரம்பலம் மாணிக்கம்**
(ESP)

தாய்மைக்கு உதாரணமானவளும் ஊரின்
உறவே அறப்பணியில் நிறைவு கண்டீர்
உம் வாழ்வில்
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்கள்.

திரு திருமதி கண்ணன் குடும்பத்தினர்
ஸ்ரீ கண்ணன் ஸ்ரோர்,
திருநெல்வேலி.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் பழைய மாணவரும், நலன் விரும்பியுமாகிய பொன்மனச்செம்மல் பேரம் பலம் நாகரத்தினம் அவர்களின் அன்புத்தாய்

**திருமதி பேரம்பலம் மாணிக்கம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய வண்ணை வெங்கடேசப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/சன்மார்க்க மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்.
(21014)(6-2-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயர் பகிர்கின்றோம்



பேரம்பலம் நாகரத்தினம் அவர்களின்
அன்புத் தாய்

### திருமதி மாணிக்கம் பேரம்பலம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்குகொள்வதுடன், எமது நிறுவனத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

## கண்ணீர் அஞ்சலி



E.S.P. நாகரத்தினத்தின்

### திருமதி பேரம்பலம் மாணிக்கம்

## மங்கையர்க்கரசியின் மனம் நெகிழ் அஞ்சலி



வித்தியாலயத்தின் அயலவனாகி
எத்தினத்திலும் உதவிடும் பகலவனாகி
எம் பள்ளியின் உயர்வுக்கு உரியவனாகிடும்
ESP நாகரத்தினத்தைப் பெற்றெடுத்த
அன்னை

### திருமதி பேரம்பலம் மாணிக்கம்

அவர்களின் ஆத்மா சாந்தியடைய
நல்லைக்கந்தனைப் பிரார்த்தித்து
அஞ்சலி செய்கின்றோம்.

**யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



**பொன்மனச் செம்மல் E.S.P.நாகரட்ணம்**
**அவர்களின் அன்புத் தாயார்**
## திருமதி பேரம்பலம் மாணிக்கம்

அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வலம்புரி
நிர்வாகம்

# கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலய ஆசிரியை
செல்வி ஞானேஸ்வரி திருஞானசம்பந்தர்
அவர்களின் பேர்த்தியும், பாடசாலையின் அபிவிருத்திக்கு
அரும்பணியாற்றுகின்ற
E.S.P. பேரம்பலம்
அவர்களின் அன்புத் தாய்
**திருமதி மாணிக்கம் பேரம்பலம்**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரது குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்
பாடசாலைச் சமூகம். (21016) (45.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தொழிலதிபர் E.S.P நாகரத்தினம்

அவர்களின் அன்புத் தாய்

## திருமதி மாணிக்கம் பேரம்பலம்

அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர நடராஜப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

(அ/1788) பிரதேச செயலகம் உத்தியோகத்தர்களும், பிரதேச செயலகம், காரைநகர்.

# கண்ணீர் அஞ்சலி



பொன்மனச் செம்மல்

## பேரம்பலம் நாகரத்தினம்

அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி பேரம்பலம் மாணிக்கம் (E.S.P)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்

மடாதிபதி, தொண்டர்கள்
பெரியாழ்வார் ஆச்சிரமம்,
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார்சுவாமி கோவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி




எமது தேவஸ்தானத்தின் அபிமானியும் எமது திருப்பணிகளின்
போது சலுகை அடிப்படையில் பொருட்கள் வழங்கி உதவிய
கஜமுகன் ஹாட்வெயர் நிறுவனத்தின் உரிமையாளர்
திரு .பேரம்பலம் நாகரத்தினம் அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி மாணிக்கம் பேரம்பலம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும்
உறவினர்கட்கும் எமது தேவஸ்தானத்தினர் சார்பில் எங்கள்
ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

ஸ்ரீ ஞானசெல்வ விநாயகர் தேவஸ்தானம்
[illegible] வீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

# கண்ணீர் அஞ்சலி



E.S.P நாகரட்ணம் அவர்களின்
அன்புத்தாயார்

## திருமதி மாணிக்கம் பேரம்பலம்

அவர்களது மறைவினால் துயரடைந்திருக்கும்
அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரது
ஆத்மா எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பரதில்லைக்
கூத்தன் திருவடிகள் சேரப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆத்மஜோதி தியான
மணிமண்டபம், ஏழாலை.

நா. முருகையா, ஊரெழு கிழக்கு, சுன்னாகம்.

(21226) (45.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



## திருமதி பேரம்பலம் மாணிக்கம்

(ESP)

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும்
அவரது குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதோடு அன்னாரது ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்
திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,

# எமது ஆழ்ந்த அனுதாபங்கள்!

அன்னை மடியில்
16
02
1932
(காரைநகர்)



அரன் அடியில்
25
07
2012
(கொழும்பு)

காரைநகர் - வாரிவளவு

## திருமதி. பேரம்பலம் மாணிக்கம் அவர்கள்

(11, பெஸ்த்தா பிளேஸ், கொழும்பு-06.)

உயர்குலத்தில் பிறந்து
மக்கட்செல்வம், அருட்செல்வம், பொருட்செல்வத்துடன்
இல்லறத்தில் வாழ்ந்து மறைந்த மூதாட்டியாரின்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
எமது முன்னணியின் அன்பர், ஆதரவாளர்
மகன் திரு. கணேசலிங்கம் உட்பட
அனைத்து உறவுகளுக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து
அம்மையாரின்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர், மாகாண சபை, மாநகர சபை மற்றும்
பிரதேச சபை உறுப்பினர்கள், தினை மக்கள், அகில இலங்கை கண்ணதாசன் மன்றம் சார்பாக

## வேலணை வேணியன்

சிரேஷ்ட உபதலைவர் (ஜனநாயக மக்கள் முன்னணி)
கொழும்பு மாநகரசபை உறுப்பினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் இல்லத்து ஒளிவிளக்காம் இதயத் தெய்வம் E.S.பேரம்பலம் மாணிக்கம் அவர்களின் மரணச் செய்தி கேட்டதும் உடன் அருகிலிருந்து ஒத்தாசை உதவிகள் செய்தோருக்கும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலிருந்தும் தொலைபேசி பத்திரிகை மூலம் அனுதாப செய்திகளை அறிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்ட அமைப்புகளுக்கும், அஞ்சலிப் பதாதைகளைக் காட்சிப்படுத்தியவர்களுக்கும் மரணச் சடங்கில் கலந்து கொண்டு இரங்கல் உரையாற்றியோருக்கும் மரணச்சடங்கில் கலந்து கொண்டோருக்கும் இறுதி ஊர்வலத்தை சிறப்பாக நடத்த உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் மற்றும் அந்தியேட்டி சபீண்டீகரண கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் இவற்றை செய்து முடிக்க உதவிய அனைவருக்கும் மலர்வளையங்கள் வைத்து தமது அனுதாபங்களை எமக்கு தெரிவித்தவர்களுக்கும் இந்நூலை அச்சுப் பதித்த யுனி ஆர்ட்ஸ் அச்சகத்தாருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
**மக்கள் மருமக்கள், பேரப்பிள்ளைகள்**
**பூட்டப்பிள்ளைகள்**

11, பெதெஸ்டா வீதி,
Off டிக்மன்ஸ் வீதி,
கொழும்பு 05
தொ.பேசி : 0112503112
0771106323

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ACKNOWLEDGEMENT

The family members of Late Manikkam Perampalam (E.S.P) wish to express our sincere gratitude and thanks to all our relatives and friends who attended the funeral, called over at our residence, sent message of condolences by Post, Telephone, Telegram, Fax & Email, sent floral tributes, published notices, posters, banners and stood by us. We also wish to extend our thanks to all those who participated in the prayer and Alms Giving.


We wish to thank every individual from our hearts.

**Children, in-laws,**
**Grand Children & Great Grand Children**

*11, Bethesda Place*
*Off Dickman's Road*
*Colombo 05*
*Tel : 0112503112*
*0771106323*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது,
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்!

"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்"

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org